150

உ

ஸ்ரீ இரத்நகிரீசுவரர் துணை.

OFFICE OF THE RE...
22 NOV 1924
MADRAS

# தமிழ்க் கல்வி.

# Tamil Katvi.



இஃது,

...ந்தட்டை, பிருஹ்மஸ்ரீ

...ஸாமி அய்யரால்

...யற்றப்பெற்று,

மதுரை

அ... ...சம் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

[ *Registered Copy Right.* ]

P24
N124
178207

Price 8 Annas.] 1924. [விலை அணா 8.

# Advertisement.

## The Negapatam Steel Trunk Agency,

### 306 West-Masi Street,

### MADURA.

---

*Best Steel Trunks Manufactured by*

*The Negapatam Steel Trunk Co.,*

*Sold at Factory Prices.*

**"Mercedes" Typewriters** [*Approved by the Governmen*

*The Machine with detachable Type-Basket and Carriage.*

"Semper Verum" *brand Type-writer Ribbon*

*Stamp Pads, Inks Etc. Manufactured by*

*The Oldest Type-writer Ribbon Manufacturers*

*on the Continent.*

**For further particulars, apply to the Proprietor:—**

*M. A. Naidu.*

உ

ஸ்ரீ இரத்நகிரீசுவரர் துணை.

OFFICE OF THE ... 22NOV19

# தமிழ்க் கல்வி.

# Tamil Kalvi.



இஃது,

மணத்தட்டை, பிருஹ்மஸ்ரீ

**S. துரைஸாமி அய்யரால்**

இயற்றப்பெற்று,

மதுரை

அஷ்டலக்ஷ்மி விலாசம் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

[ *Registered Copy Right.* ]

Price 8 Annas.] **1924.** [விலை அணா 8.

உ

சுபமஸ்து.

178207

# முன்னுரை.

எனதன்பார்ந்த நண்பர்காள் !

நல்ல விஷயங்களை போதிக்கத்தக்கவல்ல நூற்களின் பெருமையை எவ்வாறு நவிலுவது? அந்நூற்களை இயற்றிய அறிஞர்களின் முன்னிலையிற், கேவலம் சிற்றறிவுற்ற யான் "தமிழ்க் கல்வி" யெனப்பெயர் புனைந்து இந்நூலை யெழுதத்துணிந்தது, அன்னவர்களது அபிமானங்களையும், ஆதரிப்புகளையும், யானடையக் கூடுமென்ற என்மனோ தைரியமும், ஸமரஸநிலையுமேயன்றி வேறன்று. இந்நூலைக் கண்ணுறும், கற்றோர், மற்றோர், சிறுவர்கள், சிறுமியர்கள் முதலிய தனதனவான்கள் எல்லோரும், இதன் விஷயக்கருத்து களனைத்தையும் நுட்பமாகவும், திராசுமுனை பொற்ற நடுவுநிலைமையாகவும் தத்தம் மனதை இறுத்தி, இவ்வுலகத்தின் கண்ணுள்ள தருமார்த்தகாமமோக்ஷமென்ற நான்குவித புருஷார்த்தங்களைத் தவிர்த்து இகபர ஸாதனங்கள் யாவுமில்லை யெனத்தேர்ந்து, தற்காலம் இதுவரை நடையுற்று நிகழும் அநாகரீகமான செய்கைகளையெல்லாம் வைராக்கியமாக அடியோடு தொலைத்து, தத்தம் வருணாசிரமத்திற்குரிய ஆசாராநுஷ்டான நடைகளிவ்வுலகில் இனியேனும் நீடூழிகாலம் தழைத்தோங்கிவளர வேண்டுமென்ற மனத்தூய்மையுற்று, ஒவ்வொருவரும் இதிற்காணும் விஷயங்கள்யாவும், மெய்யுரையாயின் கடைப்பிடித்தும், பொய்யுரையாயின் விடுத்தும், நடைபெறுமாறு, தற்காலம் நடையுற்றதையும், உறுவதையும் விளக்கிக் கூறியதன்பொருட்டு, என்மேலிற் குறைகூறாது, உண்மையை கவனித்து என்னைப் பெருமைப்படுத்தி ஆதரிப்பார்களாக.

இந்நூலைப் படித்ததன் ஸாராம்சமாக எவர்களுக்கு ஜாதிமதாசாராநுஷ்டான மெய்யறிவின் பயனாகிய ஸன்மார்க்க ஞானமுண்டாகவில்லையோ, அவர்களுக்கு நேரில் பரமசிவனே வந்து உபதேசித்தாலும் ஸன்மார்க்க ஞான

முண்டாகவே மாட்டா தென்பது திண்ணம். இந்நூலின் கண்ணுள்ள விஷயக் கருத்துகளெல்லாம், இனிவரும் கற்ப கோடி காலங்களினும் நம்மானிட வகுப்பினரனைவர்களுக் கும் தெவிட்டா மொழிகளைப் புகட்டியூட்டும் நீதிலக்ஷணம மைந்துள்ள நற்போதனைகளே யாகுமென்பதற்கையமின்று. ஜனங்களுடைய உன்னதமான க்ஷேமத்தின்பொருட்டு இயற் றப்பட்ட இந்நூலாசிரியராகிய எனக்கு ஜனங்கள் செய்யக் கூடிய கடமையாதும் கிஞ்சித்துமில்லை. பொதுஜனங்களும் அறிஞர் பெரியோர்களும் நன்குமதிக்கின் அதுவே எனது முயற்சிக்கும், சிரமத்திற்கும், ஓர்பயனாகலாம். இதன்சிறப்பு மறுப்புகளை, இதனைப் படித்தவர்களைக்கொண்டே பேச விடுதது, அவரவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்வதே மேனோக்கமாகும்.

தற்காலத்தி லியற்றப்பட்ட எண்ணிலாப் புஸ்தகங் களிற் சிற்சிலவே மக்களுக்கு ஸன்மார்க்க நடையைப்புகட் டக் கூடியவைகளும்; பற்பலவே, துன்மார்க்கங்களைப்புக ட்டுபவைகளும், அருவருக்கத்தக்க குயுக்திக் கதைகளும், படிப்போர் மனதை அக்ஞானமென்னும் பாழ்குழியிலிறுத்திசிற் றின்பத்திற் றள்ளுபவைகளுமாவன. இந்நூலிற், நன்னடக் கையுற்ற ஆண்பாலர்களேனும் கற்பரசிகளான பெண்பாலர் களேனும் அருவருக்கத்தக்க வசனப்பிரயோகங்கள் கிடை யாவென்பதே தேற்றம். ஒருவாறு என்னையறியாது தப்பித் தவறி யாதேனுமிருப்பின், அவைகளைக்கண்ணுறும் கன தவான்களும், அறிஞர்களும், பெரியோர்களும், நண்பர்களு மாகிய எனதன்பர்கள் அபிப்பிராயபேதங்களாகிய அக்குறை களை வற்புறுத்தி எனக்குத் தெரிவித்தும், தத்தம் அநுக்கி ரகங்களை ஈந்தும், மேன்மேலும் என்னை உத்ஸாஹப்படுத்து வதும் சால்புடைத்து.

   

உ

## காப்புகள்.

### விநாயகர்.

முன்னவனே முன்னின்றான் முடியாத தொன்றுளதோ
அன்னவனின் பாத மடிபணிந்தேன்—இன்பமிக
சங்கதமாந் தமிழ்க்கல்வி தாரணியோர் கொண்டாட
ஐங்கரத்தான் றாளே யரண்.

[ சங்கதம்=தேவர்மொழி (The Language of the Gods) ]

### ஸரஸ்வதி.

வேதன் றிருநாவின் வெண்டாமரைப் போதி
லோது மடியா ருளப்பரப்பில்—நீதிக்
கலையில் வசிப்பாள் கவின்பதத்தை நெஞ்சே
நிலையி னிறுத்து நிதம்.

### குல தெய்வம்.

தேமறைப் பொருட் செப்புகர் யாவரும்
தாமறைத் திடுதன்னிலை காட்டிய
காமறைத்திடு ரத்னகிரீசன்கால்
பூமறைத்திடப் பூச்சொரிந்தேத்துவான்.

### ஷண்முகர்

ஆறு முகமு மருட்பன்னிரு கண்ணும்
ஊறு தடைக்கு முயர்வேலு—மேறு
மயிலுமுளவென்று வாழ்த்துநர்க்கே யுண்டாம்
பயிலும் வளங்கள் பல.

உ

ஸ்ரீ இரத்தினகிரீசுவரர் துணை.



# தமிழ்க் கல்வி.

தமிழ் பாஷையானது நம் தென்தேசங்களிற் பெரும்பாலும் வழங்கப்பட்டு வருவதால் தமிழைப்பற்றிய கல்வியைப் பிரஸ்தாபிக்கலாயது.

கல்வி யென்னும் பதம் கல் என்னும் வினைப்பகுதியினடியாக வந்த தொழிற்பெயராதலினால். வி யென்பது தொழிற் பெயர் விகுதியெனச் சொல்லாமலே யமையும். கல் என்றால் கற்றுக்கொள்ளுதல் எனவும், கல்லுதல் எனவும் பொருள்தரும்.

கற்றுக்கொள்ளுதலென்றால் எதைக்கற்றுக்கொள்ளுதல்? வித்தையை.

கல்லுதலென்றால் எதைக்கல்லுதல்? அக்ஞானத்தை.

இவ்வுலகமும் அதன் வாழ்க்கை நிலைமையும் நடைபெறுவதற்குக் கல்வியாகிய வித்தையே பிரதானமாயிருக்கின்றது. ஆகையால், மானிட ஜன்மமெடுத்த ஒவ்வொருவரும் அவசியங் கற்றுத் தெரிந்து சிறப்புறும் வித்தை எதுவோ அதற்குக் கல்வியென்று பெயர். கல்வியென்னும் வித்தையே மனிதவகுப்பினர்க்கு இன்றியமையாதது.

அதுவே இவ்வுலகானுபவத்தின் பொதுதருமானுஷ்டானங்களை ஒவ்வொருவருக்கும் பக்குவமாக போதிப்பது.

அதுவே மனிதர்களை நல்ல தீர்க்காலோசனை யுள்ளவர்களாகச்செய்ய வல்லது.

அதுவே பரோபகாரச்சிந்தையைப் புகட்டுவது.

அதுவே ஆத்மவுணர்ச்சியில் முன்னேற்றமடையச் செய்வது.

அதுவே ஆயுளுள்ளவரையும் ஜீவனைவிட்டுப் பிரியா திருப்பது.

அதுவே மனத்தினுக்கு உத்ஸாகத்தையும் ஆரோக் கியத்தையுந் தருவது.

அதுவே ஸந்தோஷத்தைக் கொடுப்பது.

அதுவே துக்கநிவிர்த்தி செய்வது.

அதுவே யஃதிற்றம் வாழ்நாட்களை விநியோகிப்பவர் களுக்கு எத்தகைய இகழ்ச்சிக்குமிடந்தராது புகழ்ச்சியா கிய ஸந்தோஷ மநுபவித்தலையே தருவது.

அதுவே தெய்வச்சட்டமாகிய சாஸ்திர விதிமுறை களுக்கு மானிடர்களைக் கட்டுப்படச் செய்வது.

அதுவே மனிதசக்தியில் தெய்வசக்தியைப் புகுத்து வது.

அதுவே கற்றுக்கொள்பவர்களுடைய மனோசக்தியை மேன்மேலுமபிவிருத்திக்குக் கொண்டுவருவது.

அதுவே ஜாதிமதப் பற்றுடையவர்களாகச் செய்வது.

அதுவே அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு வித புருஷார்த்தங்களை அளிப்பது.

அதுவே அக்ஞானத்தைக் களைந்து ஞானத்தைத் தருவது.

அதுவே கற்பகவிருக்ஷத்தை யொப்பவெப்பொருளை யும் அளிக்கும் வல்லமையுடைத்து.

அதுவே ஒரு வீட்டின் அஸ்திவாரம்போல ஜன்ம முள்ளவரையில் நீடித்து நிற்கக்கூடியது.

அதுவே தேசத் பெருஞ்செல்வம்.

அதுவே மனிதர்களுக்குக் கீர்த்தியை எத்திக்குகளிலும் பரவச்செய்வது.

அதுவே மனிதர்களை மனிதர்களாக்குவது. *

கல்வியே தாயைப்போல் ஸம்ரக்ஷிக்கவும், தகப்பனைப்போல் மேன்மேலும் நல்வழியில் நடக்கும்படி தூண்டவும், மனைவியைப்போல் விஸனத்தைப்போக்கடித்து ஸந்தோஷத்தைக் கொடுக்கவும் திறமையுடைத்து.

அதுவே பொருளைச்சம்பாதிப்பதற்குரிய விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், உத்யோகம் முதலியவைகளை நீதியுடன் அபிவிருத்திக்குக்கொண்டுவருவது.

அதுவே மனிதர்களை அடிமைத்தனத்திலாழ்த்தாது தங்கள் தங்களுக்குரிய சுதந்தரங்களைப் பெறச்செய்வது.

அதுவே மனிதர்களை மேலோர் சபையிலுயர்த்துவது.

அதுவே அன்பு, அடக்கம், பொறை, இன்சொல், ஒழுக்கம் முதலிய நற்குணங்களைப்புகட்டுவது.

அதுவே இவ்வுலகத்துள் நிகழும் நன்மைதீமைகளைத் துலக்கமாக விளக்கிப் பரம்பொருளாகிய கடவுளின் உண்மை பெருமையைத் தெரிவிப்பது,

கல்வியின் பயிற்சியே மனத்திடத்துள்ள அஞ்ஞானமாகிய இருளைக்களைந்து ஞானம் என்ற ஒளியாகிய அறிவை விருத்தி பண்ணுவதற்கு ஆதிநூல் போன்றதாகும்.

ஞானமென்றால்,

எது மோக்ஷமடைவதற்கு சாதனமோ,

---

* மனிதர்களை மனிதர்களாக்குவதென்றால், கல்வியறிவில்லார், வடிவில் மனிதர்களாகத் தோற்றப்படினும் மிருகங்களோடு ஒப்பப்படுவார்களென்பதே கருத்தாகும்.

எது அஹங்காரத்தைப் போக்கக்கூடியதோ,
எது ஆத்துமாவைக்காணச்செய்வதோ,
எது பகுத்தறியுந்தன்மையைப் புகட்டக்கூடியதோ,
எது ஸன்மார்க்கத்தை போதிப்பதோ,
எது துன்மார்க்கத்தில் ஆழ்த்தாது தடுப்பதோ,
அதுவே ஞானமென்று சொல்லப்படும்.

ஞானமென்றபதம் அறிவு எனப்பொருள் தந்திடினும் ஞானமென்பது வைதீகவுணர்ச்சியுடன் பேரின்பப்பெருவாழ்வாகிய மோக்ஷநிலையைக்குறித்தும், அறிவென்பது லௌகிகவுணர்ச்சியுடன் உலகத்தோடொப்ப நிற்றலைக் குறித்துமுணற்றும். அறிவு என்பது எல்லாமனிதர்களிடத்தும் இயற்கையாயமையப்பெற்றதும், தங்கள் தங்கள் பூர்வகன்மஜன்மத்தையும், பிரதிபந்தத்தையும் ஒட்டியதான ஓர் குணமாகும். இக்குணமானது எப்பொழுதும் மனத்தோடு சம்பந்தமுடையது. மனம் யாதேனும் ஒரு விஷயத்தைச் சிந்திக்கும்பொழுது இவ்வறிவு எப்பொழுதும் அதற்குற்ற துணையாகவே நிற்கும். இவ்வறிவினாலேயேமனதைத் தீயவழிகளிற்செல்லவொட்டாது விலக்கி நல்வழிகளிற்றிருப்பிக்கொண்டுவரவேண்டும். ஆனால், இவ்வறிவை மாயை * என்ற அக்ஞானமானது மறைத்து, அதன் வளர்ச்சியை தடையுறச்செய்கின்றது.

மாயை என்பதையே அவித்தை எனவும், அறியாமை எனவும், அக்ஞானம் எனவும், மூலப்பிரகிருதி எனவும், பலவிதமாகக் கூறுவார்கள். மாய்க்குந்தன்மையுடையது

---

* மாயையாவது;— [ மா + யா = ஸாமாயா ] யா எது, மா இல்லையோ, அதுவேமாயை. மாயா என்பதும், மாயை என்பதும் ஒன்றேதான்.

மாயை இந்திரஜால வித்தைபோன்றது. இல்லாலதை இருப்பதுபோலத் தோற்றுவிப்பது. மனதைக்கலக்கி பிரமிக்கச்செய்வது. இம்மாயையின் செய்கையே மனத்தின் கண்ணுறுமெவ்விதத் தோற்றங்களுக்குங் காரணமாயது. இம்மாயைக்குட்படாது இவ்வுலகம் நடையுறுவதென்றாலும் ஸாத்தியமன்று. மாயையாவது, சர்வவல்லமையுள்ள கடவுளுக்கு நன்றிகாட்டாது அபசாரங்கள் செய்த ஜீவாத்துமாக்களை அஞ்ஞானத்திற்குட்படுத்தி, கைதிகளாக் கிச்சிறையிலடைத்து, புத்திவரச்செய்வதற்கான ஓர் தெய்வ சக்தியே யாம். இவ்வுலகம் ஜீவாத்துமாக்களின் சுகாநுபவத்திற்கென்றே அமைத்திருப்பதாக எண்ணி, மனம் போனபடி வினைசம்பாதித்துக்கொண்டு பின்னிட்டு வருந்தாமல், பாபாகிதர்களான ஜீவாத்துமாக்களைத் திருத்துவற்காக ஏற்படுத்திய சிறைச்சாலையென்றறிந்து, மானிடஜன்மமெடுத்த ஒவ்வொருவரும் அவ்வித தெய்வச்சக்தியாகிய மாயையினின்று விடுவித்துக்கொள்வதற்கே தம் தம் மனோவிருத்தியை செலுத்தி உழைக்கவேண்டும்.

சுருக்கமாக:—நாம் எந்த இடத்தில் இருந்து கொண்டிருக்கின்றோமோ அதிலிருந்து சுற்றிச்சுற்றி எந்ததிக்கில் நோக்கிடினும் ஆகாயமும் பூமியும் ஒன்று சேர்ந்து ஒன்றோடொன்று கூடியிருப்பதுபோலத் தோற்றுவதை, அவைகளின் சமீபத்தில் போய்ப்பார்த்து வாவிரும்பி எத்திக்குகளிலெவ்வளவுதூரம் சென்றாலும், போகப்போக அவை விலகிப்போவதாகத் தோன்றுகின்றதேயன்றி பிரத்யக்ஷாநுபவத்தில் ஒன்று சேர்ந்திருப்பதாகக் காண்கிலேம். அவ்வாறு ஒன்று சேர்ந்திருக்கு மிடத்தைப்பார்க்க வேண்டுமென்ற ஆசையும் அவ்வாறு காணமுடியாத பிரத்யக்ஷாநுபவமுமே மாயை. இப்மாயின் இலக்ஷணம் விவரமாய்த் தெரிந்து கொள்ளவேண்டியதவசியமேயாயினும் நாம் வாக்கினாலாவது வரிவடிவமான எழுத்துக்களினாலாவது

அறிந்து கொள்ளுந்தரமின்று. இம்மாயைக்குட்படாது மனத்தெளிவுண்டாக வேண்டில், கல்வித்தேர்ச்சியினாலும், அறிவின் மலர்ச்சியினாலும், ஒழுக்கப்பயிற்சியினாலும், உலகாநுபவ சன்மார்க்க முதிர்ச்சியினாலும், நாளாவர்த்தியில் படிப்படியாய் மனதையடக்கி யொடுக்கி நம்வசப்படுத்தவேண்டும். இம்மாயையினாலேயே மனத்தின் கண், பொய், சூது களவு, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலிய தீயகுணங்கள் உண்டாகின்றன. தெளிவுற்றதுஞ் சஞ்சலமற்றதுமான மனதின் பேரறிவினால் மாயையின் அநீதகுணங்களை மனத்துட் செல்லவொட்டாமல் முற்றும் தடுத்தோட்டிவிடலாம். இப்பேரறிவோ கல்வியினாலேயே லபிக்கவேண்டியிருக்கிறது. கல்வியோ இளமையிலிருந்தே கற்கவேண்டியதாய் இருக்கின்றது. இக்காரணம்பற்றியே இளமையிற் கல் என்ற முதுமொழியும் கூறப்பட்டுள்ளது போலும். கல்விப்பயிற்சியினால் நல்லறிவும், நல்லறிவால் நல்நினைப்பும், [அதாவது நல்ல எண்ணமும்] நல்லெண்ணத்தால் நற்செய்கையும், நற்செய்கையால் நற்பழக்கமும், நற்பழக்கத்தால் நற்குணமும், நற்குணத்தால் நற்பெயரும், நற்பெயரால் பெருமையும், பெருமையால் கண்ணியமும், கண்ணியத்தால் சந்தோஷமும், சந்தோஷத்தால் வாழ்க்கைப்பெருக்கையும் அடைகின்றோமென்பது பிரத்தியக்ஷாநுபவம். இத்தகைய நற்றன்மை மனத்துள் படிவதென்றால், இளமையில் சிரமப்பட்டாயினும் நன்றாய்க் கல்விகற்றுப் பற்பல வித்வான்களுடனும், அறிஞர்களுடனும், பாவலர்களுடனும், ஸாதுக்களுடனும், தருமஸபையோர்களுடனுங் கூடி வேதாந்தசாஸ்திர விசாரணையிலுழைத்துப் பரிசீலனை செய்தாலன்றி முடியாத விஷயம். ஆனால், நமது ஆரம்பகல்வியிலேயே இம்மாயையின் இரகஸ்யார்த்த சாஸ்திரதத்துவ விஷயங்களை விரிவாய் தெரிந்துகொள்வதற்கும் போதுமான கல்விவித்யாமுதிர்ச்சி

வேண்டுவததவசியமாதலின் பின்னிட்டு ஸந்தர்ப்பங்களுக்குத்தக்கவாறு விளக்கமாகத்தெரிந்து கொள்வது மனப்பதிவடைவதற்கு இயலுமாகையால், இத்தறியில் மாயையின் விரிவான விளக்கம் நிற்க, ஸங்கற்பித்த அறிவு என்பதன் தன்மை யாதென கவனிப்பாம்.

கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வகிலப் பிரபஞ்சத்தின் கண்ணுள்ள அனேக கோடிக்கணக்கான ஜீவராசிகளுள் அறிவு என்றவோர் அரிய செல்வத்தைப்பெறவுரியவர்கள் மானிடவகுப்பினரேயாவார்கள். இவ்வறிவே மானிடப்பிறவிகளின் மனோவிருத்தியை துன்மார்க்கங்களினின்று விலக்கி சன்மார்க்க நெறியிற்கொண்டுவரும் திறமையுடைத்து. நாமநுபவிக்கும் மனோவின்பங்களெல்லாம் கல்வியினாலுண்டாகிய அறிவின்பயனேயன்றிவேறன்று. இவ்வறிவோ ஏகாந்தத்தி லின்பத்தையும் மனோவிருத்தியில் தெய்வபக்தியையும், ஸம்பாஷணையிற் சிறப்பையும், காரிய நிருவாகத்தில் சாமர்த்தியத்தையும் கொடுக்குஞ்சக்தியுடையது. இவ்வறிவின் மலர்ச்சியினாலேயே இதர ஜனஸமூகங்களுக்கு உபகரிக்கவேண்டுமென்ற நல்லெண்ணமும், ஜீவஜந்துக்களிடத்தில் கருணையென்ற மனவிரக்கமும் ஏற்படுகின்றன.

"தொட்டனைத்தூறு மணற்கேணி
கற்றனைத்தூறு மறிவு"

என நம்முன்னாசிரியர்கூறியுள்ளதையொப்ப, தோண்டத்தோண்ட மணற்கேணியில் ஏராளமான ஜலம் ஊறுவதுபோல, கல்வி கற்கக்கற்கவும் பெருகப்பெருகவும், அறிவு மேன்மேலும் விருத்தியாகும். இவ்வறிவு இயற்கையறிவு, செயற்கையறிவு என இருவகைப்படும். இயற்கையறிவு மனிதர்களுக்குள் தமக்குத்தாமே ஜனனகாலமுதலாரேன்றுவது. செற்கையறிவோ கல்வியினாலும் ஸத்ஸகவாஸத்தினாலும், அறிஞர் சாதுக்கள் முதலியவர்களின் கூட்டு

றவினுலுமுண்டாவது. இஃது மானிடவகுப்பினர்க்கு இன்றியமையாதது. செயற்கையறிவின்றி இயற்கையறிவினுல் மாத்திரம் மனிதர்கள் இஹபரசாதனங்களைப் பெறுவது கஷ்டம். இயற்கையறிவு, ஐயறிவு, பகுத்தறிவு எனவிரு வகைப்படும். ஐயறிவென்பது ஐம்பொறிகள் வழியாக மானிட வகுப்பினரும் விலங்காதிகளுங் கொண்டுளதே யாகும். பகுத்தறிவென்பது, ஐம்பொறிகள் வழியாகவன்றி மனவுணர்ச்சியினுல்மாத்திரம் அறிவது.பகுத்தறிவென்பது சாதாரணப்பகுத்தறிவு என்றும் விசேஷப்பகுத்தறிவு, என்றம் இருவகைப்படும். சாதாரணப்பகுத்தறிவென்பது நெருப்புச்சுடும், வெள்ளமிழுத்துச்செல்லும், பாம்பு விஷமுடையது என்பனவாகிய இயற்கையிலேயே அமைந்துளவென அறிந்துகொளளக்கூடிய தன்மையுடையது.

விசேஷப்பகுத்தறிவென்பது. செய்யத் தக்கதின்னது, இன்னதுசெய்தாலின்னது விளையும் என்பனவாகிய மனவுணர்ச்சியேயாகும். இஃது மனிதர்களிலும் சூக்ஷ்ம அறிவுடையவர்களுக்கே அமைந்துளது.செய்கையறிவு, நூலறிவு, தத்துவவறிவு என இருவகையாம். நூலறிவென்பது. புண்ணிய பாவங்கள், மோக்ஷநரகங்கள், இவைகளின் தன்மை நிலையறிதலும். இச்செயலின் செயலால் விளையும்பயனின்னது, செய்யாவிடில், உறுந்தீங்கின்னது என்பனவாகிய நுட்பங்களை நூல்வாயிலாகத் தெரிந்துகொள்வதேயாகும். தத்துவவறிவென்பது குருவுபதேசத்தாலும் விரதம் தவம் முதலியவைகளை யநுசரித்து நடப்பதேயாகும்.

"பிறப்பென்னும் பேதமை நீங்கச்
சிறப்பென்னுஞ் செம்பொருட் காண்பதறிவு"

என்பதனுலும் நாம் துலக்கமாகத் தெரிந்துகெள்ளலாம். மெய் வாய், கண், மூக்கு, செவி என்னும் பஞ்சேந்திரியங்களுக்குட்பட்டு, வரையறை கடந்து மயங்கும் மன

தின் எண்ணப்படிவிடாது தடுத்து, எப்பொழுதும் நன்மையையேநாடி நடக்கச்செய்யு மியல்பினதுமன்றி, யார் யார் என்னென்ன கூறினும், அச்சொற்களின் பொய்மையை நீக்கி உண்மையை யுணர்த்துவது மிவ்வறிவே யாகும்.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினு
மப்பொருள் மெய்ப்பொருட் காண்பதறிவு"

என ஆன்றோர் கூறியதனுலுந்தெரிந்துகொள்ளலாம். இவ்வுலகமெல்லாந் தம்மாணையை எதிர்பார்த்து நடக்கும்படிக்கான வுன்னதஸ்தானத்திலிருக்கும் அரசர்களும் அறிஞர்கள் சொல்லைத்தலைமேற்கொண்டு போற்றுவாராயின், இவ்வறிவின் பெருமையை அளவிட்டுச் சொல்லுவதுஞ் சாத்தியமாகுமோ? இதையநுஸரித்தே,

"அறிவுடையொருவனை யரசனும்விரும்பும்"

என முதுமொழி. அன்றியும், இவ்வறிவில்லா மக்களைக் கொச்சைமக்களென்றும், அம்மக்களைப்பெறுதலினும் பிள்ளைப்பேறின்றியிருத்தலே நலமென்றும், எல்லாப்பேறுகளினும் அறிவறிந்த மக்கட்பேறே மிகச்சிறந்ததென்றும் ஆன்றோர் கூறியுள்ளார். அடியிற்கண்டிருக்கும்,

"அச்சமுள்ளடக்கி யறிவகத்தில்லாக்
கொச்சைமக்களைப் பெறுதலினக்குடி
எச்சமற் றேமாந்திருத்தல் நன்றே" என்பதும்
"பெறுமவற்றுள் யாமறிவதில்லை
அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற"

என்பதும் அமுத மொழிகளேயாகும். இஃதுமன்றி, எதிர்காலத்தில் நிகழக்கூடிய இன்பதுன்பங்களை முன்னுக்கு

முன்னேயுணர்த்தி, இன்பமெய்திடுமாயின் அவ்வின்பத்தை விரைந்து பெறவும், துன்பம் நேரிடுமாயின் அத்துன்பத்தை வரவொட்டாமற் காக்கவும் உண்டுபண்ணக்கூடிய சக்தி இவ்வறிவிற்கே யுளது.

உலகத்தில் எவ்வித வறுமைகளிலும் என்னுளுந்திருத வறுமை அறிவின்மையேயாம் என்பது திண்ணம். முற்கூறிய இயற்கையறிவு, செயற்கையறிவு என்பவைகளில் இயற்கையறிவு சிறந்ததெனச்சிலரும், செயற்கையறிவு சிறந்ததெனச்சிலருமாக, ஒன்றைவிட்டொன்றை சிறந்ததாகக்கூறிவாதாடல் செல்லாது; ஏனென்றால், இயற்கையறிவுஞ் செயற்கையறிவும் ஒன்றுக்கொன்று சொந்தமாய், உயிருடல்போலவும், கதிரொளி கண்ணொளி போலவும், ஒன்றோடொன்று கலந்து நின்றால்தான் பயனுளதல்லாது வேறில்லை. உயிரின்றேல் உடல்பிணமும், கதிரொளியின்றேல் கண் குருடுமாவதுபோல இயற்கையறிவுஞ் செயற்கையறிவும்பொருந்திநின்றாலன்றிப்பயன்படவேமாட்டாது. ஆகையால், அறிவேமானிடர்க்குத் துணைக்கருவியென்பது தேற்றம். இவ்வறிவு, மனத்தின் கண்ணூறவூற இதுஸரி இதுதப்பென விதிவிலக்காகிய ஒழுக்கம் என்பதை புத்திபூர்வமாயறிந்து சரிவர நடக்குந்திறமையைப் புகட்டும். கல்வியின் பயன் அறிவுண்டாதல்போல அறிவின்பயனே ஒழுக்கமுறையைப்போதிக்கும். ஒழுக்கமென்றால், சாஸ்திர விதிகளில் ஓதப்பட்டவாறு தத்தம் வருணாச்ரமதருமங்களுக்குரியதாய விதித்தன செய்தும், விலக்கியனவொழித்தும் நடத்தலே ஒழுக்கமெனப்படும். விதித்தன செய்தலில் ஒவ்வொருவரும் தத்தமக்கியன்றவரையில் வஞ்சமின்றிச் செய்யவேற்படலாம். ஆனால், விதித்தனசெய்வதில் 'இயன்றவரையில் என்றநியாயம்' விலக்கியன வொழித்தல் விஷயத்தில் செல்லவேசெல்லாது. விலக்கியனவற்றை விலக்

கிடையே தீரவேண்டும். இயன்றவளவு விலக்குவேனென்ற கூறண்டல் சன்மார்க்க நடைக்குப்பொருந்தாது. இவ்விதம் மனோதிடங்கொண்டு சாஸ்திர வுண்மைநிலையினின்று சிறிதும் பிறழாது சன்மார்க்க நடையிலொழுகுவதே ஒழுக்கமாகும். உலகத்தில் பொதுவாக ஒவ்வொருவரும் தத்தமுயிரைவிட சிறந்தபொருள்வேறில்லை யென அனேகர் கருதுவார்களேயன்றி, அவ்வுயிரினுஞ் சிறந்த பொருளொன்றுண்டென்று ஆழ்ந்த கருத்துடன் கவனிப்பார் சிற்சிலரேயாவார்கள். அச்சிறந்த பொருள் ஒழுக்கமே யாகும். எவ்வாறென்றால், உயிரானது தனக்குத்தானே நன்மை பயப்பதில்லை. ஒழுக்கமோ தனக்குத்தானே சகல நன்மைகளையுந் தாவல்லதாகும்.

"ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" என்றும்

"இருளே வுலகத்தியற்கை யிருளகற்றுங்
கைவிளக்கே கற்றவறிவுடைமை—கைவிளக்கி
னெய்யேதன் னெஞ்சத்தருளுடைமை நெய் பயந்த
பால்போ லொழுக்கத் தவரே பரிவில்லா
மேலுலக மெய்துபவர்."

என்னுங்கூறிய ஆன்றோர் வாக்குகளினாற்றெளிவுறலாம். அதினும், முதல் அல்லது மேல்வருணத்தாராகிய பிராமணர்களுக்கு ஒழுக்கமுடைமை மிக்கமிக்க முக்கியமென்பது (வர்த்தமானத்தில் வரவர மறுத்துநடைபெறினும்) எக்காலும் மறுக்கக்கூடாத விஷயமென்பதே துணிபாகும். கல்வி கற்காவிடின் அந்தந்த வருணத்துள்ளவர்களுக்கு படிப்பில்லாமை என்ற சிறிது தாழ்வு மாத்திரம் ஏற்படும். ஒழுக்கந் தவறிலோ வருணாசிரமமே அநியாயமாய் மாறிவிடும். ஒரு பிராமணன் படியாவிடினும், வேதமோதாவிடினும், அவ்வருணத்துக்குரிய ஒழுக்கமுடைமையைக் கைவிடாதிருப்பா

ஞகில், அவன் தன் வருணவியற்கைக்குரிய வேதவித்தான ஸத்பிராமணனே யாகாவிடினும் பிராமண கோஷ்டியினின் றும் விலக்கப்படமாட்டான். மற்றொரு பிராமணன் வேத மோதின ஸத்பிராமணனே யாயினும் ஒழுக்கமுடைமையைக் கைவிடுவானேயாகில், அவனை வேதசாஸ்திர முறைப்படி பிராமண கோஷ்டியினின்றும் விலக்கப்படவேண்டும். விலக் கப்படவேபடுவான் என்பது நிச்சயம். இதைக் கருதியே நமது நாயனாரும்,

" மறப்பினு மோத்துக் கொள்ளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்,,

என வெகு அழகாகக்கூறியுள்ளார். ஒழுக்கமோ நன்னடக் கையைக் கற்பிக்கின்றது; கல்விகற்பதன்கருத்து நன்னடக் கை ஏற்படவேண்டியேயன்றி படித்தோமென்று போலி யாகப் படித்துவிடுகின்றது மாத்திரமன்று. கல்வி, அறிவு, ஒழுக்கம் எனவிம்மூன்றையுங் கைப்பற்றவேண்டியே கல்வி கற்கின்றோம். கல்வியினாலறிவும் அறிவினாலொழுக்கமும் ஒழுக்கத்தினால்நன்னடக்கையும்பழக்கமாகிறபடியால்,கல்வி என்பது, கல்வியறிவொழுக்கமென மூன்று கிளைகளாயின. கற்கக் கற்கக்கல்வியும், அக்கல்வியாராய்ச்சியினால் விசாரிக்க விசாரிக்க அறிவும், அவ்வறிவின் முதிர்ச்சியினால் மனந் தெளியத்தெளிய வொழுக்கமும், அவ்வொழுக்கத்தின் முறைப்படி நடக்கநடக்க நன்னடக்கையும் விருத்தியாகின் றன. இக்கல்வியறிவொழுக்கம் மூன்றும் ஒன்றற்கொன்று காரணகாரிய சம்பந்த முடையனவாம். எவ்வாறெனில், [1] கல்வி கல்லாரிடத்தறிவும், [2] கல்வியுமறிவு மில்லாரிடத் தொழுக்கமும், [3] கல்வியுமறிவு மொழுக்கமுமில்லாரிடத் துச் சிறப்புமாகச் சிற்சிலரைப் பிரத்தியக்ஷமாக காண்கின் றோம். அவ்வாறுற்றவர்களின் சிறப்போ கிஞ்சித்தும் பய னற்றதெனச்சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம். ஏனென்

ஞல், [1] கல்லாற்கண்ணுறுமறிவு, அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்படாததும், பயன்றருமாற்றலில்லாததும்பற்றிச் சிறப்புறுவதில்லை. [2] கல்வியுமறிவுமில்லாரிடத்தொழுக்கம் யாதோவொருவாறு நிகழ்வுறுவதாகத் தோற்றப்படினும் முடிவிற்பிறழ்ச்சியேயுற்று, இடிந்த சுவறுக்கு முட்டுக்கொடுத்தாற்போல நீடித்து நில்லாதுகாலத்தால்மாறுபட்டுப் போதலுறும். [3] கல்வியறிவொழுக்கம் மூன்றுமில்லாரிடத்துச் சிறப்பு, அவர்களிடத்துள்ள பொருளினுலேனும் அல்லது இராஜாங்க அதிகாரத்தினுலேனும் மதிப்புற்றிடினும் அச்சிறப்பு, போலிச்சிறப்பாகுமேயன்றி உண்மைச் சிறப்பாகவேமாட்டாது; அப்போலிச்சிறப்பும் பொருட்கருதியேனும், அதிகாரத்திற் கஞ்சியேனுமாதலினுல், அப்பொருளும் அவ்வதிகாரமும் அவர்களைவிட்டுப் போய்விடில் முன்பொருளைக்கருதி அவர்கள் முன்னிலையில் முகமனுக மதித்தவர்களே, பின்பன்மடங்கு பழித்தலும், அதிகாரத்திற்கஞ்சி அவர்கள் முன்னிலையில் மதிப்புரைகூறியவர்களே பின் பழிப்புரைபகர்தலும் அநுபவக்கண்காக்ஷியாக யாவருமறிவார்கள். ஆகையால், நன்னடக்கையாலுற்ற சிறப்பே மேன்மை தருவதெனை விளங்கலாயிற்று. சாஸ்திரங்களாகிய நூற்களைக்கற்பது நாவின்பழக்கம். நூற்களிற் சொல்லியவைகளை பரிசீலனை செய்துதெளிவது மனத்தின் கண்ணுள்ள அறிவின் பழக்கம். நூற்களிற்கூறியபடி நடப்பது ஒழுக்கத்தின் பழக்கம்

"சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்கம் நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்."

என நம் தமிழ்நாட்டிற் கல்வியிற்சிறந்த பெண்பாலர்களுள் முதன்மைபெற்ற "ஔவையார்" என்ற மாதுசிரோன்மணி

கூறியிருக்கின்றதனாலும் மனந்தெளிவுறலாம். திரி, வெண்ணெ, விளக்கு இவை மூன்றும் ஒன்றுசேர்ந்து பிரகாசிக்குந் தீபமானது எவ்விதம் அம்மூன்றிலொன்று குறைந்தால் பூரணமாகப் பிரகாசிக்கமாட்டாதோ, அவ்விதமே கல்வி, அறிவு, ஒழுக்கம் மூன்றும் பழக்கமிருந்தாலன்றி, கல்வியென்பதன் பயன் பிரகாசமாகச் சிறப்புறுமெனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்கு விளங்குகின்றது.

உதாரணமாக :—

நூற்களைக்கற்றவர்களில் சிலர், அறிவு, ஒழுக்கம், அன்பு, பொறுமை, ஒற்றுமை, பரிசுத்தம், பரோபகாரம், ஜீவகாருண்யம், நீதி முதலியவைகளை முற்றும் அநுஷ்டித்த சற்குண ஸம்பன்னர்களாயிருப்பதை நாம் பிரத்தியக்ஷாநுபவத்திற் காண்கின்றோம். ஆனால் நூற்களைக்கற்றவர்களிற்பலர், கொலை, களவு, கள், காமம், பொய் முதலிய பஞ்சமகாபாதகங்களுக்குந் தலைமையாயிருக்கின்றார்களென்பதையும் நாமே நிதரிசனமாய்ப் பார்க்கின்றோம். இவ்விருதிறத்தார்களுள்ளுமுள்ள குணபேதகங்களுக்குக் காரணம் யாதென்றாலோசிக்குங்கால், முற்கூறிய சற்குண சம்பன்னர்கள் கல்வியறிவொழுக்கம் மூன்றையுங் கைப்பற்றியவர்களெனவும், பிற்கூறிய பஞ்சமகாபாதகர்கள், கல்வியை மாத்திரங்கற்று, அறிவொழுக்கத்தைக் கைவிட்டவர்களெனவும் நிச்சயமாய் துலங்குவதால், இவ்விருதிறத்தார்களுள்ளுங் குணவித்தியாசங்களேற்படலாயின. கல்வியினுங் கற்கவேண்டிய நூற்களை முற்றுங்கல்லாது, அங்கொன்று மிங்கொன்றுமாகப்பார்த்துவிட்டு, வெளிக்குக் கற்றவர்கள், போலத்தோற்றுபவர்கள் கல்லாதவர்களாவார்களேயன்றிக் கற்றவர்களாகார்கள். கற்பதென்றால் நூற்களில் எழுத்துக்களால் வரைந்துள்ளவரிகளை மாத்திரம் கற்பதென்றகருத்தல்ல, கல்வியறிவினால் நூலின்

ஸாராம்சங்களைத் தெள்ளத்தெளியத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகையால்,மானிடர்கள் எப்பாடுபட்டாயினும் அறிவினுக் கூற்றுக்கண்ணுகிய கல்வியை அவசியங்கற்று அறிவைப்பெற்று ஒழுக்கவழியைக் கைப்பற்றுவதே அவரவர்களுடைய கடமையாகும்.

கல்வியறிவில்லாதவர்கள் இவ்வுலகில் கிரகக்ருத்திய, இலௌகிக விவகாரகாரியங்களை சரிவர நடத்தவும், உலக வின்பங்களை யநுபவிக்கவும், அறிஞர் பெரியோர்களிடம் சிறப்புறவும் முடியாது. ஏன்? இவ்வுலகவாழ்க்கைக்குற்ற பொருள்வரவும், அவ்வரவுப்பொருளைப் பாதுகாப்பதும், அதனை விருத்திபண்ணுவதும், அதனை சன்மார்க்கத் திற்செலவு செய்வதும் கற்றறிந்தவர்களால் இயலுமேயன்றி கல்வி யறிவில்லதவர்களுக்கு நிறைவேறுவது மிக்ககஷ்ட மேயாகும். கல்வியறிவில்லாதவர்களிடம் ஒருவாறு பொருள் சேர்ந்திடிலோ, விளையுந் தீங்குகளின்னவையென்றாவது இவ்விதமென்றாவது எடுத்துரைத்தல் அசாத்தியமே. மேலும், நமது சரீரத்திற்கு இரண்டு கண்களும் எவ்வாறு பிரதானமாய் விளங்குகின்றனவோ அவ்வாறே நமக்கு அறிவைப்புகட்டி புத்தியை நல்வழிப்படுத்த கல்வியே நேத்திரமாய் விளங்குகின்றது. புறப்பொருட்க ளெல்லா வற்றையும் அதததனியற்கைத் தன்மைகளைகண்கள் துலக்கிக் காட்டுவதுபோல், கல்வி யறிவானது, நன்மை தீமை, நியாயம் அநியாயம், புண்ணியம் பாவம் முதலிய யாவற் றையும் விளக்கிக்காட்டுங் காரணத்தினலேயே கல்வியைக் கண்ணுக்கு உவமையாகக் கூறலாயிற்று

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகு" மென்றும், "கண்ணுடைய ரென்பர்கற்றோர்" என்றும் ஆன்றோர் கூறியுள்ளார்.

நமது வாழ்நாட்களி லெவ்விதக்கடைமைகளைச் செய்ய நேரிடுமோ அவைகளை யெல்லாம் அணுவிலணுவேனும் பிசகாது சரிவரநடத்து மாறறிவைப்பெறுவதற்கே கல்வி கற்பதின் முக்கிய நோக்கமாகும்.

அறிவுண்டாவதற்குக் கல்வி பிரதானமாயிருப்பது போலப்பொருளுண்டாவதற்கும் அக்கல்வியே முதன்மை யாயிருப்பது. பொருள் என்பது செல்வமெனவும், ஐசுவரிய மெனவும், ஸம்பத்தெனவும் அருத்தந்தரும் பதம். கல்வி, பொருள் இவ்விரண்டையும் முறையே கல்விப் பொருளென வும், செல்வப்பொருளெனவும், அல்லது கல்விச்செல்வ மெனவும், பொருட்செல்வமெனவும் சொல்லலாம். இவ்விரு விதச்செல்வங்களும் உலக வாழ்வினுக் கின்றியமையாதன வாகையால் எவ்விதக் கஷ்டப்பட்டாயினு மிவைகளைப் பெறவேண்டிய பிரயத்தினங்களைச்செய்து கைப்பற்ற வேண்டியதை நன்கு கவனிக்கத்தக்கது. இன்னொரு விசேஷம்:— இவ்விருவிதச் செல்வங்களினும். கல்விச்செல்வ மே பலவாறும் தலைமைவாய்ந்த தெனவும், சிறப்புடைத் தெனவும் பிறர்சுட்டிக்காட்டாமலே யமையும். ஏவ்வாறெ னில், பொருட்செல்வமானது கல்விச்செல்வத்துள்ளடங் கும். அதாவது, கல்வியுள்ளவர்கள் பொருளை சம்பாதிக்க முடியும்; கல்வியோ பொருளுள்ளடங்காது; அதாவது, பொருளுடையோர்கள் பொருட்சிலவு செய்துதான் கல்வி யை சம்பாதிக்கவேண்டுமென்ற நிபந்தனையில்லை. கல்விச் செல்வம் சகல விதச்சிறப்பினுக்கும் ஆதியாயும் தூண்டுகோ லாயுமிருக்கின்றமையால், அஃதே மற்றெவ்விதச் செல்வங் களினும் சிறந்த செல்வமாகும். தவிரவும், இவ்வுலகத்தில் கல்விச்செல்வ முள்ளவர்களையே மேலோர்களென்றும், அறிஞர்களென்றும் சகலரும் கொண்டாடுகின்றார்கள். அஃதற்றவர்களை மூடர்களென்றும், கயவர்களென்றும், தற்குறிகளென்றும் இகழ்கின்றார்கள்.

"ஓதாதார்க் கில்லை உணர்வோடொழுக்கம்" எனக் கல்விச் செல்வத்தைச் சிறப்பித்து ஆன்றோர் முதுமொழி கூறப்பட்டுளது. ஆனால்,

"திரை கடலோடியுந் திரவியந்தேடு" என்றும்,

"பொருடனைப்போற்றிவாழ்" என்றும், பொருட் செல்வத்தையுஞ்சிறப்பித்து முதுமொழிகள் கூறப்பட்டிருப்பதை நன்குய்பரிசிலனை செய்யின், எவ்விதக் கஷ்டப்பட்டாயினும் பொருளையுஞ் சம்பாதிக்கவேண்டுமெனவும், அவ்விதஞ் சம்பாதித்தபொருளை துர்விநியோகஞ் செய்யாது காப்பாற்றி வாழவேண்டுமெனவும் விளங்கலாயிற்று. இதனால், ஒருவன் பொருளை சம்பாதிப்பதற்கும், சம்பாதித்த பொருளைக்காப்பாற்றி வாழ்வதற்கும், பொதுவாக, அறிவு என்ற ஓரரும் பொருள் அவனிடத்துப் பிரகாசிக்கவேண்டுவது ஆவசியத்திலும் அத்தியாவசியமென்றேற்படுகின்றது. அந்த அரும் பொருளாகிய அறிவானது கல்வியறிவே யாகுமென்பதும் முக்காலத்துந் தேற்றம். தவிரவும், கண்ணுக்குக் காணாதவைகளையும் செவிக்குக் கேட்டறியாதவைகளையும் அநுமானத்தினால் ஊகித்தறியும் சக்தியாகிய பேரறிவு மனிதவர்க்கத்தினருக்கே உரித்தென்பதும் மறுக்கக்கூடாத உண்மை. அத்தகைய பேரறிவு எதனாற் பிரகாசிக்கத்தக்கதென்றால், கல்வியறிவினாலென்பதும் நிராக்ஷேபம். செல்வப் பொருளை கவனிப்போமாயின், இவ்வுலகில், பெறுதற்கரியனவாயும், நிலையாமையிற் சிறந்தனவாயுமுள்ள எப்பொருட்களினும் யாக்கை, இளமை, செல்வம் இம்மூன்றுமே தலைமை பெற்றதாகும்; இத்தலைமைபெற்ற மூன்றினுள் நிலையாமையிற் மிக்கக்கியாதிபெற்றது இறுதியாகக்கூறிய செல்வமேயாகுமென்பது நிச்சயம்; எவ்வாறெனில், யாக்கைக்கு ஆயுள் நூறுவயதென்றும், அந்நூறுவயதினுள் இளமைப்பருவம்

முப்பதுவயதென்றும் அறிஞர்கள் ஓர் காலவரையறை நிருணயித்திருக்க, அங்ஙனம் செல்வத்திற்கு ஏதேனும் காலவரையறை ஏற்படுத்தியிருந்ததாகவாவது, இருப்பதாகவாவது பார்த்துமறியோம், கேட்டுமறியோம். நேற்று லக்ஷாதிகாரியாயிருந்த பிரபுக்கள் இன்று பிக்ஷையெடுத்து வயிறுவளர்ப்பதையும் பிரத்தியக்ஷமாகப் பார்க்கின்றோம். பெரும்பாலும், இச்செல்வமென்னும் பொருளானது, ஒருவனிடத்தில் கேவலம் சிலகாலம் அவனைமேன்மைப்படுத்துவது போற்றங்கி யிருந்துவிட்டு, அவனுக்குப் புலப்படாமலே செல்வோம், [இவ்விடம்விட்டு வேறிடம்செல்வோம்] என்றபொருளையுடைத்து, போனவிடந்தெரியாது அவனை விட்டுநீங்கி அவனை துன்பத்திற்காளாக்கிவிட்டு சென்றுவிடுகிறதையும் கண்காக்ஷியாகப்பார்க்கின்றோம். இவ்விதமிருந்தாற்போலிருந்து உடையவனைவிட்டு அகன்றுஒருநாளிருந்த இடத்தில்மறுநாளில்லாது மாறிமாறிச்செல்லும் இயற்கைத் தன்மையுள்ள பொருளிடத்து எப்பொழுதும் விருப்பங் கொள்வதும்,எப்பொருள், அதிசீக்கிரத்தில்விலகுந்தன்மையுடையதோ அப்பொருளிடத்தே அதிகப்பிரியமுண்டாவதும், பின்னுந்துராசைகொண்டு அதை மேன்மேலும் பெறமுயலுவதும் இவ்வுலகத்திற்கெத்தகைய ஸகஜமாயிருக்கின்றன. ஏன்? கல்வியில்லாக் குறைவினாலேயேயென்று அறைந்து சொல்லவேண்டியிருப்பதைத் தவிர்த்து வேறு விதியில்லை. அன்றியும், அவ்விதமாசைகொள்பவர்களுள் பெரும்பான்மையோர், தமதுநெருங்கியபந்துக்களிடத்தும், ஆப்தசினேகிதர்களிடத்தும் வஞ்சனை, பொய், சூது, களவு, கொலை முதலியவை செய்து பொருள் பறிக்கவும், அறிஞர்பெரிஞர்களிடத்து அபசாரப்படவும், இராஜாங்கத்தவர்களிடத்து தண்டனைப்படவும் துணியாதிரார்கள். பல தீயவழிகளிற் பொருட்கிடைக்கப்பெற்ற செல்வவான்கள் எக்கணமும் கொடுங்கோலரசர்களுக்கும் கள்வர்களுக்கும்,

தமது தாயாதிக்காரர்களாகிய பங்காளிகளுக்கும் பயந்துகொண்டே யிருக்கவேண்டி நேரிடுமாதலினால், அவர்கள் உள்ளத்தில் அச்சம் என்பதையும், வெளிக்கு பயிரங்கமாக அபகீர்த்தி, நிந்தை முதலியவைகளையும் பெற்றவராவார்களேயன்றி பொருளைப் பெற்றவர்களாக எண்ணத்தகா. அன்றியும், அவர்களிடத்துப் பெரும்பாலும் தெய்வபக்தி சுத்தசூனியமே. இக்கருத்தைத்தழுவியே,

"செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
வெல்வதே கருமமல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளைவுநோக்கார் மண்ணின்மேல் வாழுமாந்தர்"

என ஆன்றோர் கூறியுள்ளார்.

இன்னும் வர்த்தமானத்தி லிவ்வுலகத்தின்கண்ணுள்ள எத்தனையோ மகாகோடிக்கணக்கான ஜனங்களுள் பெரும் பாலோர் கல்வியறிவின் சுத்தசூனியத்தினால் அக்ஞானாந்த காரத்தில் மூழ்கி, செல்வப்பொருளென்னு மாசைப்பேய் பிடித்து, அதன் வசப்பட்டாடத்தொடுத்து, தேசியக்கல்வி யைக் கடுத்து, பல பாஷைகளிற்படுத்து, சாஸ்திர விரோதமான நடைகளையடுத்து, தத்தம் ஜாதி மதா சாராநுஷ்டானங்களை விடுத்து, பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் நடித்து, பொறாமை, கோபம், களவு, கள், காமம், சூது, பேராசை, முதலிய தீராவறுமை களிற்படுத்து, கேவலம இகழ்ச்சி யடைவதற்குக் காரணம் "செல்வஞ் செல்வம்" என்ற நிலைமையற்ற செல்வப்பொரு ளைப்பற்றியன்றி, "கல்வி" என்ற ஸ்தாபரமான கல்விப் பொருளைப்பற்றியல்லவென்பதும் நிராக்ஷேபம். கல்விப் பொருளின் ஸாரம்சங்களை நன்குணர்ந்தவர்களே செல்வப் பொருளைவிட கல்விப்பொருள் பன்முறையும் சிறந்ததெனக் கருதுவார்கள்; கல்விபயிலாமையினாலுறுந்தீங்கின்னதெனத்

தெரிந்தவர்களிலும் அனேகர், தங்ளன்பிற்குந்தங்களுக்குப் பின் தங்களது சகல சுதந்தரங்களுக்கும் வார்சு பாத்திய முள்ள தங்களருந்தவப் பிள்ளைகளுக்கு, எப்பொருளினுஞ் சிறந்த கல்விப்பொருளைப் பயிற்றுவைக்கமுயலாது திரண்ட செல்வப்பொருளைமாத்திரந் தேடிவைக்கப் பிரயாசைப் படுவது யெத்தகைய மூடத்தனம்.?

"சாலப்பகை யெனக்குத் தந்தைதாயே பலனூ
லேலப்பயிற்று திருந்தனரல்" எனவொருவாலிபனும்,

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு
[மாதரவாக்
கொள்ளிக்கும்பட்டகடனுக்குமென்னைக்குறித்ததலாம்
றுள்ளித்திரிகின்றகாலத்திலே யென்றுடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகியபாதகனே"

என்று மற்றொருசிறுவனும் தங்கள் தாய்தகப்பனை நொந்து அழுதுகொண்டுசெப்பினர்களாம், எனவான்றோர்கள் எத்தனையோ கூறியுள்ளார்கள்.

இவையன்றியும், உலகத்திலெத்தன்மையினும் சிறந்தவர்கள் அரசர்களெனயாவரும் அறிந்தவுண்மை. அரசர்களை யாவரும் தெய்வமாக மதிப்பார்கள். அவ்வரசர்களையும், கற்றோர்களையும் ஒப்பிடுங்கால்,

"மன்னனும்மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன் சிறப்புடையன்—மன்னர்க்குத்
தன்றேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" எனக்கூறியதையுங்

கவனிக்க. செல்வவான்கள் தங்கள் சொந்தநாட்டிலே மாத்திரஞ்சிறப்புறுவார்களாம்; கற்றோர்களுக்கோ சென்ற

இடமெல்லாஞ் சிறப்பாம். எந்நாடுந் தந்நாடாம். எல்லோர்களும் போற்றுவார்களாம். எல்லோர்களுஞ் சிநேகமாவார்களாம். கடவுள் கருணைக்கும் பாத்திரமாவார்களாம். பின்னும், கல்விப்பொருளுக்குஞ் செல்வப்பொருளுக்கும் உள்ள வித்தியாஸத்தை கவனிக்கின்,

கல்வி பொழியுந்தன்மை யுடைத்து.
செல்வம் அழியுந்தன்மை யுடைத்து.

கல்வி புத்தியைக் கொடுக்கும்.
செல்வம் புத்தியைக்கெடுக்கும்.

கல்வி என்றுமழியாத ஆஸ்தியாகும்.
செல்வஞ் சிலநாளில் நாஸ்தியாகும்.

கல்வி அக்ஞானமாகிய பிணிக்குமருந்து.
செல்வம் துன்மார்க்கர்களுக்குவிருந்து.

கல்வி நம்மை ஆபத்தினின்று தப்புவிக்கும்.
செல்வம் நம்மை துஷ்டர்களிடம் ஒப்புவிக்கும்.

கல்வி பிறருக்குக் கொடுக்கக்கொடுக்க நிறையும்.
செல்வம் பிறருக்குக் கொடுக்கக்கொடுக்கக்குறையும்.

கல்வி கள்வர்களால் நிர்ப்பயம்.
செல்வம் கள்வர்களால் ஸபயம். *

கல்வி காவலுக்கு எளிது.
செல்வம் காவலுக்கு வலிது.

கல்வி அறிஞர்களால் உபசரிக்கப்படும்.
செல்வம் வறியவர்களால் அபகரிக்கப்படும்.

---

* ஸபயம் = ஸதா பயம்; எப்பொழுதும் பயம்.

கல்விக்குப் பிரவாகம், தீ, காற்று முதலியவைகளால் [நிராபத்து.

செல்வத்துக்கு மேற்கூறியவைகளாற் ஸதாபத்து.

கல்வி ஜகப்பிரஸித்தம்.
செல்வம் புறதேசங்களிலப்பிரஸித்தம்.

கல்வி காமாதிகளைப்பழிக்கும்
செல்வம் காமாதிகளை யழைக்கும்.

கல்வியினால் மேன்மை யடைந்தவர்கள் கோடாநு [கோடி.
செல்வத்தினாற் றாழ்மையடைந்தவர்கள் அநந்தகோடி.

கல்வியே பொக்கிஷம்.
செல்வமே கொல்விஷம்.

கல்வியே பூஷணம்.
செல்வமே நாசனம்,

கல்வியே மனிதர்களுக்குச் சிறப்பு.
செல்வமே மனிதர்களிடம் பறப்பு.

கல்வியினாற் புத்திக்குப் பெருக்குண்டாகும்.
செல்வத்தினால் புத்திக்குச்செருக்குண்டாகும்.

கல்விப்பெருக்கு கொண்டாடப்படும்.
செல்வச்செருக்கு திண்டாடவிடும்.

"வெள்ளத்தா லழியாது வெந்தணலால் வேகாது வேந்தராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலுநிறைவன்றிக்குறைவுறாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு மிகவெளிது கல்வியென்னு
முள்ளபொரு ளுள்ளிருக்கப் புறம்பாகப் பொருட்டேடியு ழல்கின் [றாரே"

என்றதனால் விளக்கமாவதோடும்,

"களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்" என்பதனாலும்,

"சேற்றிற் பிறந்த கமலம் சிவன்மேலாம்,
சிப்பியின்முத்தம் மணிமுடி மேலாம்,
பூச்சியின் வாயெச்சினூற் பட்டுநூலாம்,
வண்டுண்ட தேன் அபிஷேக யோக்கியமாம்,
பசுமாட்டினிற் கோரோஜனையாம்,
பூனையின் ரேதஸ் * புனுகாம்,
ஈனஜாதி யாயினுங் கல்விமான் ஸபைமேலாம்"

என்பதனாலும்,

"கற்றோர்க்குக் கல்விநலனே கலனல்லால்
மற்றோரணிகலம் வேண்டாவாம்" என்பதனாலும்,

"கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை. கல்வியின்
நுண்ணிய வாய பொருளில்லை கொண்டானின்
துன்னிய கேளிற் பிறரில்லை ஈன்றாளி
னென்ன கடவுளுமில்" என்பதனாலும்,

"ஒருமைக் கட்டான்கற்றகல்வி யொருவர்க்
கெழுமையு மேமாப்புடைத்து' என்பதனாலும்.

"அறம் பொரு ளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவ
லொன்றுற்றொழியுங் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை" என்பதனாலும்,

---

* ரேதஸ்=விந்து.

"கல்வியே செல்வத்தனிலுங் கருந்தன மென்பர் மேலோர்
கல்வியே கண்டமேன்மை கலநல வின்பமூட்டுங்
கல்வியே சென்ற சென்ற கழகத்திற் கீர்த்தியாக்குங்
கல்வியே கற்கவேண்டுங் கசடற வென்னுங்கேளாய்,,

என்றும்,

"இம்மை பயக்குமா லீயக்குறைவின்றால்,
தம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்—தம்
[முயிரோடிருக்க.
எம்மை யுலகத்தும் யாங்காணங் கல்விபோன்
மம்ம* றறுக்கு மருந்து"— என்றும்,

"குலத்திற் பிறந்தவன் கல்லாமை இனறு" என்றும்,

"கல்வியழகே யழகு" என்றும்,

"நாற்பாற்குலத்து மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே" என்றும்'

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" என்றும்,

"ஓதுவதொழியேல்" என்றும்,

"இளமையிற் கல்" என்றும்,

"நூற் பல கல்" எனறும்,

"வித்தை விரும்பு" எனறும்,

"சிறுவர்க்குக்கல்வி சிலையிலெழுத்து" எனறும்

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்" என்றும்

---

* மம்மர் = மயக்கம்,

"மனங்குவிந்துஞான மகிமை யறிந்தவர்க்கு
அனேகங்கண்ணுகுமென் றருளினர் முன்னோர்கள்"

என்றும்,

"கைப்பொரு டன்னின் மெய்ப்பொருட்கல்வி"

என்றும்,

"கற்றோர்பெருமைக் கடலினும் பெரிது" என்றும்,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுகினுங் கற்கை நன்றே" என்றும்

"பாடையேறினு மேடதுகைவிடேல்" என்றும்

"தவலருந்தொல்கேள்வித் தன்மையுடையார் இகலிலர்
எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம்
அகல்வானத் தும்பர் உறைவார்பதி" என்றும்

"சேதிக்கலாந் தர்க்க மார்க்கங்க ளெவ்வெவர் சிந்தனையுஞ்
சோதிக்க லாமுற போதிக்க லாஞ்சொன்னதே துணிந்து
சாதிக்க லாமிகப் பேதிக்க லாமுத்தி தானெய்தலா
மாதிக் கலாபமயில் வல்லிபொற்றாளை யடைந்தவர்க்கே"

என்றும், ஆன்றோர்கள் கல்விப் பொருளைப்பற்றிப் பன்முறையிலுந் தெள்ளத்தெளிய வெகு அழகாய் எடுத்துச் சுட்டிக்காட்டி யிருக்கின்றார்கள். கல்வி கற்பதனால் ஈசுவர பக்தி, விவேகம், நற்குணம், நன்னடக்கை, வணக்கம், மரியாதை முதலியவைகள் தனக்குத்தானே உண்டாகும் என்பது நிச்சயம். பானத்திற்காக வெட்டப்படுகிற குளம் ஸ்நானத்திற்குமுதவுவது போலவும், பழத்திற்காக வைக்கபடும்மரம் நிழலுக்குமுதவுவதுபோலவும், அறிவின் விருத்திக்காகக் கற்குங்கல்வி ஒருவாறு உத்தியோகத்திற்கும் உதவலாமேயன்றி கேவலம் பொருள் சம்பாதிப்பதற்

கென்பது (வர்த்தமானத்தில் இயற்கையாயிருப்பதாயினும்) நியாயவழியிற் பொருந்தாது. ஆனால், தற்காலத்தில் அநேகர் கல்விகற்பது உத்தியோகஞ்செய்து பொருள் சம்பாதிப்பதற்கென்று கருதியே படிக்கின்றார்கள். கல்வி கற்பதன் உண்மை அவ்வாறல்லவே யல்ல. சரீரத்திற்கு ஆகாரம் ஆவசியம் வேண்டுவதுபோல புத்திக்குக் கல்விவேண்டுவது தவசியமேயாகும்.

" செவிக்குணவில்லாதபோழ்து
சிறிது வயிற்றுக்கு மீயப்படும் " எனத்

திருவள்ளுவநாயனாரும் உரைத்துள்ளார். நமது மனமோ அரைக்கணமேனுஞ் சும்மாயிராமல் எதையாயினும் சிந்தித்துக்கொண்டே யிருக்கின்றது. நாம் சும்மாயிருந்தாலும், வேலைசெய்தாலும், நித்திரைசெய்தாலும், நம்மனதிற்கு மாத்திரம்ஓய்வுமில்லை, களைப்புமில்லை, இளைப்புமில்லை, சளைப்புமில்லை; இத்தன்மைய மனதிற்குக் கல்வியென்கிற துணைக்கருவியில்லாவிடில், கரைகடந்த வெள்ளம்போலவும், கட்டுக்கடங்காதமாடுபோலவும், கடிவாளமில்லாக் குதிரைபோலவும் கண்டபடி யோடித்திரியுமென்பதில் எட்டுணையும் ஐயப்பாடின்றாம். எங்காகிலும் ஆயிரத்திலொருவன் கல்விகற்றும் ஜன்மப்பிறவியினாலுற்ற துர்க்குணத்தினால் ஒருவாறு அறிவின்றியிருப்பானேல் அவன் காரணமாக மற்றவர்களும் படிக்கக்கூடாதென்று வாதிப்பது ஞாயமாகாது. சர்க்கரை ஒருவாறு கசந்தால், அது வாயின் குற்றமேயன்றி சர்க்கரையின் குற்றமாகாது. தகப்பன் ஒருவாறுபடியாதமூடனாயிருந்தால், பிள்ளையும் மூடனாயிருந்தே தீரவேண்டுமென்பது விதியா? முறையா? ஸர்வஜீவதயாபரரும், அகிலசரண்யரும், பகவானுமாகிய கடவுளை, கல்வியறிவினாலன்றி மற்றொன்றினாலும்

அறியமுடியாது. பூகோளம், அண்டசாஸ்திரம்முதலியநூற்களைப்படியாவிட்டால் அக்கடவுளுடைய மகிமை, பெருமை, ஸர்வசக்திமுதலிய பிரதாபம் எவ்வாறு விளங்கும்? அவர்மேல் எவ்விதம் பக்தியுண்டாகும்? அக்ஷரரூபமாயிருக்கின்ற தர்மசாஸ்திரங்களின் விதியுக்தமுறைகளையும், நிஷேதங்களையும், படித்தறியாதவர்கள், எவ்வாறு நல்வழியில், நடக்க முடியும்? ஞானசரீரத்தை விருத்திபண்ணுவதற்கு கல்வி எவ்வண்ணம் அவசியமோ, அவ்வண்ணமே ஸ்தூல சரீரத்தை விருத்திபண்ணுவதற்கும் கல்வியே இன்றியமையாதது. கல்வியேபூஷணம்; கல்வியே தனம்; கல்வியே இலக்ஷணம்; கல்வியேகவசம்; கல்வியேசுகம்; கல்வியே பாக்கியம்; கல்வியே சிலாக்கியம்; கல்வியேயோக்கியம்; கல்வியே நினைத்ததெல்லாந்தருஞ் சிந்தாமணி. கல்வியறிவில்லாத புருடனுடனே, மனைவியுடனே கூடிவாழ்வதினும் காட்டு விலங்காதிகளான மிருகங்களோடு கூடிவாழலாம். இம்மானிலத்தின்கண் ஒருவன் தலைமுறை தலைமுறையாகப்பெறும் பாக்கியங்களும், அனுபவிக்கும் இன்பங்களும் கல்வியறிவினாலுண்டாகக் கூடியதேயன்றி மற்றெவ்வாற்றானுமில்லையென்பது துணிபு.

"அறிவுடையா ரெல்லா முடையா
ரறிவிலாரென் னுடைய ரேனுமிலர்"

என்னுங் கூறப்பட்டுளது. இப்பூவுலகின்கண் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அடையக்கூடிய பலவிதச் செல்வங்களுற் றலைமையாயிருப்பது கல்விச் செல்வமென்றே பலவாறும் துலக்கமாகத்தெரியலாயினோம். இன்னமும் எங்கெங்குசுற்றிச் சுற்றிவந்தாலும் ஆங்காங்கு கல்விப் பயிற்சியினாலன்றி நம் முன்னோர்கள் இயற்றியிருக்கின்றநூற்களிற் சொல்லியவையனைத்தும் மெய்யோ பொய்யோவென அவைகளின் ஸாராம்சங்களை ஆராய்ந்து

தெரிந்துகொள்ளக் கல்வியின் உதவியின்றி வேறு எவ்வித மார்க்கமுமில்லை. எவனுக்குக்கல்வியறிவு பிரகாசமாயிருக்கின்றதோ அவனுக்கே உலகில் மரியாதை, கௌரவம் முதலியவை உண்டாவது; தவிரவும், இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துக்களுடனும் பழகவேண்டி நேரிடப்பெற்று பகுத்தறியுந் தன்மையுள்ள மானிடவகுப்பினிற் பிறந்த நாம், அவ்வஸ்துக்கள் நன்மை பயப்பதோ, தீமை பயப்பதோவென அவைகளின் தத்தமியற்கைத்தன்மை குணங்களை நன்றாய் அறிந்து தெரிந்து கொண்டாலன்றி அவைகளிடம் புழங்குவதில் பெரும்பாலும் கெடுதியே சம்பவிப்பது நிச்சயம். உதாரணங்களாக:—

1 கூறிய கத்தியொன்றை உபயோகிப்பவன் அதன் தன்மை இன்னதெனத் தெரியாது உபயோகித்தால், குத்திக்கொண்டு துன்பமடையவேண்டியோ அல்லது சாகவேண்டியோ நேரிடுவது திண்ணம்.

2 தீயின் தன்மையறியாது தொட்டால், அது சுடாமலிருக்கமுடியுமா? சுட்டே தீரும்.

3 விஷத்தின் தன்மையறியாது உட்கொண்டால், அது கொல்லாமல் விடுமா? கொன்றேதீரும்.

4 நன்மைகளைத் தருவனவாயும் சஞ்சீவிக்குச் சமானமாயுமுள்ள அநேகம் பொருள்கள் நமதருகிலிருந்தாலும் அவைகளின் குணங்களை நாம் அறியாததின் காரணங்களாக அவைகளின் நற்பிரயோஜனங்களையும் நாமடையநேரிடாமற் போகுமல்லவா? ஆதலினால், இயற்கையாகவே நாம் கல்விகற்று அறிவை விசாலப்படுத்தி ஒழுக்கமுறைதவறாது நடப்பதே நமது முதற் கடமையாகும்.

முதல் முதல், நமது இளமையில் நாம் பள்ளிக்குப்போவதெதற்காக? கல்வியறிவைப் பெறுவதற்கே. அவ்விதம்பெற்

றதனாலாயபயன், நாம் சர்வவல்லமையுள்ள கடவுளாகிய பரம் பொருளை அறிந்து அவரிடத்தன்புபாராட்டி நல்வழிப்பட வேண்டியேயென்பதும் நிராக்ஷேபம். ஆனால், சிலநாஸ்திக வாதிகள் "கடவுள் கடவுள்" என்று, யாரையோ ஒருவரைப்பற்றி எல்லாமதக் கொள்கையாரும் அடிக்கடி பிரஸ்தாபிக்கின்றார்களே; கடவுளாவது, ஒருவராவது, இருக்கவாவது, எல்லாம்படைக்கவாவது, கல்வியாவது, அறிவாவது, அவ்வறிவினால் அக்கடவுளையறிந்து, அவருக்கன்பு பாராட்டவாவது எனவும், கடவுளென்பவர் யார்? எனவும், அல்லது கடவுளென்பது என்ன? எனவும், பலவாறு வாயில் வந்தபடி பிதற்றுவார்கள். ஆனால், கடவுளெனச் சொல்லப்படுவது ஒரு பெயரேயன்றி வேறன்றாயினும்,

"எந்தசக்தி இவ்வுலகத்தையும் மற்றுமுள்ள உலகங்களையும் ஆளுகின்றதோ"?

"எந்த சக்தி எல்லாவுயிர்களையும் அறிவித்தும், அசைவித்தும் வருகின்றதோ"?

"எந்த சக்தியினால் சூரியமண்டலம் சந்திரமண்டலம் முதலியவை தத்தங் கடமைகளை முறை வழுவாது செய்து வருகின்றனவோ"?

"எந்த சக்தி மனிதர்களுடைய ஊனக்கண்களுக்குப் புலப்படாமல் ஞானக்கண்ணுக்குமாத்திரம் புலப்படுகின்றதோ"?

"எந்த சக்தி அடியார்களுக்கு எளிதாயும் மற்றவர்களுக்கு அரிதாயுமிருக்கின்றதோ"?

"எந்தசக்தி சகல சரீரங்களின் ஹிருதயத்தில் "அஹமஹம்" [நான் நான்] என்று ஸ்மரித்துக்கொண்டிருக்கும் ஞானமாத்திர ஸ்வரூபமான வஸ்துவாயுளதோ?

"எந்தசக்தி சரீரங்களின் அந்தக்கரணத்திலிருந்து கொண்டு பிறரால் உச்சரிக்கப்படும் சப்தங்களை சுரோத்

திரேந்திரியத்தின் வாயிலாய்க்கேட்டுப் புத்தியினால், இது இவன் சப்தம், அது அவன்சப்தம், இது இன்ன சப்தம், அது இன்ன சப்தம் என அறிகின்றதோ? அந்த சக்தியே "கடவுள்" என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றது. அத்தகைய சக்தியை யாவர்கள் அலக்ஷியஞ்செய்து வந்தபோதினும், அச்சக்தியாகிய கடவுள் அவ்வாறு அலக்ஷியஞ்செய்தவர்களையும்மன்னித்து அவர்களிடத் தன்பு பாராட்டியே வருகின்றாரென்பதும் மறுக்கக்கூடாத உண்மை. ஊகித்துகவனிக்க, அச்சக்தியினுடையதிருவருட் கடாக்ஷம் இல்லாவிட்டால் கேவலம் அணுபோன்ற ஒரு அற்ப காரியத்தையாவது செய்துமுடிக்க யாவர்களாலேனு மியலுங்காரியமா? ஒரு சிறுதுரும்பை அசைக்க எவர்களுக் கேனும்சக்தியுண்டா? இவ்வாறிருக்க, நாம் அச்சக்தியாகிய கடவுளை அலக்ஷியஞ்செய்ப யாது காரணம்? சரியான கல்வி யறிவொழுக்கம் நம்மவரிடத்தில்லாமையேயாகும்.

"மண்டப மாதிகண்டோர் மயனுள னென்னல்போலும்
குண்டல முதல்கண்டோர்பொற் கொல்லனுண் டென்னல் [போலும்
ஒண்டுகிற் கண்டோர் நெய்தோ னொருவனுண் டென்னல் [போலும்
அண்டமற் றகண்டஞ் செய்தோ னுளனென வறிவாய் [நெஞ்சே"

என்றுரைத்தவிஞலாய வாராய்ச்சியின்பேரில், அந்நாஸ் திகவாதிகளும் ஆதிபராபரக்கடவுள் ஒருவருளரென மனந்திருந்தித் தெளிவுறுவார்களென்றால், நம்போன்ற ஆஸ்திகவாதிகள் தெளிவுற வைய்ப்பாடின்றாம். பின்னும், அப்பரம்பொருட்பால் நாமடையும் நன்மையோ தீமையோ யாது? அவர்மாட்டெவ்விதம் நாம் நடக்கக்கடவோம்? நாம் யார்? நாம் வசிக்குமிவ்வுலகம்யாது? இவ்வுல

கத்திற்கும் நமக்கும் யாது சம்பந்தம்? இவ்வுலகத்துள்ளார்ந்த காற்று, மழை, இடி, மின்னல், சூரியன், சந்திராதி நவக்கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவை அடிக்கடி இடம் காலம் மாறிமாறி வருவதன் காரணங்களென்ன? அவைகளின்பயனென்ன? சூரியன் சந்திராதிநவக்கிரகங்கள் மாத்திரம் ஏன்கீழே விழுவதில்லை? ஒருகல்லைஉயரவிட்டெறிந்தால், அது ஏன்கீழே விழுகின்றது? மரங்களின் பழங்கள் தானாகவே ஏன்கீழேவிழுகின்றன? பூமியிற் சிற்சில இடங்கள் மண்ணாகவும், சிற் சில களிமண்ணாகவும், சில உவர்மண்ணாகவும், சில மணற்களாகவும், சில சதுப்பு நிலமாகவும், வேறுசிலசுக்கான் கற்களாகவும், மற்றுஞ்சிலகற்பாறைகளாகவும் இருக்கக்காரணங்கள்யாவை? நமதுணவுக்குரிய பொருட்களெவை? அவைகளை எவ்வாறு விருத்திசெய்வது? எவ்விதமுபயோகிப்பது? நாம் என்னிலைமையிலிருந்து எவ்வாறு இவ்விதமாயினோம்? நம்முன்னோர்களின்நிலைமை எவ்வாறுநிகழ்ந்தது? நாமடையும் சுகதுக்கங்களின் முறையும் காரணமும் யாவை? அன்றியும், நாம் வசிக்கும் விசாலமான நாடு செழிக்கவேண்டிச் செய்யும் முறைகள் யாவை? எவ்வெவ்விடங்களில் மலைகள், நதிகள், சமுத்திரங்கள், இருக்கின்றன? அவைஎங்குதொடங்கி எங்கு முடிகின்றன? பூகம்பம், எரிமலை, புயற்காற்று, வால்நக்ஷத்திரங்கள் கிரஹணங்கள் முதலியவைகளின் உற்பத்திக்குக்காரணங்களென்ன? உலோகங்கள் எங்கு எவ்வாறுண்டாகின்றன? என்பவைகளின் விசாரணைகளையும்காரணங்களையும்கல்வியறிவின் மூலம் நாம்தெரிந்துகொள்ள வேண்டியதாவசியமென்றே மேன்மையான கருத்துடன் பள்ளிக்கு அனுப்புவது நமது காருண்ய அரசாங்கத்தாரும் பொது நன்மையைக்கருதி கல்விப் பயிற்சிக்காகவே ஆங்காங்கு கல்விச்சாலைகளாகிய பாடசாலைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இவ்விதங்கற்று, கல்வியறிவிற்றேர்ந்தவர்களே பூர்வீகத்தில்

அரசாங்க உத்தியோகத்திற்பலவாறும் அமர்ந்திருந்தார்கள், தற்காலம் பணவாசை மிகுதியின் காரணத்தினலும் அரசாங்க உத்தியோகத்தின் பிரயோஜனத்தினலும் படிப்பானது வரவரநமதுதேசியபாஷைகளிலிருந்துபற்பலஅன்னிய பாஷைகளிலிழுத்து அழுத்திவிட்டது. ஜீவனோபாயமாக ஜனங்கள் எவ்வாறும் அப்படிப்பையே கொண்டாடிப் பிழைக்கவேண்டியதாயுமிருக்கின்றது. அப்பழிப்பு விஷயங்களையும் அதனலுறும் பொருட்செலவுகளையும், தற்காலம் நாரீகமாகக்கொண்டு நடிக்கும்நடைகளையும், குலமதாசார விலக்கங்களையும், கெடுதிகளையும் விவரித்துத்தெளிவுற இங்கு வரைவதென்றல், மஹாபாரதமாய் விரியுமாதலால், பின் சந்தர்பங்களுக்குத்தக்கவாறு கவனிப்பது உசிதமாகக் கருதி இத்துடன் நிற்க, நமது கோரிய விஷயத்தை கவனிப்பாம்.

ஒரு தேசத்தின் பிற்போக்கானது எப்பொழுதும் எவ்விதத்தும் கல்வியையே எதிர்பார்த்திருக்கின்றது. அதினும் தேசீய பாஷை தெரிந்திருந்தாலன்றி நம் மாணவர்களுக்கு நமது பூர்வீக நாகரீகங்களும், நமது முன்னேர்களின் ஒழுக்கமுறைகளும் புலப்படக்காரணமில்லை.

தேசீயபாஷையே தாய் பாஷை யென்னப்படும் தாய் பாஷையென்றல், தான் எந்த வருக்கத்தில் ஜனித்துத் தன் தாய் தனக்கு எந்தபாஷையைப் புகட்டிப்பழக்கினளோ அந்தபாஷையே தாய்பாஷையாகும். தாய்பாஷையில் நம் சிறுவர்களுக்குத் தம் சுய அறிவு தோன்றியபிறகே, புறபாஷைகளில் அவர்களைப் பிரவேசிக்கச் செய்யவேண்டுமென்பதை மக்களைப்பெற்ற ஒவ்வொருவரும் ஒரு பிடிவாதமாகவும், வைராக்கியமாகவுங்கொண்டு ஒழுகவேண்டுவது ஆவசியமேயாகும்.

நமதுமுன்னோர்கள் நமது இல்வாழ்விலுக்கின்றியமையாப்பல விஷயங்களையும் சுயமே கண்டுபிடித்து, அவைகளை எடுத்துத் திரட்டிக் கோவைசெய்து வைத்திருக்கும் எண்ணிலாவநேக கிரந்தங்கள், நமது அநுபவத்திற்கும் பிரயோஜனத்திற்குமேயன்றி, வேறன்று. அக்காலத்தில் அவர்கள்எத்தனையோ உபாத்தியாயர்களுக்கு ஊழியஞ் செய்து அவர்களிடம் அடிபட்டு மிதிபட்டுக் கற்றகல்வியை நமக்கென்றே எழுதிவைத்துவிட்டுக் காலஞ்சென்றனர். நமதுமுன்னோர்களின் அநுபவத்தை நாமும் நமக்குப்பின் வருபவர்களும் அடையவேண்டுமாயின், எழுத்துக்களாலமைந்துள்ள வரிவடிவமான பாஷைகளினு லறியக்கூடுமேயல்லாது வேறுவிதமாய் அறிந்து தெரிந்துகொள்ள எவ்வித மார்க்கமுமில்லையென்பது துணிபு. இவ்வரிவடிவமாயுள்ள பாஷைகளையே பாடசாலைகளின் உபாத்தியாயர்கள் நமக்குக் கற்றுக்கொடுக்கின்றார்கள். இவ்விதம் படித்துக்கற்றவர்களே அறிவின் இன்பப்பெருக்கையும் அதனால்சகலவித நன்மைப்பயன்களையும் பெறுவார்கள். அறிவுடையவர்களே எக்காலும் இழித்தொழிற்களில் பிரவேசியார்கள். அன்றியும், தம்மைப்பிறர்வஞ்சியாது தமக்குத்தாமே ஜாக்கிரதையாய் பாதுகாத்துக்கொள்வார்கள்.

## தேசீயக் கல்வி.

கல்விகற்பதினும் மானிடப்பிறவிகளுள் ஒவ்வொருவருள்ளும்நிகழும், சுகதுக்கம், கஷ்டநஷ்டம், வறுமைபெருமை, புகழ்ச்சியிகழ்ச்சி, மானவமானம், இன்பதுன்பம் முதலிய மனத்தின்கண்ணுள்ள உணர்ச்சிகளை ஒருவருக்கொருவர் வெளியிடவும், நமது மூதாதைகளின் பெருமையை நம்மினும் நமக்குப்பின் வருபவர்களும் அடையவும் செய்யவல்லது நமது நாட்டின் தேசபாஷையேயல்லாது அந்நிய பாஷையல்ல. அதினும் நம் சென்னை இராஜதானியின்

வடமாகாணங்களிற் சிலவிடங்களிற் றெலுக்கு பாஷையும், சிலதில் கன்னடபாஷையும், வடமேற்கு மாகாணங்களிற் சிலவிடங்களில் இந்துஸ்தானி பாஷையும் சிலதில் மஹாராஷ்டிர பாஷையும், மேலமாகாணங்களில் மலையாள பாஷையும், பங்காளத்தில் பங்காளிபாஷையும், குஜராத்தில் குஜராத்திபாஷையும், ஒரிஸாவில்ஒரிஸாபாஷையும், ஒட்டிர பாஷையும், வடக்கில்சிலசுற்றிடங்களில் மார்வாடிபாஷையும் கிரந்தம் நாகரம் முதலிய வேதபாஷைகளும், தென் மாகாணங்களிற் பெரும்பாலும் தமிழ் பாஷையுமாகியவைகளே அவ்வவ்வ நாடுகளுக்குத் தாய்பாஷை, என்னப்படும். அவ்வவ்வ தாய் பாஷைகளினும் நம் தென்னாடு முழுவதிலும் பெரும்பாலும் தமிழ் பாஷையே பழக்கத்திலும் புழக்கதிலுமிருந்து கொண்டு செழித்து வியாபித்திருப்பதுபற்றி மிக்க மேம்பாடுள்ளதென விளங்கலாயிற்று. அந்தந்ததேசமஹான்கள், பக்தர்கள், ஆசார்யர்கள், யோகிகள், ஞானிகள் முதலியவர்களால் அவ்வவ்வ பாஷைகளில் திருவாய் மலர்ந்தருளிய அவ்வவ்வ சாஸ்திரங்களை ஜனங்கள் அதிபக்தியினயத்துடன் ஆதரித்து இதர ஜனங்களுக்கும் வெளிப்படுத்தி பக்தி, ஞானம், யோகம், கருமம், சுவதந்தரியம் முதலியவைகளை வெளிப்படுத்தி, ஈசுவரவுயர்வு, ஜனனமரண லக்ஷணம், சரீரத்தோற்றம், கடவுளை அறியவேண்டியவழி, மன இந்திரியப்பிராண அடக்கம், உட்புற ஆசாரம், ஆகாயகமன சக்தி, தைரியம், இவைகளை கைப்பற்றி நன்மையன்றித் தீமையென்பது அற்பங்கூட இல்லாமல் பலவிஷயங்களாலும் சீர்திருத்தி யாதொரு இடையூறுகளும் யாருக்குந் தோன்றாமல் சமரசசுபாவத்துடன் வாழ்ந்துவந்தார்களென்பதற்கு, ஸ்ரீராமர், நளன், மாந்தாத, சிபி, சகரன், யயாதி, புரூருவன், பகீரதன், மனு, இக்ஷுவாகு முதலியஆதிகால ராஜாக்கள், பரீக்ஷித்து, விக்கிரமார்க்கன், அசோகன், போஜன் முதலிய மத்தியகால அரசர்கள், காலங்களிலும்

நமது நாட்டை பக்தி, கருமம், ஜீவகாருண்யம் முதலியவை கள் விருத்தியடையச் செய்துவந்ததே சாக்ஷியமாகும்.

ஆகையால், இத்ததியில் பெரும்பான்மையோர்களால் தென்றேசங்களில் வழங்கப்பட்டுவரும் நம் தமிழ் பாஷை யைப் பிரஸ்தாபத்தில் எடுத்துக்கொள்வோம்.

நமது தமிழ்பாஷையானது ஒருகாலத்திலும், ஒருவ ராலும் உண்டாக்கப்பட்டதன்று. ஆனல், ஆதியிற் பரம சிவன் கைலாசபருவதத்தடியிற்றமது இளையகுமாரரும், தற்காலம் கலியுக வரப்பிரஸாதரும் நம் பெருமானுமாகிய ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளுக்கு முதல் முதல் உபதேசித் தருளினர். ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளால் பொதிகாசல வாஸப் பிரஹ்மரிஷியாகிய அகத்திய மகரிஷிக்கும், அவ் வகத்திய ரிஷியால் அவரது சிஷ்யவர்க்க பலரிஷிகளுக்கும் அப்பலரிஷிகளால் அவரவர்களது சிஷ்யர்களுக்கும், அச் சிஷ்யர்களால் இப்பூவுலகத்திற்பலவிடங்களிலும் பற்பலருக் கும் பரவும்படி திருவாய்மலர்ந் தருளப்பட்டதாகும். அவ் விதம் பரவிய தமிழ் நாளாவிருத்தியில்பிரபலமாகி நம்பாத கண்டம் பூராவும் எங்கும் தமிழ்மயமாகி, ஐரோப்பா, அமேரிக்கா, ரோம் அல்லது ரோமாபுரி யென்னும் ரொமேனியா முதலிய மேல்நாடுகளில் பலவிடங்களி லும், பரவி யிருந்ததாகத் தெரிவதுமன்றி, மேற்கூறிய ரொமேனியாவில், பிரபலமான தமிழரசர்களால் தமிழ்பாட சாலைகளேற்படுத்தியதன்பயனுக ஆங்குபலர் அரிய பெரிய பண்டிதகளாயினர்களென்று "புறநானூறு" என்ற சங்க நூலுங் கூறுகின்றது. இவ்விதமாகத் தமிழ்பாஷை நாளா விருத்தியிற் பல பெரிய சித்தர்களாலும், இராஜாக்களாலும் யோகிகளாலும், மகான்களாலும், கையாண்டும், வசனிக்கப் பட்டும், நெடுங்காலமாக அசையாது நிலைபெற்று நின்றதாக வும் தெரிகின்றோம். தமிழ் பாஷையின் சிறப்பை வகைய

றுத்துக் கூறுவதெனின் இயலாதாகையால் இயன்றவரை தெரிவிப்பாம்.

முதல் முதல், தமிழ் என்றால், இனிமை யெனப் பொருட்படுத்தியுள்ளார் மேலோர். இனிமை யென்றால், தித்திப்பு என்றுபொருளாகுமென யாவரும் அறிந்ததே.

ஆகையால், தமிழானது மொழிக்குமொழி தித்திக் குந்தன்மையுடைத்து என்பது சொல்லாமலே யமையும். அன்றியும், பாஷிற்கினியது தமிழேயாகுமென்பார் ஆன்றோர். ஏன்? தமிழ்பாஷை யொன்றுமாத்திரம் நாவினியற் கையின்படியே இலக்கணமுடையது. மற்றைய பாஷைக ளெல்லாம் அவைகளின் அமைதிக்கேற்றவாறே இலக்கண முடையனவாம். தவிரவும்,

"இலகணமேனுந் தமிழ்நூற்கற்க" என்பதனாற் தமிழ் சிறந்த தெனவாயிற்று. நம் தமிழ்பாஷையானது அகஸ்தியரிஷிக்கு முன்னும், வியாஸர் வேதங்களை வகுப் பதற்கு முன்னுமே இருந்ததென, நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். 17-வது யுகப்பிரளயத்துக்கு முந்தியே அதாவது, முற்கூறியவாறு வேதப்பகுப்பாட்டுக்குமுன்னம் தமிழ் உள்ளதென் சித்தர் நூலுங்கூறுகின்றது. மேலும்,

"கொன்றைச் சடையார்க்கொன்றைத் தெரியல்
கொஞ்சித் தமிழாற் பகர்வோனே" என்பதனாலும்,

"ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே"

என்பதனாலும் கடவுள்மொழி தமிழ்மொழி என்பதாயிற்று. முதல் முதல், ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளால் அகத்தியர் காவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, சங்கப் புலவர்கள் வாயிலே சஞ்சரித்து, வித்துவான்கள் வாக்கி னில் விளையாடி, நம்திராவிட தேசமுழுதும் ஏகசக்ராதி

பத்தியம் செலுத்தி வந்த தமிழ்பாஷையாகிய தாய்பாஷையை இப்பொழுது நாம் எவ்வாறும் நிராதரிக்கலாகுமோ ?

நம்மைப் பெற்றதுந் தமிழ்; வளர்த்ததும் தமிழ்; தாலாட்டித் தூங்கவைத்ததும் தமிழ்; நம்மழலைச்சொற்களால் நமது தாய் தந்தையரைச்சந்தோஷிக்கச்செய்ததும் தமிழ்; நாம் குழந்தைப்பருவத்தில் பேசத்துவக்கினபொழுது முதல் முதல் உச்சரித்ததும் தமிழ்; நம் தாய்தந்தை குரு முதலியவர்கள் ஆரம்பத்தில் நமக்குபதேசித்ததும் தமிழ்; ஆதிகாலந் தொடங்கி நம்முன்னோர்கள் சம்பாஷித்து வந்ததும் தமிழ்; அவர்கள் நமக்கென்று எழுதிவைத்த பாஷையும் தமிழ்; தற்காலம் நம் மாதா, பிதா, ஸகோதரர், சகோதரிகள், பந்துஜனங்கள், இஷ்டர்கள் முதலிய நம்மினரெல்லோரும் பேசுவதும் தமிழ்; நமது வீட்டுபாஷையுந் தமிழ்;ஏட்டுபாஷையும்தமிழ்; சீட்டுபாஷையும் தமிழ்? நாட்டுபாஷையும் தமிழ்; கோட்டுபாஷையும் தமிழ்; பாட்டுபாஷையும் தமிழ்; வீட்டுபாஷையும் தமிழ். மேலும், நமது அரியகிரந்தங்களான நான்குவேதங்களும், ஆறுசாஸ்த்திரங்களும், பதினெண் புராணங்களும் அறுபத்திநான்கு கலைக்ஞானங்களும், பின்னும், எண்ணிக்கையிலடங்கா சாஸ்திரக் கிரந்தங்களும் நமது தேசபாஷைகளில் இயற்றியருளப்பட்டிருக்கின்றனவேயன்றி, வேறு அந்நியபாஷைகளிற் (தற்காலம் தர்ஜமாப்பண்ணித்தயாரித்திருக்கப்பட்டாலன்றி) இல்லையென நிச்சயமாய் சொல்லலாம். நம்முன்னோர்கள் நமக்கென்று வெகுபாடுபட்டு ஓலையோலையாகவும் சுவடிசுவடியாகவும்எழுதிவைத்த சாஸ்திரக் கிரந்தங்களெல்லாம் வாவரபபழுதுபட்டுக் கரையான்களாலும், செல்லுப்பூச்சிகளாலும், பாச்சான்களாலும் அரிக்கப்பட்டு, இருந்தவிடம் தெரியாமற் போகின்றனவே. அச்சாத்திரங்களின் பல அந்தரங்கமர்மங்களினாலேயே, நம்முன்னோர்களின் ஆசாரங்

களும், மேலான மதமும், நல்லொழுக்க முறைகளும், ஒருகட்டுக்குள்ளடங்கிய ஜாதியாரென்பதும், தேசாபிமானிகளென்பதும் தெள்ளத்தெளிவுறலாகும். அவைகளையெல்லாம் சுதேசஜாதியர்களான நமமே கைநழுவவிடுவதோ நாமவர்களுக்குச் செய்யுமுபகாரம்?

தமிழ்பாஷையின் அழகும் ஆர்வமும் இலக்கணமும் ஈடும் உயர்வும் ஊக்கமும் எண்ணலும் ஏற்றமும் ஐக்கியமும் ஒன்றலும் ஓங்கலும் ஔவையின் சிறப்பும் கற்றோருள்ளத்தினைக் கவரக்கூடிய வளர்ச்சியுமுள்ளதென்பதும் மறுக்கமுடியாத வுண்மையேயாகும்.

இவைகளை யெல்லாம் பார்க்கும்போதும் பல பிரமாணங்களாலும், தமிழ் எல்லாநாடுகளிலும் பரவியிருந்ததெனத் ஏற்படுகிறது. ஒவ்வொரு பாஷைகளும் ஒருகாலத்திற் பிரபலமாகி மற்றொருகாலத்தில் மங்கிவிட்டாலும் பழயபடியும் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கும். இந்த நமது தெய்வீகமான தமிழ் பாஷையைக்கொண்டே, புராதனகாலத்தில் பற்பலரிஷிகள், கோடிக்கணக்கானவேதாந்த சாஸ்திரங்கள், எண்ணிறந்த ஜோதிஷகிரந்தங்கள், கணக்கற்ற மதனசாஸ்திரங்கள், மாந்திரீக நூல்கள், லௌகிக வைதிகநூல்கள், ஞானபோதசித்தாந்த நூல்கள், ஆத்மஞான நூல்கள், பலரஸாயனசாஸ்திரங்கள், பரமரகசியஞானயோக நூல்கள், ஜடதத்துவ, பூமிதத்துவ, பிராணதத்துவ இந்திரியதத்துவ, மனோதத்துவ, விவேகதத்துவ, அஞ்ஞானதத்துவ விஞ்ஞானதத்துவ, ஞானதத்துவ, ஆரூடதத்துவ முதலிய சாஸ்திரங்கள் மற்றும் ஆகாயம், நக்ஷத்திரங்கள், சந்திரன், சூரியன், இந்திரன், திரிமூர்த்திகள், முதலிய விஷய அபார மஹத் சாஸ்திரங்கள், இராஜதந்திர நூல்கள், மந்திரயந்திர பூஜா சாஸ்திரங்கள், யோக சாஸ்திரங்கள், மோனயோக நூல்கள், இத்தகைய

அதிஅற்புதமான சக்தியுடைய அநேகசாஸ்திரங்கள் நமது அநாதி பாஷையான தமிழில் அருளிச்செய்துள்ளார்கள். பின்னும், மேற்கூறிய சாஸ்திரங்கள் நமது பாரதநாட்டு தெக்ஷிணதேசத்தின் தெய்வீகமான சிலக்ஷேத்திரங்களி லும் பல முனீசுவரர்களாலும் சித்தாதிகளாலும், சமாதி வைப்பில் வைத்து வெகுபந்தோபஸ்துடனுமிருந்துகொண் டிருக்கின்றன. மேற்கூறிய நமது தமிழ் சாஸ்திரங்களை விருத்திசெய்வதற்குத் தகுந்த மேதாவிகள் இராஜாக்கள் அபிமானிகள் இல்லாததால் வெளிக்குவர வழியில்லாமல் மங்கிக்கிடக்கின்றது. மேற்கூறிய சாஸ்திரங்களில் பொதி கை மலைச்சார்பான நம்பிமலையின் மேல்பாரிசமாயுள்ள அம்பலப்பாறைக்கு வடக்கே கடாரி என்ற பெரியபாறை யில், பதினெட்டு சித்தர்களால் அருளிச்செய்த வைத்திய சாஸ்திரங்கள் 40 லக்ஷம் கவிகளுடன் 144 சாஸ்திரங்கள் பாறைக்குள் தேரையர் என்ற சித்தரால் வைக்கப்பட்டும், பொதிகையில் ஆண்டிகண்டம் என்றவிடத்தில் 8 லக்ஷம் முறைகளடங்கிய 200 ரஸாயன சாஸ்திரங்கள் மதங்காதி ரிஷிகளால் வைக்கப்பட்டும், இடும்பன்மலையுச்சியில் யானைப் பாரி என்றவிடத்தில் மதனசாஸ்திரம் 4000 கொங்கணரால் புதைக்கப்பட்டும், மதுரைக்கு மேற்கேயுள்ள மயிலாடும் பாறையில்வானசாஸ்திரம் 17 லக்ஷம் புஜண்ட முனிவரால் வைக்கப்பட்டும், மருதமலையில் மாந்திரீக சாஸ்திரங்கள் 8 லக்ஷம் பிண்ணாக்கீசரால் வைக்கப்பட்டும், பிரான்மலையில் கோரக்கர் என்ற மஹாரிஷியாற் சங்கீதசாஸ்திரம் 24000 செப்பேடு செய்துவைக்கப்பட்டும், கொல்லிமலைத் தென் மேற்கில் களிகாரிசம் என்ற ஓடையிற் பாம்பாட்டிசித்தரால் கோடியோக சாஸ்திரங்கள் வைக்கப்பட்டும், பச்சைமலை யின்கீழ்பாரிசம் பவளக்குன்று என்ற இடத்தில்தந்திரயந் திரசாஸ்திரங்கள் இடைக்காடரால் இருபதுலக்ஷம் சாஸ்தி

ரங்கள் புதைக்கப்பட்டும், மஹேந்திரமலையின் மேற்கே வல்லரக்கன் மதில் என்ற இடத்தில் மனோதத்துவ சாஸ்திரப்பிரிவுகள் 80000, ரோமச முனிவரால் புதைக்கப்பட்டும், அழகர்மலையின் ஆலயத்துக்குள் சுவாமி சன்னிதான பலிபீடத்தின்கீழே வைஷ்ணவாகம சாஸ்திரம் 8000, யோகஞான சாஸ்திரம் 1000 சுந்தரானந்தர் * என்பவரால் வைக்கப்பட்டும், தெய்வமலையில் கூபாளி படுக்கையில் அழுகண்ணமுனிவரால் ஆகாயகமான அஷ்டமாசித்தி நூல்கள் பூமியில்வைக்கப்பட்டும், பொதிகை மலையின் உச்சியிலும் மற்றும் சுற்றி நாலு பக்கங்களிலும் அகத்திய முனிவரால் அருளிச்செய்த 40-லக்ஷம் யோக நூல்கள், 4000 ரசாயன நூல்கள், 2000 வைத்திய சாஸ்ரங்கள், 1000 மாந்திரீக நூல்கள், 100 வாத நூல்கள், 10000 வேதாந்த சாஸ்திரங்கள், 12000 ஷோடசகலா ஆரூதார தத்துவ நூல்கள், 3000 லௌகீக சாஸ்த்திரங்கள், 400 பாரநாட்டுபாகிய நூல்கள், 8000 சித்தர் நூல்கள் 7000 அவதார புருஷ நூல்கள், 9000 பிராணதத்துவ சாஸ்திரங்கள், 9100 சோதிஷ நூல்கள், சரம் பஞ்சபக்ஷி கொக்கோகம் முதலிய நூல்களின் சாஸ்திரங்கள் இரண்டுலக்ஷம், காயகற்ப நூல்கள் 8000, கருமயோக சாஸ்திரங்கள் 17000, ஆகம நூல்கள் 4000, மந்திர சாஸ்திரங்கள் 7000, மதசாஸ்த்ரங்கள் 3007, மூலிகாருட நூல்கள் 1000, இவ்வித அபாரமான நூல்கள் பல இடங்களில் சமாதியில் வைக்கப்பட்டும், மஹத் சொரூபப்பிரபஞ்ச லக்ஷணசாஸ்திரம் 900000, வராகமலை அரிசிப்பாறையில் குதம்பை முனிவரால் வைக்கப்பட்டுமிருக்கின்றன.

---

* சுந்தரானந்தர்—விசுவ மித்திர மஹரிஷி என்பவருக்கே பிற்காலத்தில் அகத்திய மகரிஷியால் சுந்தரானந்தர் என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

மேற்கூறிய சாஸ்திரங்கள் பூராவும் தெய்வத்தன்மை பொருந்திய தமிழ் பாஷையிலேயே மஹாரிஷிகளால் இயற்றப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை முறைப்படி சாபநிவர்த்திசெய்து கண்டுபிடித்து வெளியாக்கக்கூடிய மேதாவிகள் தற்போது கிடையாதென்பது, திண்ணம்.

நமது தாய்பாஷையின் அருமை பெருமைகளெல்லாம் செப்பத்திறமன்று. எக்காலும் எவ்வாறும் நாம் முன்னோர்களின் ஆசாரணையைப் பின்பற்றி யொழுகுதலே ஒழுக்கமுறையாகும். ஆனல், தற்காலத்தில் பெரும்பாலோர் தங்கள் அப்பன், பாட்டன், முப்பாட்டன் முதலியவர்கள் பாடுபட்டுச் சேகரித்து வைத்திருந்த தாபர ஜங்கம ஆஸ்திகளுக்குமாத்திரம் தாங்கள்வார்சுகளென்றும், அவ்வாஸ்திகள் முழுதும் தங்களையேசாரவேண்டுமென்றும் நியாயத்தலங்களில் வியாச்சியம் போட்டு, அசல், அப்பீல், லகண்டப்பீல்கோர்ட்டுகள் வரை வழக்காடிப்போராட முன்வருகின்றார்களேயல்லாது, தங்கள் வருக்க பரம்பரையோர்கள் அநுசரித்துவந்த, ஸங்கல்பம், பிராணாயாமம், சந்தியாவந்தனம், ஔபாஸநம், பிரஹ்மயக்ஞம், தேவபூஜை, வைச்வதேவம்முதலிய ஆசாராதி ஞானசம்பத்தை யடையவேண்டுமென்ற எண்ணம் மேல் வருணத்தாராகிய பிராம்மணருக்கே இல்லையென்றால் மற்றவருணத்தவர்களைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? நமது தாய்பாஷையின் பயிற்சி குறைவு படப்பட நாமும் முன்னுக்குவரப்போவதில்லை. நமது நாடும் செழித்துவரப்போவதில்லை. முற்காலத்தில் நம் தமிழ் பாஷையானது குன்றின்மேலேற்றிய விளக்கைப்போல் பிரகாசமாகவெங்கும் பிரதிபலித்திருந்தது. தற்காலம் குடத்திலேற்றிய விளக்கைபோலாயினதை கவனிக்கின் வரவர

இன்னும் கொஞ்சகாலத்திற்குள் சுத்த சூன்யமாய்விடும் போலல்லவோ கருதவேண்டியிருக்கின்றது. எங்குபார்த்தாலும் ஆங்கிலம், லத்தின், கிரீக், பிராஞ்சு, பாரீஸ், ஜர்மன் முதலிய எத்தனையோ பிறநாட்டுபாஷைகள் நடமாடுவதன் பிரயோஜனமாக வெகு சுளுவாய் யாரும் கற்றுக்கொள்ளலாம். அவைகளைக் கற்றுக்கொள்வதும் சௌகரியமேயாகும். ஒருவருக்கு ஒருபாஷை தெரிந்திருப்பதினும் பல பாஷைகள் தெரிந்திருப்பது மிக்கமேன்மையேயாகும். ஆனல், ஒவ்வொருவரும் தேசியக்கல்வியில் பாஷாக் ஞானம் உண்டாகும்வரையில் பயிற்சியுற்ற பிறகு, மேற்கூறிய பிறநாட்டுபாஷைகளை கற்க முயற்சிப்பதை வேண்டாமென்று தடைசெய்வாரில்லையே. கல்வியென்பதேன்ன? அதற்கு எதனுல் இத்தகைய சிறப்புண்டாயிற்றென்றால், கல்வி யென்பது பாஷைக்கல்வி யெனவும், சாஸ்திரக் கல்வி யெனவு மிருவகைப்படும்.

மனிதர் தம்மனத்தின் கண்ணுறு மெண்ணங்களை ஒருவருக்கொருவர் வெளியிட்டுக்கொள்ளும் பாஷை எதுவோ அதுவே பாஷைக்கல்வி யென்னப்படும். பாஷை யென்பது ஒலியேயன்றி வேறன்று. ஒலியென்பது ஒரு எழுத்தையே சார்ந்து நிற்கின்றது. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு ஒலியையே குறிக்கின்றது. பலவித எழுத்துகள் சேர்ந்தே ஒரு வார்த்தையுண்டாகின்றது. பல வார்த்தைகள் சேர்ந்து ஒரு வாக்கியமுண்டாகின்றது, அவ்வாக்கியம் ஒரு பொருளையோ, இடத்தையோ, காலத்தையோ, உறுப்பையோ, குணத்தையோ, தொழிலையோ, குறிப்பித்து உணர்த்துகின்றது. ஒருவாக்கியம் சமயோசிதப்படி, பெறும் மாறுதல்களையும், பெறவேண்டிய முறைகளையும், தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய விகாரங்களையும் அவைகளுக்குறிய பொருட்களையும் பற்றிகூறுவதே

இலக்கணநூலாகும். இவ்விலக்கண நூற்படிகற்றறிந்த அறிவாளிகளாகிய பெரியோர்களின் அநுபவ அரியவிஷயங்களை பாஷையில் வெளியிடுவதே நூலென்றும், சாஸ்திரமென்றும், சாஸ்திரக்கல்வியென்றும் பெயர்பெறும். கல்வி மனிதர்களுக்குச் சிறப்பையும், இம்மைமறுமைப் பயன்களையும் அளிக்கக்கூடியது. கல்வியினலேயே இல்லறவாழ்க்கையில் புருஷனிடத்திலும் மனைவியினிடத்திலும் ஒருவருக்கொருவர் விசுவாஸம் ஏற்படுகின்றது.

"கைப்பொருளே பொய்பொருளாங் காலவரையில்லாது
மெய்ப்பொருளாங் கற்ற வித்தை நீங்காப் பொருளாம்"

"கண்ணென்றுரைப்பதிரு கண்ணதுவுங்கண்ணல்ல
எண்ணென்பதேனை யெழுத்தென்பதுவே கண்."

"ஆகாயவீதிக்கு ஆதித்தன் ரத்தினமாம்
வாகானகல்வி கற்றோன் மாஸபைக்கு ரத்தினமாம்."

"தெளிவான கல்விகற்றுல் தேசம் வசியமதாம்
பழிபாமரியாதை பாவலர்கள் தான்வசியம." அன்றியும்,

கல்வியென்பது, உலகத்துக்குரிய உண்மையான அனுபவம் பிரதிபலிக்கப் பெற்றும், சூஸ்திரிக்கபெற்றும், மேதாவிகளால் ஒப்புக்கொள்ளப் பெற்றுமிருக்கின்ற உணர்ச்சிகளை உணர்த்துவதேயாகும். இந்திய தேசியக் கல்வியென்பது இந்தியர்களுடைய பொது தருமானுஷ்டங்களை ஒவ்வொரு சுதேசிகளுக்கும் போதிப்பதேயாகும். பூராதன தருமநடைகளை அடையவேண்டுமாயின் ஒவ்வொரு இந்தியனும் தற்காலநடைகளிலிருந்து, முன்னோர்களது பூர்விக நடைகளுக்குத் திருத்தமடையவேண்டும். தேசியக்கல்வி முறையொன்றே இந்தியர்களின் தற்கால போலிச் செயல்களையெல்லாம் தவிடுபொடியாக்கிக்கழித்து, அபிப்பிராயபேதங்களாகிய படுநோய்களைப்போக்கி, பழையமாதிரியான நல்ல

லொழுக்கங்களை நன்றாய்ப் படாசஞ்செய்வது. இந்தியாவிலத்தில் இந்தியவித்துப் பயிராவதுபோல அந்நியவித்து பயிர் நன்றாய் செழித்துத் தழைக்காதென்பது துலக்கமாகச் சுட்டிகாட்டித் தெரியவேண்டியதில்லை.

நமது இந்தியா மிக்கப்பழமையான ஓர் தேசம். ஆத்மதத்வ வுணர்ச்சியில் மற்றைய எத்தேசத்தினும் முன்னேற்றமுடையது. அறிவினும் அனுபவத்தினும் ஆழ்ந்தியது. பின்நேரும் நிகழ்ச்சிகளனைத்தினையும் முன்னமே அறிந்துசொல்லும் மேதாவிகளது முதுமொழிகளை நிரம்பப் பெற்றுளது. “துன்புளவெனினன்றோசுகமுள” வெனுங் கொள்கையைக் கைப்பற்றிச் சுகதுக்கமிரண்டினும் ஒருபடித்தாக இருக்கும் கொள்கையிற் பழகியுள்ளது. தெய்விகத்தினும், வேதசாஸ்திரக்கிரந்தங்களினும், மனுதர்மத்தினும், மானவதர்மசாஸ்திரத்தினும், அனுபவமுறையினும் அர்த்தசாஸ்திரங்களினும், பற்பல பூர்வீகமான வகைகளினும் தர்மங்களின் சூக்ஷ்மாம்சங்களை நிரம்பப்பெற்றுள்ளது. பக்தி, ஞானம், ஒழுக்கம், திடம, தேஜஸ், அந்தஸ்து, புகழ், உறுதி, நம்பிக்கை, நல்லுணர்ச்சி, தேவாலயம், மடம் அன்னசத்திரம், தண்ணீர்பந்தல், தெய்வப்ரதிஷ்டை முதலியவைகளாற் சூழப்பட்டு அபாரமான அந்தஸ்தோடு கூடிய நிலைமையுள்ளது. இவ்வாறிருக்க, தற்பொழுது மேற்கூறியன முழுதும் விடுபட்டு வெளிவேஷ டப்பமாத்திரமாகிய துர்நடத்தைகளுக்கெல்லாம் ஆதாரமாயது. ஒருவருக்கொருவர் கள்ளவெண்ணம் மேலிட்டு, நம்பிக்கையே இல்லாமற்போய்விட்டது. நம்பிக்கையில்லாவிடில் இவ்வுலகமே இல்லையென்று துணிந்து சொல்லலாம்.

‘மனோதிடமே நம்பிக்கையென்பதை ஊர்ஜிதப்படுத்துவது. ‘கெடுக்கவல்லதும் கெட்டவர் தங்களை எடுக்கவல்லது மிம்

மனமேயல்லவா?" மனேதிடமென்றால், உண்மையும் சுத்தமுமான மனதாகும்; அதாவது, சுருக்கமாக, நம்பிக்கையெனப்பொருளாகும். நம்பிக்கையோ, மாசற்ற மனதின் கண்ணே உதயமாகும். இவ்வுலகமோ உண்மையென்ற நம்பிக்கையினுற் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வுலகில், துக்கமும், துன்பமும், துரோகமும், துடிதடிப்பும், துடுக்கும், துஷ்டத்தனமும் துணிகரமும், துராகிருதமும், துவேஷமும், துன்மார்க்கமும், இல்லாமலிருக்க வேண்டுமானல், நம்பிக்கை வேண்டுவதாவசியமேயாகும். ஜனங்களிடம் மேற்கூறியவை மிகழாமலிருக்கவேண்டியே, இராஜாங்கத்தார் "நம்பிக்கைமோசம்" என்பதை பெருங் குற்றமாக விதித்திருக்கின்றார்கள். நம்பிக்கையே மனித வாழ்வின் உயர்வு தாழ்வுக்குக் காரணமாயிருக்கின்றது. அன்றியும், சகல மதங்கட்கும் நம்பிக்கையே ஆதாரமாயுள்ளது. கிறிஸ்தவ மதத்திற்கும் நம்பிக்கையே பிரதான அங்கமாயது. மகம்மதிய மதத்திற்கும் நம்பிக்கையே ஆணிவேர்போன்றது. பின்னும், நம்பிக்கையே " அறிவென்றும் ஞானமென்றும் " நாமபேதத்துடன் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. இணனும், நாரத மஹரிஷியினுடைய " மராமரம் " என்னும் சொல்லின் நம்பிக்கையினுலேயே வான்மீகர் திருகால ஞானியாகி "இராமாயணம்" என்னும் உத்கிருஷ்டமான கிரந்தத்தை வெளியிட்டிருக்கின்றார். மேலும், "கபீர்தாசரும்" நம்பிக்கையினுலேயே அணிமாதி அஷ்டஸித்திகளைப்பெற்ருர். பின்னும், உலகத்தில் நம்பிக்கையென்றதத்துவமே அரசுசெலுத்திவருகின்றது. நம்பிககையினுலே பேயென்பதும், பிசாசென்பதும், பிரமராக்ஷதென்பதும், முனியென்பதும், காட்டேரியென்பதும் உற்பத்தியாகின்றன. நம்பிக்கையே சகலமத ஜீவன்களையும் உய்விப்பது. நம்பிக்கை

இல்லாமையே ஜீவன்களை அதோகதியிற்றள்ளித், தத்தளிக்கவிடுவது.

இவ்வுலகம் நம்பிக்கையிற் கட்டுப்படுகிறவரையில் ஜனங்களுக்கு இராஜாங்கத்தவர்களின் சட்ட நிரூபணம் ஆவசியமேயில்லை யென்பது துல்லியம். நம்பிக்கையே, மங்கிய அறிவுடையவர்களுக்கு வழிகாட்டும் தீவட்டியாகும். இப்பிரபஞ்சமே நம்பிக்கையாகிற, பிராதிபாசிகாவஸ்தையில் உற்பத்தியாக்கப்பட்டு, நம்பிக்கையாகிற வியாவஹாரிகாவஸ்தையில் ஸ்திதிசெய்யப்பட்டு நம்பிக்கையாகிற பாரமார்த்திகாவஸ்தையில் ஸம்ஹாரம் செய்யப்பட்டு நடைபெறுகின்றது. எத்தனையோ அனுபவமுறைகளை எடுத்து விவரித்துக்காட்டியும் அனுகுணமும் யுக்தமுமான பலவித வாதங்களால் நிரூபித்தும், விருத்தியாம்சங்களைத் தெரிவித்தும் முன்னுக்கு வருவதற்கானவழி கல்விமுறையாலன்றி வேறொன்றினாலும் முடியாதவிஷயமாயிருக்கின்றது திண்ணம். ஆகையால், கல்வியாகிய கருந்தனத்தைக் கைசோரவிடாமற் கழகத்திற் கருத்தொருமித்து இறைக்கவேண்டியதாவசியமாயிருப்பதை ஒவ்வொருவரும் கவனிக்கத்தக்கதாகும்.

> குறிப்பு:— [இங்கு அனேகவிடங்களிற் கல்வி யென்று பொதுவாக யெடுத்துக்கொண்டது, நம்மிந்தியாவிற்கு தேசியக்கல்வி யென்றே பொருட்படுமாறு வைத்துளேமென்பதை வற்புறுத்தலாயினோம்.]

சுமார் 500 வருஷங்களாக நமது அவிவேகத்தினால் அலக்ஷியமாகவிடுத்த தேசியக் கல்விமுறைத் தாழ்வும்; நமது துராசையினால்கொண்டாடிய பிறதேசக் கல்விமுறை வாழ்வும் ஒருங்கேகூடி தற்காலத்திற்கேற்ப நமது பூர்விகமான குலத்தையும் குணத்தையும் குடியோட்டி, பலத்தையும் பணத்தையும் பாழ்படுத்தி, வீரர்களை வீணர்களாகவும்

தீரர்களை தீனர்களாகவும், உற்றுரை அற்றுராகவும், உகந்தாரை யிகந்தாராகவும், நல்லோரை அல்லோராகவும், நாட்டாரை ஓட்டாராகவும், மாட்டாரை மனிதராகவும்செய்து, நிலத்தை நிர்மூலமாக்கி, நலத்தை நாணமாக்கி, உண்டிவகைகளைப் பிண்டிகைகளாக்கி, ஆடைகளைப் பீடைகளாக்கி, உற்றுருடன்செற்று, ஊரார்களுக்கு அழுது வீணுக்கு உழைத்து, விழலுக்கு நீர் இறைக்கச்செய்து, உடையும் உண்டியும் வேற்றூர்கொடுக்கவேண்டிப்பெற்று, நிற்க நிழலற்று, இருக்க இடமற்றுப் படுக்கப் பாயற்றுத் தரையிற்கிடந்து தடுமாறவும் செய்துவிட்டன. குடியர்களுங் குருமார்களாகி, ஊர்காலிகளும் உத்தியோகிகளாகி நிறையில்லாமொழியுடையாரும் நியாயாதிபதிகளானுர்கள். குலப்பெருமையுங் குடிப்பெருமையுங் குணப்பெருமையுங் கவனிக்கப்படுவதே இல்லை; தற்காலம் எங்குபார்த்தாலும் பஞ்சங்களோ தஞ்சங்களாகப்பரந்து வருகின்றன. யாரும் எவ்வகைத்தொழிலினும் நிலைத்திருக்க முடிகிறதில்லை. தாந்தோன்றித் தம்பிரான்களாகித் தடிகொண்டார் தண்டர்காரர்களாகிக் கண்டதேகாட்சி கொண்டதேகோலம் என்பவர்களாகி, அடித்தேனும் முடித்தேனும் அழுதேனும் தொழுதேனும் வயிறு வளர்ப்பதே வானுலகின்பமாக அனுபவித்துவரவேண்டியதாயிற்று. இதனுல் சிறியோர்க்கும், பெரியோர்க்கும், மெலியோர்க்கும், வலியோர்க்கும், உத்தியோகிகட்கும் உழைப்பாளிகட்கும், ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கும் இடையில் உட்கலகங்களுண்டாகி உலகமதர்மமுறையில் தடுமாற நேர்ந்திருக்கின்றதேயன்றி வேறில்லை. நமது பாரதநாடும், தேசியக்கல்வியும் இருந்த நேர்மையென்ன? சாதாரணமாக, மனிதர்களுக்கே சில சமயங்களிற் புத்திதடுமாறி மயக்கத்தோடு வாயில்வந்தபடி உளறக் கூடியதாயிருக்க, அத்துடன் போதாது, சிக

ரெட், பீடி, சுருட்டு, அபின், கஞ்சா, பிராந்தி, ஒயின், கள் சாராயம், மாம்ஸம் முதலியவைகளைப் பிரபலமாக பருகத் தின்ன உபயோகித்தால், புத்தி மயக்கத்திற்கும் முழுமூடத் தனத்திற்கும் கண்டபடி உளறுவதற்கும் கேட்கவா வேண்டும்? ஆதிகால அவதார புருஷர்களாகிய, ஸ்ரீ கிருஷ்ண பகவான், சங்கராசாரியார், ராமானுஜாசாரியார், மத்துவாசாரியார், என்ற பெரிய மஹான்கள் ஜனங்களுடைய அறிவைபெருக்கி மோக்ஷஸாதனமான ஞானமார்க்கங்களை அனுசரிக்கவேண்டிய தத்துவரகசியங்களைக் கூறும் நூற்களை வெளியிட்டிருக்க, அவர்களைக் காட்டிலும் தற்காலத்தியவர்களிற் சிலர், தாங்கள் யாதோ ஞானத்திற்கு வேண்டிய ரகசியங்களைக் கண்டுபிடித்துவிட்டோமென்று, தம்மிடம் வருகிற சிஷ்யர்களுக்கு முற்கூறிய லாஹிரி வஸ்துக்களை உபயோகிக்கும்படி போதிக்கின்றார்கள். இவ்விதச் செய்கைகளின் மிகுதியினால் தற்காலம் எதார்த்தமும் நல்நினைப்புமுள்ள மனிதர்கள் கிடைப்பது துர்லபம். மேல்நாட்டார்களில் சிலர் நமது இந்தியா தேசத்திற்கு சுமார் 500 வருஷங்களுக்கு முன் வந்து இங்குள்ள ஞானசாஸ்திரம், ரசாயனசாஸ்திரம், பூகோளசாஸ்திரம், ஜடதத்துவசாஸ்திரம் ஆகிய நான்கு முக்கியமான பதார்த்தங்களைத் தங்கள் தேயத்திற்குக் கொண்டுபோயிவிட்டார்கள். இப்படி அவர்கள் கொண்டுபோன விஷயம் தெரிந்த இந்தியர்களில் அதிமேதாவிகளான சிலர் பொறுமைகொண்டு தாமும் திரும்ப அவைகளுக்கு பதிலாக ஜாஸ்தியாகவே கொண்டுவந்துவிடலாமென்று அதிதீவிரமாக மேனாடு சென்று இதுவரை ஒருவரும் இந்தியாவில் கண்டுபிடித்திராதனவும், கொண்டுவர முடியாதனவாயுமுள்ள, கிரூப் பூட்ஸ், மாம்ஸம், பிராந்தி, மேஜைச்சாப்பாடு ஆகிய இவ்வைந்தையும் கொண்டுவந்துவிட்டார்களென்றே சொல்ல வேண்டிய நிலைமையில் வந்துவிடலாயிற்று.

வர்த்தமானத்தில் அனேகர் தங்கள் சுய பாஷையில் வைத்தியநாதன் என்பதற்கு 'பைத்தியநாடன்' என்றும், சுப்பிரமணியன் என்பதற்கு 'சுக்கிறமனின்' என்றும், ஆறுமுகம் என்பதற்கு 'ஆருமுவம்' என்றும், சுடலை முத்து என்பதற்கு 'சொள்ளைமுட்டு' என்றும், கையெழுத்துக்கூடப் பிழையன்றி யெழுதத்தெரியாமலிருக்க, தம் சுயபாஷைகளையும் அவைகளிற்றேறந்த வித்துவான்களையும் அப்பாஷைகளிலியற்றிய நூற்களையும் அந்நூற்களையியற்றிய நூலாசிரியர்களையும் அவமதித்துத் தூற்றி வம்புக்கிழுத்துவாயாடி சண்டைக்கி வந்து போராடத் தவறுவதே இல்லை. அத்தகையோர்கள் நமது முன்னூலாசிரியர் திருவள்ளுவநாயனா ரியற்றியுள்ள 'திருக்குறள்' நூலின் ஸாராம்சத்தை தங்கள் ஜன்ம ஜன்மாந்திரத்திலாயினும் கவனித்திருக்கவேனும், கம்பருடைய கற்பனைகளைக் கனவிலாயினும் கண்டிருக்கவேனும், ஔவை பிராட்டியார் நூற்களை செவ்வையாகக் கேழ்வியுற்றிருக்கவேனும், அதிவீரராம பாண்டியனை அணுவளவேனும் கேழ்வியுற்றிருக்கவேணும் மாட்டார்களென்றே சொல்லத்தடையுள்ளதோ ? நமது தேசிய பாஷையில் சுத்த சூன்னியர்களான மேற்கூறியதற் குறிப்புள்ளிகளும்இவ்வுலகில் தமக்கீடு யெவருமில்லையென பயிரங்கமாக வெளிக்கிளம்பி உலாவிவருகின்றனரென்பதும் தெரிந்தவிஷயம். தேசியபாஷையின்கதியே யீவ்வாறிருக்க ஜனங்கள் பிறபாஷைகளை கற்பது எதற்காகவென்றாலோ? வயிற்றுச் சோற்று ஆத்திரத்தினாலும் துராசையினாலும் திரவியாபேக்ஷையினாலென்பதும் வெளிப்படை.

நமது அருமைவாய்ந்த தாய்ப்பாஷையை ஹதாஹதம் செய்துவிட்டு, கேவலம் காலக்ஷேபார்த்தம் இதரபாஷைகளைக்கற்க முயலுவதும் ஓர் கௌரவமா? பொதுப்படநோக்கின், பாஷைகளில் ஒன்று மேலானதென்றும், மற்

றென்று மேழானதென்றும் ஒருக்காலும் ஒருவாறும் ஒருவாலேனும் சொல்லவேமுடியாது. அவரவர்களுடைய தேசியபாஷையே அவரவர்களுக்கு மற்றவைகளினும் முக்கியமானது. எக்காலும் அன்னியபாஷைகளைக் கற்கக்கூடாதென நிபந்தனை எவ்விதத்தினு மேற்காது. இந்தியப்பொது தர்மங்களின் அநுஷ்டானத்திலிருக்கும் ஒரு ஆத்மாவுக்கு இந்தியப்பொது தர்மவுணர்ச்சியை போதிப்பது இந்தியக்கல்வியேயாகும். தவிரவும், வியாஸர், வஸிஷ்டர், பராசரர், மரீசி, அத்திரி, சுகர், மாண்டவ்யர், திருமூலர், ஜமதக்னி, மனுமாந்தாதா, தத்தாத்திரேயர், கௌடபாதர், கண்ணன், ஸ்ரீராமன், ஹனுமார், பீஷ்மர் முதலிய மேதாவிகள் வருணாச்சிரம தருமசாஸ்திரங்கள் ஞானத்திற்கேதுவென்று ஏற்படுத்தியிருக்க, அவர்களைக் காட்டிலும் தற்காலத்தவர்கள் எந்தவிஷயத்தில் மேன்மையுடையவர்களோ தெரியவில்லை. பணத்திலா அந்தஸ்திலா பேச்சிலா நினைப்பிலா படிப்பிலா ஞானத்திலா ஒரு விஷயத்திலுமில்லை. சித்தி, முத்தி, பக்தி, சக்தி, கல்வி முதலிய ஒருவிஷயத்திலும் மேம்பட்டவர்களாகத்தெரியவில்லை. வைதிகசம்பந்தமான ஆதிகால நமது அனுஷ்டானத்தைக்காட்டிலும் இந்த நூதனநுஷ்டானம் எந்த விஷயத்தில் உயர்ந்ததென்று இந்திய நூதனபுத்திசாலிகள் கருதியிருக்கின்றார்களோ தெரியவில்லை. மின்னாளுக்குப் பின்னாள் இவ்வுலகம் எத்தனையோ மாறுதல்களைப் பெறலாயின. ஜனங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் காலத்தை விபரீதமாக்கி விட்டார்கள். ஜாதிக்கட்டுப்பாடோ இருந்த இடமே தெரியவில்லை. மழையும் காலாகாலத்திற் பெய்வதென்ற நியமம் தவறிப்போய்விட்டது. மாரியிலாததனால் பயிர் வெள்ளாமை குறைவுறலாயது. வெள்ளாமை குறைவுபடவே தான்யாதிகள் போக்குவரத்துக்கு தடையுண்டாயது. இதனால் தேசங்களுக்கே துர்பிக்ஷமுண்டாகி ஜனங்கள் வருந்து

178207

வதற்குக் காரணமாயது. தற்காலம் தீயொழுக்கங்கள் மானிலத்தில் மலிந்தன. தீயொழுக்கமுள்ளவர்களுக்கு நியாயமேது? தருமமேது? சாஸ்திரமேது? உண்மையேது? அன்பேது? அபிமானமேது? ஹிதமேது? கிரமமேது? இங்கிதமேது? ஸத்தியமேது அச்சமேத? அடக்கமேது? அந்தரங்கமேது? ஐக்கியமேது? அலுப்பேது? சலிப்பேது? பெற்றோரேது? பெரியோரேது? அக்காளேது? தங்கை எது? அப்பனேது? அம்மையேது? அண்ணன்தம்பியேது? உற்றாரேது? உறவினரேது? எல்லாம் தலைகீழாய் நடைபெற்றுவருவது பிரத்தியக்ஷாநுபவம். இத்தகைய திருக்கூத்துகளுக்கெல்லாம் காரணம் நமது தேசீயக்கல்விபயிலாமையேயாகும். இந்தியக்கல்வியை முறைப்படி பயின்று வந்தோமானாற் பொதுதர்மானுஷ்டானங்களில் மற்றவரைச் செலுத்துவதற்கு ஒரு வழிகாட்டியாகவும், லோகவிருத்திக்குக்காரண பூதமாகவும், தெய்வசக்தியைக்காட்டும் ஆசாரியனாகவும் நின்று உதவுவதும் தவிர, தேசம் தேசமாகி மனுஷத்தர மதிகரித்து ஒற்றுமைகைகூடி உபகாரசிந்தை மேலிட்டு உண்பதும் ஒழுங்காகி நிற்பதும் நடப்பதும் நேராகி வீணர்களும் வீரர்களாகித் தீனர்களும் தீரர்களாகி, அன்பும் ஆதரவுமே ஊன்றுகோலாகிக் குடியர் குறைந்து, கள்வர் அழிந்து, மடியர் கழிந்து, மாள்வார் குறைந்து, ஆயுள் வளர்ந்து, ஆக்கள்பெருகி, அறவோர் சிறந்து, செல்வம்செழித்து, அரசுமோங்கி அருளேதழைகும். ஆதலின், தேசீயக்கல்விமுறையே தேசத்துக்குரிய முறையாகும். இன்னும் இக்கல்வியானது, நல்லமுறையிற் பயிலப்பட்டுவரும்போது வர்ணாச்சிரமதர்மங்களின் நிலையையும், ஒரு உபாத்தியாயர், ஒரு குரு, ஒரு ஆசாரியன் இவர்களிருக்கவேண்டிய நிலையையும், உபாத்தியாயர் கற்றுச்சொல்லி, குரு சிஷ்யன், ஆசாரியன் அநுசாரியாகிய இவர்களது சம்பந்தத்தையும், யாருக்கு எப்போது

எந்தவிதமான தர்மத்தைப்போதிப்பது என்னும் விவேசனத்தையும் நன்குதெரிவிப்பதுடன் உலகவியவஹாரத்திலும் ஆத்மாநுபவத்திலும் உண்டாகும் சந்தேகங்களைப் பக்குவத்துக்கேற்றபடி விளக்குவதாகவும் இருக்கின்றது. ஆகையாற் கல்வியானது நன்றாகப் பயிற்றப்பட்டால், அநேக உத்பாதங்களிலிருந்தும் நம்மை நிவிருத்திக்கும். யாவரையும் ஒரு கடவுளின் புத்திரர்களாகச் செய்யும். நமது கடமைகளையும் நன்குஉணர்த்தும். உலகத்தின் பொதுக்கூட்டுறவில் தர்மங்களுக்கு விரோதமில்லாமல் அவரவர்கள் தத்தம் பக்குவத்திற்கு ஏற்பத் தத்தம் கடமைகளைச் செய்யவேண்டுமென்பதே கடவுளின் கட்டளையாகும். அதனை மீறி நடப்பார் எவரேனும், அவருடைய கருணைக்குப் பாத்திரராகார்கள். அத்தகையோர் கடவுளின் கருணைக்கு அப்புறப்பட்டே இருக்கவேண்டிநேரிடுவது திண்ணம். ஆகலின் நம்மவர்களை வற்புறுத்தியேனும் வழக்காடியேனும் நமது கடமையாகிய இந்தத்தேசியக் கல்வியைப்போதிப்பதற்கு உரியவர்களாகின்றோம்.

உலகத்தில் இருவிதமான மனிதர்களிருக்கின்றார்கள். அவரவர் ஆத்ம முன்னேற்றம் இன்னதென்று அறிந்தவர் ஒருவகையார்; அதையறியாதவர் மற்றொருவகையார். இவர்களுள் அறியாதவர்களுக்குப் புகட்டவேண்டியது அறிந்தவர் கடமையாகும். ஒவ்வொரு மதமும் இதனைத்தான் சொல்லுகிறது. ஒவ்வொரு தேசமும் இதனைத்தான் செய்கிறது. ஆஸ்திகரும் நாஸ்திகரும் இதனையே கைப்பற்றவேண்டியது. இந்தக் கடமையைச்செய்வதே புண்ணியமென்றும், செய்யாதொழிவதே பாவமென்றும் சொல்லப்படும். இந்தக் கடமையை வற்புறுத்துவதற்கே ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு ஜாதியினரும் புராணேதிஹாஸ சரித்திரங்களைப் புனைந்து வைத்திருக்கின்றார்

கள். அந்தந்த தேசத்துச் சரித்திரங்கள் அந்தந்த தேசத்தினரையும், அந்தந்த மதத்துச் சரித்திரங்கள் அந்தந்தமதத்தினரையும், அந்தந்தஜாதியின் சரித்திரங்கள் அந்தந்த ஜாதியினரையும் அவரவரது கடமைகளிற் செல்லும்படி தூண்டுகின்றன. ஒரு தேசத்துச் சரித்திரம் பிறதேசத்தினரையாவது ஒரு மதத்தின் உண்மைகள் பிறமதத்தினரையாவது ஒருஜாதியின் ஆசாரம் பிற ஜாதியினரையாவது ஆத்மமுன்னேற்றத்திற் செலுத்தும் என்று எண்ணுவதற்கு இடமேயில்லை. இந்துமதக்கல்வி இந்துக்களையும், மகம்மது மதக்கல்வி மகம்மதியர்களையும் கிறிஸ்து மதக்கல்வி கிறிஸ்தவர்களையும் பிறமதக்கல்வி பிறமதத்தினர்களையும் ஆத்மமுன்னேற்றத்திற் செலுத்தும். ஆகையால், இந்தியர்களுக்கு வேண்டியகல்வியைத்தரும் முறையே இந்தியமுறையாகும்; மற்றமுறை பிந்தியமுறையே யாகும்.

பிராசீன முறைகளும் இம்முறையையே பின்பற்றி நடந்தேறின. இப்போது நாமும் இம்முறைப்பின்பற்றி வந்தோமானால் பிற்காலத்தவரும் இதனைப்பின்பற்றி வருவார்களென்பதில் ஐயமிராது. அப்போது தேச தர்மங்கள்உருக்குலையாதிருக்கும். இம்முறையைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்றே பூர்வீகர் சாஸ்திரங்களை இயற்றி வைத்திருக்கின்றனர். ஆகையால், வித்யாமுறையும் வித்தையின் பயனும் வித்யா இலாகாவின் செலவும் தேசியக்கல்வி முறையிலேயே பெறுமை பெற வேண்டும். அன்றியும், நமது தெய்வீகத்தன்மை பொருந்திய தமிழ் பாஷையிலேயே, அகஸ்தியர் அகத்தியம் பஞ்சகாவியம்என்ற தமிழ்நூலும் சைவ சமயாசாரியார் நால்வர்களும் அடங்கன் முறை, திருவாசகம், முதலிய தமிழ் வேதமும், பனிரெண்டு ஆழ்வாராதியர்கள், நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும், சிவபிரகாச ஸ்வாமிகள், பிரபுலிங்க லீலையும், பட்டினத்தடிகள்,

தாயுமானவர், தமது அனுபவ நூற்களும், தத்துவராயர் பிரஹ்மானுமதி பெற்றபாடுதுறை யென்ற நூலும், மற்றும் அபாரமான பல பெரிய மஹான்களாலும் அபரிமித மான அருட்பாக்களும் அருளிச் செய்திருப்பது தற்போதும் காணலாம்.

நாம் எப்போதும் நமது மஹத் பாஷையாகிய தமிழையே பேசவேண்டும். மற்ற அன்னிய தேசபாஷையை நமது குக்ஷிபாதை நிவிர்த்திக்காகக் இராஜாங்க கோர்ட்டில் மட்டும் பேசவேண்டும். நாம் கவர்ண்மெண்டு சம் மந்தமாக அவ்வவ்வ சமயங்களில் மாத்திரம் இராஜ பாஷைகளை உபயோகிக்கவேண்டும். இதைவிட்டு பெண் சாதியிடத்திலும், ஹோட்டலிலும், சாப்பிடும்போதும், பந்துக்களிடம் பேசும்போதும், தூங்கும்போது பிதற்றுகின்ற சொர்பனத்திலும், ஆலயங்களிலும், மடங்களிலும், சந்யாஸிகளிடங்களிலும் பெரிய மஹான்களிடத்திலுமா இதர பாஷைகளை உபயோகிப்பது. மேற்கூறிய இடங்களில் நமது சொந்த பாஷையாகியும் சோமசுந்தரப் பெருமானுக்குகந்ததாயும் இரா நின்ற தமிழையே பேசவேண்டும். தற்போது அனேக பிராமணர் உத்தியோகத்திலிருப்பவர்களுக்குத் தமிழ் பேசதெரியாமல் விழிக்கின்றார்கள். வயிற்றுச்சோற்றுக்காக அறை குறையாக இராஜ பாஷை கற்று அதிலும் ஸ்திரமின்றித் தமிழையுமறந்து இருபக்கத்துறவிகளாயிருக்கின்றார்கள். இக்குறை எக்காலம் எந்தப் பரமபுருஷனால் நிவர்த்தியாகுமோ தெரியவில்லை. ஏதாவது ஒரு பாஷையிலாவது, பூர்ண பாண்டித்தியம் இருக்கவேண்டும். நமது தேசப் பிராமணர்களில் வைஷ்ணவர்கள் தமது பிதா, மாதா, முதலியவர்கள் இறந்து விட்டார்களானால், யாராவது கேட்டால், என்மாதா பரமபதத்துக்குப் போய்விட்டாரென்றும், வடமாள், ஸ்மார்த்தர்கள்,

ஈஸ்வரப் பிரசாதத்தை அடைந்து விட்டார்கள் என்ற பழைய வார்த்தைகளை ஆங்கிலங்கற்றதனுல் மறந்து எனது மாதா, பிதா, டைட் ஆய்விட்டார்கள் என்கின்ருர்கள். வால்மீகர், புஜண்டர், அகஸ்தியர, கொங்கணர், கோரக்கர், ரோமசர், முதலிய ரிஷிகள் முதலில் தமிழைக்கற்றுத் தேர்ந்தபின் ஸம்ஸ்கிருதம் படித்ததாகதெரிகிறது. தமிழைப்பற்றி பேசுவதென்ருல், கோடிக்கணக்கான காலம் பேசிக்கொண்டேயிருக்கலாம். தமிழ்பாஷையின் முடிவை அறியவேண்டுமாயின் பரமசிவனை அறிந்தால்தான் முடியும்; பரமசிவனை அறிந்தவன்தான் தமிழை அறிந்தவனுகும். ஸ்ரீசுப்பிரமண்யமூர்த்தி திருக்ஞானசம்பந்தமூர்த்தியாகத் திருவவதாரஞ்செய்து தமிழிலேயே பல க்ஷேத்திரங்கள் தோறும் சென்று அளவற்ற தமிழ்ப்பதிகங்கள் பாடியிருக்கின்ருர்கள். இப்படியே தமிழின் பெருமையையும் அருமையையும், சூக்ஷ்மத்தையும், பேசப்பேச விரிந்து கொண்டே போகுமானதால், சுறுக்கமாக:—

இப்போது நடந்தேறிவரும் கல்விமுறையினுல் ஜனங்களுக்கு யாதொருவிதமான நன்மையும் கிடைக்கவில்லையென்பதையும், அப்படிக் கிடைப்பதற்கே மார்க்கம் இல்லையென்பதையும் யாரும் மறுக்கமுடியாது.

இவ்விதம் கல்விமுறையே முற்றும் மாறுபாடுறவேண்டும் என்று நாமே அல்ல, பலபெரும் முறையிட்டுக்கொண்டு வருகிருர்கள். தற்காலம் பத்திரிகைகளிலும் பிரஸங்க ஸபைகளிலும் இவ்வொரு விஷயமே பிரதான அங்கமாகப் பேசப்பட்டுவருவதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம்.

1. மாணவர்க்குப் படிப்பிக்கும் படிப்பினைகளெல்லாம் தாய்ப்பாஷையின் மூலமாகவே படிப்பிக்கப்பெறல் வேண்டும்.

2. உபதேசமுறையானது தேசஸ்வபாவத்தையும் மனோதர்மத்தையும் ஆத்மஸ்வரூபத்தையும் கடந்து செல்லக்கூடாது.

3. தேச ஜனங்களிடத்திற் பழகவேண்டிய முறைக்கேற்ற ஒற்றுமையும் உபகாரசிந்தையும், மனத்திற் பதியும்படி போதிப்பித்தல்வேண்டும்.

4. பலமதக் கோட்பாடுகள் செவ்வனே விரோதபாவமன்றியில் கற்பிக்கபெறல்வேண்டும்.

5. வித்யா விஷயத்தைப்பற்றிப் பொதுவாகவே தேசஜனங்களெல்லோரும் ஒருமித்துக் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாயினும், முக்யமாக, உபாத்தியயர்களும் உபதேசகர்களும் மாணவர்களும் வித்யாசாலையதிகாரிகளும் அத்யக்ஷர்களும் வித்யாப் பொதுசட்டங்களிற் சற்றேனும் தவறிநடவாதவர்களாக இருத்தல் வேண்டும்.

ஒரு குடும்பத்தலைவன் ஒழுங்கீனனானால் அவ்வொரு குடும்பமே கெடும். ஒரு உபாத்தியாயன் ஒழுங்கீனனானல் ஒரு தேசமே கெடும் என்பதற்கு ஐயமேயில்லை. இது யாவர்க்கும் தெளிவாகத் தெரிந்தவிஷயமே. உலகத்தின்கண் மானிடஜன்ம மெடுத்தவர்களுக்குப் பிறப்பும் இறப்பும் அவரவர்களது புல்லறிவுக்கெட்டாத சம்பவங்களாகத் தோற்றப்படினும், உலகின்வாழ்வும் அதன்கஷ்டநஷ்டங்களும், தைரியமும், தர்மலக்ஷணமும், நல்லொழுக்கநெறியும், கல்வியறிவும், கண்டுணரத்தக்கவைகளேயாவன. எவ்வளவு புத்திசாதுரியமும், சமர்த்தும, அனுபவமுமிருப்பினும், நல்லொழுக்கமில்லையேல், துன்பத்தில் சிக்குண்டு, மனமடியவே நேரிடுமென்பது சுருதி யுக்தி அனுபவப் பிரத்தியக்ஷத்திலும் உண்மை.

மானிட ஜன்மமெடுத்தவர்களில் ஒவ்வொருவருக்கும் செய்பத்தக்கதின்னது, செய்யத்தகாததின்னதெனவிளக்கும் பகுத்தறிவு என்றவோர் அற்புதசக்தியுண்டு. மற்றைய் ஜீவராசிகளுக்கு அஃதில்லை. பாபபுண்ணியங்களென்பவை மனிதர்களது செய்கைகளினின்றேயேற்படுவது. இச்செய்கைகள் திடீரென உண்டாகக் கூடியவையுமல்ல; நெடுநாளையப்பழக்கத்திலிருந்தே உண்டாகி விருத்தியடைந்திருந்தாலன்றி இன்று நேற்று இருந்தாற்போலிருந்து தலையெடுக்க நியாயமில்லை. நல்லதோ கெட்டதோ மனிதர்களுக்குத் தமது வாலிபப்பருவத்திலிருந்தே பழக்கவழக்கத்திற்குத் தொடர்ந்து வந்திருக்கவேண்டும். வாலிபப்பருவமே மனிதர்கள் சீர்திருத்தமடைவதற்கும் சீர்குலைவதற்கும் தக்ககாலமாகும். சீர்திருத்தமென்பது நல்லொழுக்க நற்குண நற்சகவாஸ நற்செய்கைகளிற் றேர்ச்சிபெறத்தக்க கல்வி அபிவிருத்தியினாலுண்டாவது. சீர்குலைவதென்பது போலிப் படிப்பு, பாட்டு, கூத்து, பொய், திருட்டு, சூது, கள், காமம் துராசை முதலிய தீயஸகவாஸப் பழக்கங்களினாலுண்டாவது. இத்தீயசெய்கைகள் தினேதினே பழக்கத்தினால் மதாளித்து, மனிதர்களுடைய மூளையைக்கலக்கிசூரையாடி விடுகின்றன. நெடியகடற்சூழ்ந்த இவ்வகிலபிரபஞ்சத்தின் கண் பூர்வஜன்ம ஸத்கருமவசத்தினாற் கிருத்யாகிருத்யம் இன்னதெனப் பகுத்தறியக்கூடிய விவேகத்தன்மையினால் பராபரக்கடவுள் ஒருவரிருக்கின்றாரென்றும், மனச்சாக்ஷியெனவோர் அபூர்வவஸ்து ஒவ்வொருவர்மனத்துள்ளும் இருக்கின்றதென்றும், அக்கடவுளுடையவும் அம்மனச்சாக்ஷியுடையவும் ஸம்பந்தமின்றி நல்லதோ கெட்டதோ நாம் செய்யும் முயற்சிகள் யாவும் நம்மிஷ்டப்படி நிகழவும், முடியவு மியலாதென்று முற்றுந்தீர்க்கமாய் பகுத்தறியக்கூடிய மானிடப்பிறவியைப் பெறுவதே மிக அரிதினும் அரிது.

"அரிதரிது மானிட ராதலரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே." என்றும்,

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
னியாதினும் மரிதரிது காண்" என்றும்,

"இப்பிறவிதப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
எதுவருமோ வறிகிலேன்" என்றும்,

ஆன்றோர்கள் வெகு அழகாய்க் கூறிச் சொரிந்திருக்கின்றார்கள். பார்க்கக்கண்ணும், கேட்கச்செவியும், இனிமையையுணரநாவும், நாற்றமறிய நாசியும், இன்பாநுபவத்திற்குமெய்யுங் கிடைக்கப்பெற்ற மனிதர்கள் தத்தம் மனப்போக்கே சாஸ்திரங்களின் அபிப்பிராயமெனவும், சட்டமெனவும் கருதி துன்பத்திலமுந்தி மனங்கருகினல் யாவரால் அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த முடியும்? மானிட ஜன்மமே புண்யஜன்மம். அப்புண்ணியஜன்மத்தினுக்கும் அறிவேசிறந்தது. அவ்வறிவை சரியாக விருத்திசெய்ய வேண்டுமென்ற முயற்சியே அவ்வறிவினுஞ்சிறந்தது. அம்முயற்சியே மானிடபிறவிக்குறிய இலக்ஷணமாகும்.

"அன்படக்கங் கல்வி அறிவொழுக்கந் தெய்பவபக்தி
இன்புவிசி முறை யிலேற்குமொழி—துன்பறுக்கு
ஞானிகளைப்பின்பற்றி நன்னெறியை நாடுகின்ற
மானிடருக்குற்ற தருமம்."

இவ்விலக்ஷணங்களில்லாவிடின், மனிடர் மிருகாதிகளுக்குஞ் சமமாகின்றார்கள். மானிடர்களின் ஜீவாத்துமா இதரபிராணிகளின் ஜீவாத்துமாவைவிட உயர்தரமென சாஸ்திரங்களின் அபிப்பிராயம். மானிடர்களிவ்வாறமையப்பெற்றும், பகுத்தறிவின் தன்மைக்கு விரோதமாய் ஸதா துஷ்கிருத்தியங்களை செய்துகொண்டுவரின் மானிடத்தன்மை குறைந்து மிருகத்தன்மை விருத்தியாகும். இவ்வாறு மிருகத்தன்மையையடைந்த ஜீவன் பின்னும் மிருகத்தன்மையையே தேடி மிருகசரீரத்தைபடையவுந் தடையுளதோ? அன்றியும், வர்த்தமானத்தில் பொய்புகலல், கள்ளருந்தல், கவருடல், களவுசெய்தல், ஜாரம்போதல் முதலிய துஷ்கிருத்யங்களில் ஜனங்களுடைய எண்ணங்கள் எளிதிற் பிரவேசிக்கலாயின. அக்கிரமங்கள் அதிகரிக்கின்றன, பாபங்கள் பரவி வியாபிக்கின்றன. இவைகளின் பயனாகமனிதர்களின் வாழ்நாள் குன்றிவிடுகின்றது. தேகஆரோக்கியம்கெடுகின்றது ஞானம் சுத்தமாய்மறைகின்றது. தைரியம் வீரம் ஆண்மை முதலியவைவிலகுகின்றது. நிலைமையோ பயங்கரமாகிவிடுகின்றது. நம்மைப்பரிதாபஸ்திதியிற் கொண்டுவந்துவிடுகிறது; ஓர்தீய செய்கைசெய்வதின் முன்னமே. மேற்சொல்லிய ஒவ்வொரு விஷயங்களின் நன்மைதீமைகளை ஊஹித்துநடக்கின், நமது மனமானதுநம்மை அத்தியவழிக்கு செல்லவிடுமா? நாளேற வேற பகவத்சிரத்தை, பகவத்பக்தி, இராஜபக்தி, குலதருமம், நீதிமார்க்கம், ஞானமார்க்கம், நித்யகருமானுஷ்டானங்கள் முதலிய ஸகலவிதக் கிரம நடவடிக்கைகளும் தினேதினே குறைவுறலாயின. இவைகள்குறைவுறுவதற்குக் காரணம் மானிடர்களின் புத்திக்குறைவுதான். அந்தோ! பாவம்!

நம்மையரசாளும் ஆங்கிலேயர்களும், நமது லோககுரு ஆசாரியாளவர்களும், நமது குருமார்களும், நமது புரோகிதர்களும், அவரவர்கள் அடைந்துள்ள ஞானத்திலன்றே அவர்களுடைய நாகரீக ராஜாங்கமும் செல்வாக்கும் பெரு

மையும் நம்மவர்களது குருத்ததுவ யோக்கியதைகளும், நிலையுற்றிருப்பன. கீர்த்தியும், ஸம்பத்தும் அவரவர்களது பிறவிகளினாலுற்ற ஞானத்தினாலல்லவா? ஆங்கிலேயர்களின் விருத்திக்கும் நாகரீகத்துக்கும் காரணம் அவர்களுடைய விடாமுயற்சியும், ஒற்றுமையும், பொறுமையும், தைரியமும், சுஜாதியபிமானமும், காருண்யசித்தமும் உன்னதமான குணங்களுமென்றே சொல்லத்தடையில்லை. நம்மவர்களிடம் அவைகள் கிஞ்சித்தும் அமையப்பெறாமையே நமது தரித்திரங்களுக்கு ஆணிவேர் போன்றதாகியது. இக்காலத்தில் காலக்ஷேபம் நடப்பதுவே அநேகருக்கு பெருந்தொல்லையாய்விட்டது. வைதீகமார்க்கமும் அந்தணரின் பிறப்பொழுக்கமும் குறைவுறவே கலகமொருபக்கம் சண்டையொருபக்கம் கொலையொருபக்கம் கொள்ளையொருபக்கம் களவொருபக்கம் சூதொருபக்கமும் போதாமல் இன்ப்ளூயன்ஸா [*Influenza*] ஒருபக்கம், முடக்குசுரம் ஒருபக்கம், காலரா [*Cholera*] வொருபக்கம், பிளேக் [*Plague*] ஒருபக்கம், குரூப் [*Gorup*] ஒருபக்கமுமாக நம்மவர்கள் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. ஜனஸங்கியையும் அநுசிதமான லவுகீக தோரணைகளும் மிகுதியாயின. இராஜாங்க பாஷையாகிய பிறதேச பாஷையைப்படித்து பரிக்ஷையிற் றேறியவர்களுக்கு, இராஜாங்கத்தார், அவரவர்களது வித்தையின் முதிர்ச்சி, அந்தஸ்துகளுக்குத்தக்கவாறு இராஜாங்கத்தில் உத்தியோகம் கொடுத்து நம்மவர்களை வேலைகளில் நியமித்தால், ஒழுங்கான நடைகளைவிட்டு அடியிற் காணும் தீயசெயல்களிற் றலையிடச் சொல்லுகின்றார்களா?

1. இராஜ பாஷையைப் படிப்பதனால், நம்மவர்களை நமது தேசமதாசார நியமனங்களையெல்லாம் அடியோடே விட்டு விடும்படி சொல்லுகின்றார்களா?

2. அபின், கஞ்சா, சாராயம்முதலியபோதை வஸ்துக்களை அருந்தும்படி நம்மைக்கட்டாயப்படுத்துகின்றார்களா?

3. விளையாடுகிறகார்டை [Playing Card] அச்சிட்டு வெளியிட்டிருப்பதனால், நம்மவர்களைப் பந்தயம் வைத்து சூதாடிக்கெட்டுப்போகச் சொல்லுகின்றார்களா?

4. உத்தியோகமுறையில் நம்மவர்களை லஞ்சம் வாங்கவாவது கணக்கில் திருட்டு நடவடிக்கைகளைச் செய்யவாவது சொல்லுகின்றார்களா?

5. துப்பாக்கிகள், வெடி மருந்துகள், கத்திகள் முதலியவைகளை உண்டாக்கி வெளியிட்டிருந்தால், நம்மவர்களை ஒருவருக்கொருவர் சுட்டுக்கொண்டும், குத்திக்கொண்டும் உயிரிழக்கவும், துணிகரமான கொலை செய்யவும் தூண்டுகின்றார்களா?

6. பிறர்பொருளைக் கொள்ளையடித்தோ, திருடியோ, நம்மை தண்டனையடையச் சொல்லுகின்றார்களா?

7. வியாதிகளைக் கண்டிக்கும்படியான அவர்களது பேடென்டு மருந்துகளையே [Patent Medicines] சாப்பிட வேண்டுமென்று நம்மவர்களை வற்புறுத்துகின்றார்களா?

8. நம்மவர்களை போர்ஜரி [Forgery] தப்பு தஸ்தாவேஜு பொய்ப்பத்திரம் முதலிய தீயசெயல்களில் பிரவேசிக்கச் சொல்லுகின்றார்களா?

9. நம்மவர்களை, அவர்களது ஜாதி மதாசாரங்கள் முதலிய நடை உடை பாவனைகளை அனுஷ்டிக்கும்படி வற்புறுத்துகின்றார்களா?

10. நமது தேசிய பாஷையைக் கற்கக்கூடாதென்று நம்மவர்களைத் தடுக்கின்றார்களா?

11, நமது தேவாலயங்களுக்கு அவர்கள் ஏதேனும் தாழ்வு செய்கின்றார்களா?

12. நம்மவர்கள் அவசியம் இராஜ பாஷையைப்படித்தே தீரவேண்டுமென்று கட்டாயப் படுத்துகின்றார்களா?

13. நம்மவர்கள் ஏதேனும் நூதனமாகக்கண்டுபிடித்து பிரகாசப்படுத்தினால் அவர்கள் கூடாதென்று தடுக்கின்றார்களா?

14. தியாயமும் சட்ட விரோதமின்றி யிருத்தலுமாகிய நமது பிரசுரங்களையாவது புஸ்தக நூற்களையாவது அவர்கள் ஏதேனும் ஆக்ஷேபிக்கின்றார்களா?

15. அநேகம் தர்ம ஆஸ்பத்திரிகளையும், பாடசாலைகளையும், பல சுற்றிடங்களுக்கு ரயில்வே இருப்புப்பாதைகளையும், ஸ்டீமர்களையும், பார்லிமெண்டு, போர்டு, ஹைகோர்ட்டுகள், டிஸ்டிரிக்ட் கோர்ட்டுகள், ஸப்கோர்ட்டுகள், முன்ஸிப் கோர்ட்டுகள், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், தாலூகா கோர்ட்டுகள், போலீஸ் சூபரின்டென்டெட் ஆபீஸ்கள், போலீஸ் ஸ்டேஷன்கள், என்ஜினீர் ஆபீஸ்கள், தபாலாபீஸ்கள், டெலிகிராப் ஆபீஸ்கள், ரிஜிஸ்தராபீஸ்கள், கிராம முன்ஸீப் கோர்ட்டுகள் முதலியவைகளை யெல்லாம் அவர்கள் ஏற்படுத்தி நடத்திவருவது பொது ஜன நன்மைக்காகவா, அல்லது அவர்களுடைய சுயம்பிரயோஜனத்திற்காகவா? மேலும், அநேகம் யுக்தி புத்தி சாதுர்யமான எண்ணிக்கையிலடங்காத எத்தனையோ புதிது புதிதான இன்வென்ஷன்கள் [ *Inventoins* ] எல்லாம் இந்தியாவிற்கு வெளிப்பட்ட பிறதேசத்தவர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி [நம்மவர்களால் இரும்பூசி, சிலேட்டுக்குச்சி, காகிதபென்ஸல், முதலிய சில அற்பஸாமான்கள் தவிர] வேறு எங்கிருந்தும் எவைகளும் பிரமசிருஷ்டியாக உண்டாகிவிடவுமில்லை. நம்மவர்களாலுண்டாக்கப்படவுமில்லை யென்பது யாவரும் மறுக்கமுடியாத உண்மை. நம்மவர்களிடம் ஒழுக்கமுறைகள் நல்லெண்ணங்கள் நம்பிக்கை முதலியவை நடைபெறுமாயின் எவ்வளவோ விநோதமான செய்கைகளை யெல்லாம் உற்பத்தி செய்து ஸாதிப்பதும் க்ஷேமசுகஸந்தோஷத்தோடு நீடூழி வாழ்வுறுவதுந் துணிவு.

"ஆதியைத்தொழு" என்ற ஔவை பிராட்டியார் மொழியே யெல்லோருக்கும் மறந்துபோயினதே. உலகில் மானிடர்களுக்குகல்விகேள்வியென விரண்டினாலேயே அறிவுவிருத்தியாகின்றது. கல்வியினும் கேள்வியே மிக்க சிலாக்கியம். ஆயினும் கல்விப்பயிற்சியில்லாத கேள்வி அத்தகைய பிரயோஜனந்தாரா. கல்வியென்றால் நூற்களிற் சொல்லியவைகளைக் கற்றுத்தெரிதலே. பற்பல நூற்களில், ஒவ்வொன்றிலு மொவ்வொருவித வாரம்சமிருக்கக்கூடியது. ஒவ்வொருவரும் யெல்லா நூல்களையுங் கற்றுத்தெரிவது மிக்கபிரயாஸமேயாகும், கேள்வியோ அவ்வாறல்ல. கேள்வியென்றால் கற்றறிந்து தேர்ந்தோர் வாக்கினின்று கேட்டுத்தெரிதல். அவர்கள் ஆராய்ந்த பற்பல நூற்களினின்றும் அறிந்து தெரிந்த ஸாராம்சங்களை யநேகவித உபமான உபமேயங்களுடன் நமக்குத் தெளிவுறக் கூறுகின்றார்கள் இது பற்றியே முற்காலத்தில் நமது முன்னோர்கள் ஸன்மார்க்க நடையுறவேண்டியும் ஆத்மாக்ஷணையின் பொருட்டும், தாங்கள் சுயமேகற்றாராய்ந்து தெரிந்துகொண்டவை போதாது, ஸத்கால கிரந்தகாலக்ஷேபமாக இராமாயணம் பாரதம் பாகவதம் புராணாதிகள் முதலியவைகளை முறையே இராமாயண சாஸ்திரிகள் பாரதிகள் பாகவதர்கள் புராணீகர்கள், முதலிய அறிஞர்களின் வாய்மொழிகள் மூலமாய் பல நீதிமார்க்கங்களை சிரவணாநந்தமாகக்கேட்டு தாங்களுந்தெரிந்து, தங்களில்லத்து ஸ்திரீகளுக்குமவைகளை வெளியிட்டுத் தெரிவித்து அறிவு புகட்டிவந்தார்கள். தற்காலத்திலோ வயிற்றுராமயணம், வீட்டுபாரதம், ஸகோதர பாகவதம் மனைவி புராண முதலியவைகளை விருத்தியாக்கிக்கொண்டு வந்தால் கல்விக்குங் கேள்விக்கும் அவகாசமேது? பெரியோர்களின் ஸ்திதிகள் இவ்வாறாகியதே; பிள்ளைகளை யாவது சன்மார்க்க நெறியிற் பயிற்சி செய்கின்றார்களோ? அவ்வாறுமில. வைதீகர்கள் வீட்டுக்குழந்தைகளெல்லாம்

வயிற்றுக்கல்வியென இராஜபாஷையாகிய அன்னியபாஷையை கற்கின்றன. கிரஹஸ்தாள் வீட்டுக்குழந்தைகள் வரதக்ஷிணையின்பொருட்டுக் கல்யாணக் கல்வியென போலியாக அன்னியபாஷையைக் கற்கின்றனவென்றால், எங்ஙனமாத்மார்த்தமாக சுயபாஷையைப் படித்துவிருத்தியாக்குவது? உலகிற் பெரும்பாலோர் பிள்ளைகளை பணப்பிசாசினாலும் தாராசையினாலுமே ஆங்கிலம் பயிற்சிக்கின்றார்களேயன்றி வேறில்லையென்பதே உண்மை. இப்பணவாசைதான் யென்னவென்ன கூத்துக்களையெல்லாம் வியாபிக்கச் செய்கின்றது. கலிகாலக்கொடுமையென்று சொல்வது சுத்த அக்ஞானமேயாகும். அதினும் தற்காலக்குழந்தைகளிலனேகர், இராகமாலிகையென்று சொல்லுவதுபோல, பாஷைமாலிகையாக இரண்டுமூன்று பாஷைகளை இடையிடையே கலந்து ஸம்பாஷிப்பதைக் கேட்க மஹாப்ரிதாபமாயிருக்கின்றதைக் காண்கின்றோம். அவர்கள்பேசுவது இங்கிலீஷோ, தமிழோ, ஸம்ஸ்கிருதமோ இன்னபாஷையெனத்தெரிவது அஸாத்தியம். இம்மூன்று பாஷையுந்தெரியாதவர்கள் இவர்களது ஸம்பாஷணையைக் கேட்கின்யாதோ புதியபாஷையெனவே யெண்ணமுறுவார்கள். இவ்வாறு கற்கும் கல்வி பரிஹஸிப்புக்கிடமாகியதேயன்றி வேறில. நம்மவர்களில், ஆங்கிலம் கற்று அதிகாரதோரணைகளிலிருக்கின்ற பிராமண வித்தியார்த்திகளிற் பெரும்பாலோர் நாகரீகமென்றெண்ணியோ, யெவ்வாறோ தமது ஜாதிபாசாரங்களையெல்லாம் அடியோடே விட்டுவிட்டு, தலைகொழுத்து, தமது மனம் போனபடியே வைதீகமுறைகளிலும் கொஞ்சமேனும் சிரத்தையின்றி நடக்கத்தலைப்பட்டார்களென்பது யாவரும் மறுக்க முடியாதவுண்மை. இத்தகையோர்களிலும் அனேகருக்கு வேதாக்ஷரங்களே கருப்போ சிகப்போ குட்டையோ நெட்டையோ பருமனோ சிறுமனோ இன்னவையெனக் கிஞ்சித்தும் தெரியவே தெரியா;

அவர்களுக்கு தேசபாஷையிலும், ஒன்று, இரண்டு மூன்று முதலிய முழு இலக்கவெண்களும், முக்கால் அரை, கால், அரைக்கால், வீசம் அல்லது மாகாணி முதலிய கீழ் இலக்க வெண்களும் சுத்தமா யெழுதப்படிக்கத் தெரியாவென்றால், யாது செய்வது? இம்மட்டோ? நமது தேசபாஷையில் அறுபது வருஷங்கள், பனிரண்டு மாதங்கள், பதினைந்து திதிகள், இருபத்தேழு நக்ஷத்திரங்கள், முதலியவைகளின் பெயர்களையே சொல்லத்தெரியாவென்றால், அவ்வித வித்தியார்த்திகளுக்கும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கும் யாது வித்தியாசம்? ஆனால், அவர்களுக்குபதேசித்த தற்காலத்திய பாடசாலைகளின் உபாத்தியாயர்களுக்கே தெரியாவென்றால், பின்னும் விசேஷமெனச்சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்; தவிரவும், அன்னியபாஷையைக் கற்றுக்கொண்டால், மூட்டை மூட்டையாயும் கோட்டை கோட்டையாயும் பொருள் சம்பாதித்து சொற்பநாளிற் குபேரனாகிவிடலாமென்ற பாழுந் துராசையினால் அனேகர், [1] கையிலுள்ள ரொக்கப் பொருள்களையுமிழந்து, [2] கடன்பட்டுக் காணி பூமிகளையும் தோற்று அடுத்து [3] நகை முதலிய ஆபரணங்களையும் ஒன்றுக்குப் பாதியாகவிற்று அடுத்து [4] தட்டுமுட்டுப் பார்த்திரங்களையும் ஒன்றுக்குகாலாகவிற்று [5] கடைசியாக [ தாலிக்கயிறுநீங்களாக ] எல்லாவற்றையுமிழந்து, தட்டுக்கெட்டுத்தடுமாறி கற்கமுயன்றும், கற்றும், அவ்வாறு கற்றவர்களெல்லோரும் முன்னுக்கு வருகின்றார்களோ? இல்லை; "வாய்த்தவிடும்போய் அடுப்புநெருப்பும் அவிந்து" என்ற பழமொழியின் உண்மையை ரூபித்து பற்பல விதத்திலும் க்ஷீணதெசைக் கிரையாகின்றார்கள்; தற்காலம் "நாகரீகம், நாகரீகம்" என்று ஒன்றைவிட்டொன்றைக் கொண்டாடி, தேசீயக்கல்வியைக்கடுத்து அந்நியர்கள்நடையுடைகளைத்தொடுத்து விளையாடத்தொடங்கியதன்பயனும்,

விளைந்த விபரீதச்செய்கைகளும், எண்ணத்தொலையா; ஏட்டிலடங்கா; எழுதி முடியா.

முதல் முதலாகவும் பொதுவாகவும் நமது தேசாசாரங்களெல்லாம் திக்கற்றுப்போயின; மதாசாரங்களெல்லாம் மாண்டுபோயின; தொன்று தொட்டு தலைமுறை தலைமுறையாயுள்ளசுதர்மநெறிகளெல்லாம் சூரையாய்விட்டன; செட்டு கட்டுமுள்ள வாழ்க்கைகளெல்லாம் வெகும்டாம்பீகத்தில் வந்துவிட்டன; தெய்வபக்தியேசிதறுண்டு போயிற்று; பரோபகாரமே பாழ்த்துப்போயிற்று; தருமமே தவறலாயிற்று; நியாயமேநாசமாயிற்று; ஜபதபாதிகள் ஜகத்திலேயேயில்லை; கருமங்களெல்லாம் கருகிப்போயின. பிராமணர்கள் நடைகளெல்லாம் பிரண்டுபோயின. மானமென்பது மடிந்துபோயிற்று. தானமே தள்ளுபடியாயிற்று. மரியாதையென்பதே மாறிப்போயிற்று. ஒற்றுமையே ஒழிந்துபோயிற்று. அன்பே அற்றுப்போயிற்று. பந்துஜனப்பிரியம் பறந்தேபோயிற்று. ஆசமனமே அநாதையாகிவிட்டது. சந்தியாவந்தனஜபம் சண்டையிட்டுக் கொண்டுபோய்விட்டது. மாத்தியான்னிகம் மாயமாய்ப்போய்விட்டது. கோபிநாமமே கோபித்துக்கொண்டுபோய்விட்டது; விபூதி வேகமாயோடிவிட்டது. பஞ்சகச்சம் பறந்தே போயிற்று. தட்டாடைக்கட்டே தாபரமாயிற்று. மூலைக்கச்சமே முதன்மையாயிற்று. பூணூல் பலரும்உபயோகிக்கலாயிற்று. பகவந்நாமமே பதுங்கிவிட்டது. நல்லொழுக்கம் காட்டிலில்லை. சூதேசொந்தமாயிற்று. வாதே வழக்கமாயிற்று. தீதே தேடலாயிற்று. சட்டையுடன் சாப்பிடுதலே சகஜமாயிற்று. அரைக்கைசட்டை அபரிமிதமாயிற்று. மணிக்கட்டுகெடியாரமே ரிஸ்டுவாச்சே [*Wrist watch*] பெஸ்டுவாட்ச் [*Best watch*] சாயிற்று. அர்த்தக்ஷவரமே அவசியமாயிற்று. முகக்ஷவரமே முக்கியமாயிற்று. கிராப் [*Crop*] வைத்துக்கொள்வதே பெரிய

யிற்று. கோரக்குடுமியே கிரீடமாயிற்று. ஸயிட்லாக் [Side lock] குடுமியே சாசுவதமாயிற்று. அப்ளாக்குடுமியே சம்ஸாயபாய்விட்டது. கிராட்ஜியுவேட் [Graduate] குடுமியேகியாதியாயிற்று. [கத்திரித்த] முன்குடுமியே முத்திரையாயிற்று. புகையிலைபோடுவதே புண்ணியமென்கின்றார்கள் சுருட்டே சொர்க்கமென்கின்றார்கள். சிகரெட்டே சிலாக்கியமென்கின்றார்கள். ஸோடா [Soda] பாட்டிலேசொந்தமாயிற்று; லெம்னெட்டே [Lemonade] லக்ஷணமென்கின்றார்கள்; ஆரஞ்சே [Orange] ஆயிசுவிருத்தியென்கின்றார்கள்; ஐஸ்கிரீமே [Ice cream] ஐசுவரியமென்கின்றார்கள்; ஜிஞ்சர்பீரே [Ginger beer] சிரஞ்சீவி யென்கின்றார்கள்; டானிக்கே [Tonic] மேனிக்கென்கின்றார்கள்; கோலாவே [Kola] குளிர்ச்சியென்கின்றார்கள்; தேவபூஜை தேடினுமில்லை; அநுஷ்டானங்கள் அவசந்திரமாயின; உத்ஸவாதிகள் ஒழியலாயின; தர்பணமே அற்பணமாயிற்று; ஜபமே ஜகத்திலில்லை; எச்சில்தீட்டுகளெல்லாம் யேகமாயின; சுசி ருசிகளெல்லாம் சூக்ஷ்மமாயின; சீப்பிச்சாப்பிடுவதே சிரேஷ்டமாயது; நாடகமே நாடுவதாயிற்று; தாசியே தாபரமாயிற்று; வேசியையே விரும்பலாயிற்று; கபடமே காக்ஷியாயிற்று. அநியாயமே அபரிமிதமாயிற்று. பித்தலாட்டமே பிரகாசமாயிற்று, இறுமாப்பே இலவசமாயிற்று; போக்கிரித்தனமே பூஷணமாயிற்று. திருட்டே தெய்வமாயிற்று, களவே காணியாக்ஷியாயிற்று. கொலையே கொண்டாடலாயிற்று. குடிமார்க்கமே குதூஹலமாயிற்று கஞ்சாவே காயகற்பமாயிற்று. அபினே அநந்தமாயிற்று துன்மார்க்கமே தொடங்கலாயிற்று. சன்மார்க்கமேசுருக்கலாயிற்று. பொறுமையே பொல்லாப்பாயிற்று. பொறுமையே பூணுதலாயிற்று. அக்கிரமமே ஆதிபத்தியமாயிற்று. நீதியே நிக்ரகமாயிற்று. ஒழுக்கமே யிழுக்கமாயிற்று. ஜாதியே பீதியாயிற்று. வியாதிகளே வியாபிக்கலாயின.

கல்வியே சல்லியமாயிற்று. சல்வியே காலக்ஷேபமாயிற்று.

[ஆடவர்களில் அனேகர் நாடகர்களாகிவிட்டார்கள்:]

ஆண் பெண் இருபாலில் முற்பாலின் நிலைமைதான் இவ்வாறாயதே, பிற்பாலின் வரலாற்றைக் கொஞ்சம் கவனிப்போமாயின், பொதுவாகப் பெரும்பாலும் இக்காலத்திய பெண்களை, முற்காலத்திருந்த முதன்மையான பதிவிரதைகளின் பெருமைகளையும் பெயர்களையும் நடைகளையும் மறைத்துத் தற்காலத்தில் தங்கள் கைப்பற்றிய சுப அம்சங்களை முன்னுக் கசக்கேற்றிய மூதேவிகள். முதல் முகல், அறிவில்லா அசடுகள் சுயக்ஞானமில்லாச் சூன்யகாரிகள். தகப்பனுக்கடங்காதப் பிலிகள். தாய்க்கடங்காத் தட்டுகள். அண்ணன் தம்பிகளுக்கடங்கா அதநுவானங்கள். புருஷருக்கடங்காப் பூதங்கள். மாமிக்கடங்கா மந்திகள். ஊருக்கடங்கா ஒய்யாரிகள். குடும்பத்தைக்கெடுக்கவந்த கோடாரிக்காம்புகள். குலத்தைக்கெடுக்கவந்த கொடும்பாவிகள். பொய் சொல்லும் புலிகள், நன்மையறியா நாய்கள். தீமைபுரிந் திண்டிகள். உண்மை பேசுவதில் ஊமைகள். துராசையுற்ற துர்த்தைகள். மானங்கெட்ட மாபாவிகள். நெஞ்சிரக்கமில்லா வஞ்சகிகள். துன்பப்படுத்தும் துரோகிகள். கஷ்டப்படுத்தும்பிரஷ்டைகள். தவமில்லாச்சவங்கள். பிச்சையிடாப் பேய்கள் உற்றார் பெற்றார் உண்ணச்சகியாதஒறிகள். முறைமைகெட்ட மோசக்காரிகள். மயக்கிக்கெடுக்கும் மட்டிகள்; சிரித்துவிளையாடும் செந்நாய்கள். தெருச்சண்டைபோடும் தலைவாரிகள். பதிவிரதையென்பது பாழாயிற்று. பாவிசதையென்பது பவிதமாயிற்று. தருமபத்தினிகள் கருமபத்தினிகளாயினார்கள். [ஆடவர்களிலனேகர் நாடகர்களானது போல, மாயவிகளிலுமனேகர் நாடகிகளாய் விட்டார்கள்.] குங்குமப்பொட்டு கோபித்துக்கொண்டு போய்விட்டது. நடுத்தலைவகுடே நாசமாய்விட்டது. ஒதுக்குவடே உயர்த்

தியாகியது. முழங்கை ரவிக்கையே முதன்மையாயிற்று. மஞ்சளே பஞ்சமாயிற்று. முகத்தில் வெள்ளைமாவை பூசிக் கொள்வதே விதியாயிற்று. ஸோப் தேய்த்துக் குளியாத சுந்தரியே கிடையாது. அறப்புப்பொடியே பறப்பதாயிற்று மெய்யே பொய்யாய்விட்டது. அன்றியும், இவர்கட்கு மட்டித்தனமே மஞ்சக்காணி, பக்ஷபாதமே பண்டகசாலை, பொய்யே பூஷணம், கொடுமையே குலவைபவம், அறியாமையே ஆஸ்தி, கோபமே கொண்டாட்டம், சிடுசிடுப்பே சிங்காரம், தீமையே தித்திப்பு, சண்டையே சர்வமானியம், நன்மையோ நஞ்சு, பேதைமையோ பெருங்காடு மனமோ கருங்கல். கடைக்கண்பார்வையோ நம்முயிரைப் பிளக்குமம்பு. நயமொழியோ எமன். நகைமுகமோ நடலம், நாக்கோ நந்துருணி, வண்ணமோ கபடம், இஷ்டமோ நஷ்டம், இன்பமோ ஏக்கம், அணைதலோ ஆபத்து, மந்திரம் தலையணைமந்திரமே. பின்னும், இவர்கள் ஒய்யாரமாக உடைகள் தரிப்பதும் அவ்வுடைகளுக்கேற்க ஜடை பின்னிக்கொள்வதும், அப்பின்னலுக்கு நுனியில் ஒரு டேப் மடிப்பு சுருட்டும், அச்சுருட்டுக் கேற்க ஓர்வித நடை நடப்பதும், அந்நடை கேற்க கடைக்கண்ணால் திரும்பத்திரும்பப் பார்ப்பதும், அப்பார்வைகேற்க உடலை நெளிப்பதும், அந்நெளிப்புக்கேற்க பல்லையிளிப்பதும், இவர்களது மோகனாஸ்திரங்கள். இத்தகைய நாகரீகத்தையும், விபரீத குணங்களையும் தழுவிய பெண்களைக்கலியாணம் செய்துகொள்வதென்றால், பணத்தில் துராசையுற்றவர்களையும், கேவலம் வறுமையிற்படுத்தவர்களையும் தவிர்த்து யாரும் சம்மதிக்கமாட்டார்களாகையால், கபடமும், கார்ப்பண்ணியமும், இருத்திரமமும், கலகமும், குடிலமும், கூக்குரலும் கெடுபுத்தியும், கேவலமும், கைமயக்கும், கொடுமையும், கோபமும், கௌரவ ஹானியுமுள்ள பெண்களுக்கும் கலியாணம் நடந்துதீரவேண்டுமென்றே கடவுள்

அப்பெண்களின் குணம்சங்களுக்குத் தக்கவாறு ஓர் அற்புதப் பரிகாரமும் ஏற்படுத்தி நடத்திவருகின்றார். அப்பரிகாரம்யாதெனில், வரதக்ஷிணை யென்னும் சிரம தெக்ஷிணையான ஓர் அபராதமேயாகும். மேற்கூறிய விபரீத நடைகள் மாத்திரம் தற்காலத்திய பெண்பிள்ளைகளிடம் நிகழாதிருக்குமேயாகில் இவ்வரதெக்ஷிணையைப்போல் எத்தனையோமடங்கு வதுதெக்ஷிணை கொடுத்த என் அப்பெண்களைக் கலியாணம் செய்யக்கூடாது? ஆனால், அவ்விதப்பெண்கள் கிடைக்குமாயின் செய்யவேசெய்யலாமென்பதே மேனேக்கமாகும். குற்றமுள்ள பெண்களைக் கலியாணஞ் செய்வதனல் விளையுந் தீமையின் காரணமாகவே "பெண்ணைக்கட்டிக் கொள்வாரிலர் கொள்ளிவாய் பேயைக் கட்டிககொண்டாலும் பிழைப்பார்காண்" என முதுமொழி கூறினற்போலும். மேற்கூறிய துர் நடத்தைகளை அநுசரியாது நடக்கையுளும் பெண்களே கன்மணிகளாகவும் குலமணிகளாகவும், கற்பு சிரோமணிகளாகவும், குடும்ப நவரத்தின மணிகளாகவும், பதிவிரதா மணிகளாகவும், தர்ம பத்தினிகளாகவும் அழைக்கப்படுவார்கள் என்பது தேற்றம். முற்காலத்தில் இவ்விதப்பெண்மணிகளே பெரும் பாலும் இவ்வுலகத்துள் நிறைந்திருந்தார்கள். தற்காலத்தில் கேவலம் சிறுபான்மையிலும் சிறுபான்மையாய் இருக்கலாமெனச் சொல்லவேண்டுமேயன்றி, இல்லையெனச்சொல்லமுடியாது. முன் அச்சிரோமணிகள் நடமாடிய காலடி வாஸனை ஒட்டிக்கொண்டிருக்கும் இம்மாநிலத்தில் பிறப்பதனல், அவ்வாஸனவசமாய், எதாயினும் அபுரூபமாக சமுத்திரத்திற் பெருங்காயம் கரைத்தாற்போற். கேவலம் சிற்சிலராவது இருக்கின்றார்கள் என நிச்சயமாய் சொல்வதற்கும் வாயுளறி, இருப்பார்கள் எனவே சொல்லவேண்டியதாயிற்று. அப்படி யிருப்பதினும் அவ்விதப் பதிவிரதத் தன்மையும் மாசற்றவும் நல்யமனத்துடையவர்களுமான

சுயம்பதிவிரதைகள் தற்சமயமரிதென்றால் இல்லையெனவே பொருளாகும். பதிவிரதையென்றால், பதியின் சொல்லை விரதமாகக் கருதி நடப்பவளெனப் பொருள்படும்; எக்கணமும் எவ்வாறும் பதியின் சொல்லைக்கடவாது நடப்பவர்களும் அவ்வாறு நடப்பதினும் பதியின்முன் முகத்தைச் சிணுக்காமலும் முணுமுணுக்காமலும் எக்காலுமுள்ளும் வெளியுமொன்றாய் நடையுறும் பெண்களே பதிவிரதைகளாவார்கள். இதற்கு எதிர்நடையுற்ற மற்றவர்களெல்லாம் பரவிரதைகளேயல்லாது பதிவிரதைகளாகார்கள். இதர புருஷர்களிடமே சிநேகமில்லாது, சுபுருஷனுக்கு எமனாயிருப்பவளே பாவிதையாவாள். உலகத்தில், கொல்லுதலாகியகொடுந்தொழிலேகொலை; ஒருவனைக் கொன்றாற்றான் கொலையோ? அன்று. ஒருவனைத்துன்புறச் செய்வதே கொலையாகும். ஆகலால், சுபுருஷர்கள் எத்திறமைவாய்ந்தவர்களாயினும் அவர்களைத் துன்புறவருத்தாது தெய்வமாகக் கருதி ஒழுகுபவர்களே பதிவிரதைகளாவார்கள். யாராவது தர்மாநுஷ்டான வாலிகள் ஜனங்களது மேற்கூறிய செய்கைகளின் தர்மாதர்மங்களை விவரித்தெடுத்துரைப்பார்களேயாகில் அவர்களை மூடபக்தியென்றும், அஞ்ஞானிகளென்றும், [illegible]ங்கில அக்ஷரங்கற்க ஆரம்பித்தவர்கள்முதல் கற்றவித்தியார்த்திகள்வரை இக்காலவாலிகளானபலர் ஹேளனம் செய்கின்றார்கள். இம்மட்டோ? வருணங்களுக்குரிய ஆச்ரம தருமங்களேற்பட்டிருக்க, கேவலம் காலக்ஷேபார்த்தம் உத்தியோகம், வாணிபம், ஊழியம், விவசாயம்முதலிய சகலத்தொழில்களையும் பிராமணர்களே செய்துவருகின்றார்களென்றால், மற்றைய ஜாதிக்காரர்களுக்கு என்ன பாக்கி இருக்கின்றது? வரைமுறையற்று அவரவர்களுக்கிஷ்டமான தொழிலைச் செய்வது சுபாவமாயின. பெரும்பாலும் எங்குபார்த்தாலும் பிராமணர்களே சகல ஹீனவிருத்திகளையும் செய்யத்துணிந்து விட்டார்கள். விவரமாகக்கூறுவ

தென்றல் விரியுமாதலால், இத்துடன்தொழில் விஷயம்நிற்க, அந்தணர்கள் தமக்குரிய தொழில்களை விட்டு இதரதொழிற்களிற் றினைத்தினை பிரவேசித்து வரவரக் கேவலம் க்ஷீணதெசையையடைவதனால் ஸகிக்கமுடியாத அநாசாரங்கள் ஜகமுழுதும் பரவலாயின. எவ்விதத்துன்பம் வந்துற்றகாலும் தத்தம் குலஆசாரணைகளை மீறிநடத்தல்குற்றமே. யுகதருமமெனச் சொல்வதெல்லாம் விவேகத்தாழ்ச்சியேயன்றி வேறன்று. கல்வியில்லாக் குறைவே விவேகதாழ்ச்சிக்குக்காரணம். ஆனால் அநேகர் ஆசார அநுஷ்டான சன்மார்க்க நடைகளுக்குப்பதிலாக அனேக பிரதி நடை நொடி பாவனைகளை, புதிது புதிதாய் அநுஷ்டிப்பவர்களை கவனிப்போமானால் வாசாமகோசரந்தான்; அநேகர் தத்தம் சுயபாஷைகளுக்கு ப் பதிலாக அன்னிய பாஷைகளையும், சுயஆடைகளுக்கு பதிலாக காற்சட்டை மேற்சட்டை தொப்பி முதலியவைகளையும், விபூதி சந்தனம் கோபிநாமம் முதலியவைகளுக்கு பதிலாக சிலர் சாந்துப்பொட்டுகளையும் சிலர் அஃதில்லாமலும், சந்தியா வந்தன ஆசமனாதிகளுக்கு பதிலாக காபிகுடித்தலும் தேவபூஜைக்குப்பதிலாக வயிற்று பூஜையும், தேவதாப்பிரஸாதத்திற்குப் பதிலாக கேக் Cake ரொட்டி Bread பிஸ்கோத்தும் Biscuit, ஔபாஸனத்திற்கு பதிலாக ஸ்டோவ் Stove அடுப்பில் காப்பிபோடுதலும்தேவதார்ச்சனைக்குப்பதிலாக சீட்டாட்டமும், தேவபாராயணத்துக்குப் பதிலாக நாவல் பாராயணமும், கதாசிரவணத்திற்கு பதிலாக கலித்துறைசிரவணமும், சுவாமிதரிசனத்திற்குப் பதிலாக தாசிதரிசனமும், தேவாலயப்பிரவேசத்துக்குப்பதிலாக டிராமாப்பிரவேசமும், தேவிமாகாத்மியத்துப்பதிலாக வேசி மாகாத்மியமும், தேவதாப்பிரார்த்தனைக்காக சடைவளர்த்தலுக்கு பதிலாக க்ராப் குடிமிகளைக் கத்தரித்து, ஸைட்லாக் கோசா முதலிய கோணக்குடுமிகளை வைத்துக்கொள்ளுதலும். மரவடிப்பாதரக்ஷை செருப்பு முதலியவைகளுக்குப்

பதிலாக பூட்ஸ் [Boots] ஸ்லிப்பர் [Slipper] சடா முதலிய வைகளையும், விரத உபவாஸங்களுக்குப்பதிலாக [Breakfast Dinner Tiffin Supper முதலிய] நாலுவேளை ஆகாரங்களும் விலாப்புடைக்கத் தின்றுவிட்டு கிரமபரிகாரமாக சூதாடுத லும், குடித்தலும் தொழிலாகக்கொண்டு நடந்துவருகின்றார் களைதவிர கிஞ்சித்தும் ஜாதிக்குறிய நன்னடைகளை அநுஸ ரிப்பதே அரிதாய்விட்டது. அதினும் இங்கிலீஷ் படிக்கப் புகுந்துவிட்டாலோ ஸந்தியாவந்தன-ஜெப-தபாநுஷ்டானங் களை விட்டுவிடாதவர்களில்லை; மேலும், இக்காலத்திய ஆண்பிள்ளைகளோ, தத்தம் வருணாசிரமங்களை விடுத்து தத்தாரித்தனமாய் தலையைக் கத்தரித்து கிராப் பண்ணிக் கொண்டு, ஷர்டு, காலர் டை, க்ளிப், கோட், தட்டாடைக் கட்டு, பூட்ஸ், ஸோல்ஜர் ஸ்டிக், ரிஸ்டுவாட்சு, மூக்குக்கண் ணாடி முதலிய சவடாலில்லாது வெளிக்கிளம்புவதே கிடை யாது. பெண்பிள்ளைகளோ தத்தம்மாலியன்ற வரையுள்ள ஒதுக்கு வகுடும், கௌன் போன்ற முழங்கைவரையுள்ள ப்ரில் ரவிக்கையும் ஓர் வெள்ளைமாவை முகத்தில் பூசிக் கொண்டும், இடதுகை சுண்டுவிரல் நகத்தை அடிக்கடி பல்லாற் கடித்துக்கொண்டும், பாழ் நெற்றியோடும் நட மாடுகின்றார்களே யல்லாது குடித்தனமார்க்கப் பெண்களாக எண்ணத்தகா; இவ்விதம் ஒன்றுக்கொன்று தோற்கடிது நடமாடும் பிள்ளைகளையும் பெண்களையும் கண்ணுறுக்கும் பிறர், இப்பிள்ளைகளின் தோற்றத்தினால், இப்பிள்ளைகள் மேல்நாட்டுப் பிள்ளைகளென்றாவது மேல்நாட்டார்களுக்கே பிறந்திருக்கவேண்டுமென்றாவது மனத்துள் நினைத்து பிரஸ் தாபித்தல் போதாது, இப்பிள்ளைகளின் தாய்மார்கள் மேல் நாட்டார்களிடம் விபசாரம் செய்தே இப்பிள்ளைகளைப் பெற்றிருக்கவேண்டுமென, வெளிப்படையாய் டாம் டாம் சாற்றவும்வேண்டுமோ? இத்தகைய பிள்ளைகளினால் இத் தகைய கௌரவம் கிடைக்கப்பெற்ற இப்பிள்ளைகளின்

தாய்தகப்பன் மார்களும் மேன் மேனு மிப்பிள்ளைகளைக் கொண்டாடி இழவெடுப்பதனாலேயே இப்பிள்ளைகள் பற்பல விதத்திலும் கெட்டுப்போய் பின்னிட்டுத் திண்டாடுவதை ஓர் காக்ஷியாகவும் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இக் காலம், நல்லாரில்லா இப்பொல்லாவுககத்தின் கண், எத் தனையோ துன்மார்க்கக்கட்டுகளும், வெளிவேஷங்களும் கௌரவப்பட்டங்களும் அநாசாரமான நடைகளும் போட்டா போட்டியுற்ற டிராமா வென்னும் வெட்கமான மில்லாத நாடகக்கூத்துகளும், பொதுவாக எத்தகைய அநா வசியமும் அக்கிரமுமெனத் தெரிந்துங்கூட மேன்மேனும் அவைகள் கொண்டாடப்படுவது எத்தகைய மதியீனமென் பதை கவனிப்பாரில்லையே. ஜனங்களுடைய அக்கிரமங் கள் ஜகத்தையல்லவோ மேன்மேலும் ஆபாஸஞ்செய் கின்றது. உலகத்தில். இருபாலுள்ளும் நன்னடக்கைப்பிள் ளைகள் கேவலம் சொற்பமாயும், மேற்கூறிய நடையுற்ற பிள்ளைகள் எங்குபார்த்தாலும் அபரிமிதமாயுமிருக்கக் கார ணமாலோசிக்குங்கால், அப்பிள்ளைகளைப் பெற்றுவளர்த்த தாய்தந்தைகளின் அவிவேகத்தினாலேன்றே கூறத்துணிவுற லாம். பிறந்ததினமுதல் அவைகளுக்குக் கல்யாணமாகும் வரை, பெண்ணாயிருந்தால் நல்ல அழகான மாப்பிள்ளையைப் பார்த்தும் இங்கிலீஷ் படிக்கிறவனுக்கும் அப்பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்கவேண்டுமென்றும், பிள்ளையா யிருந்தால், நல்லசுந்தரமானதும் ஆர்மோனியா வைத்துக் கொண்டு சபையில் கூச்சப்படாமல் பாடுகிறதுமான பெண் ணைக்கல்யாணம் செய்துவைக்கவேண்டுமென்றும். அவ்வீட் டோரெல்லோருக்கும் ஜெபமே தவிர, குழந்தைகள் நன்றாய் படிக்கவேண்டும், அவைகளுக்கு நற்குண நன் னடக்கைகளை கற்பிக்கவேண்டும், நீதிமார்க்கங்களை போ திக்கவேண்டும் ஜாதியாசாரமுறைகளை உபதேசிக்கவேண் டும், குடும்பகாரியங்களில் நிருவகிக்கப்பயிற்றுவிக்கவேண்

டும் என்ற வெண்ணம் கனவிலும் கிடையா, இளமை முதலே குழந்தைகளுக்கு அலங்காரம் செய்வதிலும் அநாக ரீகமான நடையுடைப் பாவனைகளை கற்பிப்பதிலும் கவனத் தை செலுத்தி வழக்கத்தில் கொண்டு வருவதனாலேயே தற்கால குழந்தைகள் குடித்தனமார்க்கத்தினுக்கு யோக் கியமற்றவர்களாகின்றார்களென்பது எடுத்துக் காட்டாமலே துலங்கும்.

கல்விக் குறைவினாலுற்ற, மௌட்டியத்தினாலும் அவி வேகத்தினாலும் ஜனங்கள் புத்திமலினமுற்றும் கடாற்றும் நடப்பது ஜகத்தை யல்லவோ ஹதாஹதஞ் செய்தழிக்கின் றது. மேலும், முற்காலங்களில் ஸ்திரீஜாதிகள் 9 வய தில் ருதுவாகி 10-வயதில் குழந்தை பேறுவதுண்டா? ஸ்திரீகளுக்கு பிரசவத்தினால் இவ்வளவு மரணபாதை களுண்டா? தீண்டா ஸ்திரீகள் புண்யநதிகளில் ஸ்நானம் செய்வதுண்டா? இவ்வளவு விபசாரிகளுண்டா? அறுதலி சுமங்கிலி யாவதுண்டா? அறுதலி குழந்தை பெறுவதுண் டா? பலஜாதி ஸ்திரீகளும் தாசியாவதுண்டா? தகப்பன் கூடப்பிறந்தவர்களை யாவது, தாயையாவது, தன் கூடப் பிறந்த சகோதர்கள் மனைவிகளையாவது, புத்திரிகைகளை யாவது, தன் மனைவியைப்பெற்ற, தன் மாமியையாவது பெண்டாளுவதுண்டா? மதப்பிரஷ்டமாவதுண்டா? கால க்ஷேபார்த்தம் கருமத்தை விட்டவர்களுண்டா? இவ்வளவு கொலைகளவுகளுண்டா? மதுபானஞ்செய்பவர்களுண்டா? இவ்வளவு ரிடெயில் ஷாப்புகளுண்டா? ஆஸ்பத்திரியில் பிராமணர்கள், பள்ளர் பறையர்கள் முதலிய ஹீன ஜாதிப் பிணங்களைத்தொட்டு அறுத்துப் பரிசோதிப்பதுண்டா? பிதுருதினங்களில் பிராமணார்த்தம் சாப்பிடுகிறவர்கள் காலையிற்றமது இல்லத்தில் வயிறுநிறைத்தின்றுவிட்டு வந்து சாப்பிடுவதுண்டா? புரோகிதர்கள் தம்வீட்டில்விளாப்பு டைக்கத்தின்றுவிட்டு திவசம் பண்ணிவைப்பதுண்டா? இவ்

வளவு ஜனனமரணமுண்டா? ஆட்டுவரி, காட்டுவரி, சீட்டுவரி, நாட்டுவரி, பாட்டுவரி, மாட்டுவரி, ரோட்டுவரி, வீட்டுவரி, பனைவரி, மனைவரி, மண்டிவரி, வண்டிவரி, ஜெட்காவரி, கோச்வரி, ஸைக்கிள்வரி, ஷாப்புவரி, கடைவரி, தொழில்வரி ஜலவரி, ஜனவரி, சாக்கடைவரி, கக்கூஸ்வரி முதலிய கடும்வரிகளுண்டா? கோவில் சொத்தைக் கொள்ளையடிக்கிற குருக்களும், தேவாலய சொத்தை கொள்ளையடிக்கிற தருமகர்த்தாக்களுமுண்டா? லஞ்சம் வாங்கிக் கொண்டு நியாயவாதங்களைத்தவிடுபொடியாக்கும் அதிகாரிகளுண்டா? வாதிப் பிரதிவாதிகளுக்கு சாக்ஷிகள் தயார் செய்துகொடுக்கும் நியாயவாதிகளுண்டா? பஞ்சாங்கங்களில் திதி பேதகங்களும் சந்தேக கிரகணங்களுமுண்டா?

[பஞ்சாங்கங்களைப் பற்றிய ஓர் விஞ்ஞாபனம்.]

பஞ்சாங்கத்துக்கோ பயித்தியம்பிடித்துவிட்டது. திதி நிர்ணயமே நிச்சயமின்றி தேடித்தெரிந்து கொள்ளவும் வேண்டியதாயிற்று; திவசங்களெல்லாம் திண்டாடலாயின; அமாவாசைக்கே ஆபத்துவந்துவிட்டது; புண்ணியகாலங்களெல்லாம் அந்நியகாலங்களாயின; நக்ஷத்திரங்களுக்கே நாழிகை பேதமாயிற்று; தியாச்சியமே வியாச்சியமாயிற்று; விரதாதிகளெல்லாம் வித்தியாசமாயின; பண்டிகை நாளே பறக்கலாயிற்று; எங்குமே பஞ்சாங்கங்கள் அபரிமிதமாகி விட்டபடியால் எவ்விஷயங்கட்கும் தினசுத்தியை நம்பக் கூடவில்லை. பஞ்சாங்ககணிதர்கள் "ஒரு ஊரில் இரண்டு பைத்தியகாரன்" என்ற பழமொழியைப் பொய்யாக்கி "ஒரு ஊரில் பலபைத்தியகாரன்" என்றபுது மொழியை மெய்யாக்கி "அபத்தப்பஞ்சாங்கங்களில் அறுபதுநாழிகையும் தியாச்சிய" மென்பதை ருஜூப்படுத்தியும் விட்டார்கள். இவ்வாறு நிலைமையில் எவ்வாறு சுபமுகூர்த்தங்கள் அகப்படும்? கணிதப் பயிற்சியின் வாஸனை யரியாதவர்கள் யெல்லோரும்

இக்காலத்தில் பஞ்சாங்கக்காரர்கள் தான். போலிப் பஞ்சாங்கம் கணித்து விற்பனைக்கு வெளியிட்டு விட்டால் போலி பஞ்சாங்கம் சுத்தப்பிரதிகளுக்கு ஈடாகுமா? இப்போலிப் பஞ்சாங்கம் கணிப்பவர்களுக்கு தெய்வசகாயமாகுமா? இப்போலிப் பஞ்சாங்கங்களை அநுஸரித்து நடப்பதினுலுண்டாகும் விபரீதங்களோ கோடாநுகோடியாயினும் சிலவற்றை கவனிப்போம்.

ஜாதகங்களின் ஜனனநக்ஷத்திரங்களை ஸரியாகநிர்ணயிக்கக்கூடாமையால் இராசிபலாபலங்கள் தவறிப்போய் விடுகின்றன. அநேக ஸமயங்களில் சிராத்தாதி திதிகளும் தவறி சிராத்த நஷ்டமும் லபிக்கின்றது. சிராத்த நஷ்டத்தினுல் பாபம் சம்பவிக்கின்றது. பாபஸம்பவத்தினுல் குலம் க்ஷீணதேசையடைய நேரிடுகின்றது. குலம் க்ஷீணதெசையடைவதனுல் அநாசாரம் வியாபிக்கின்றது. அநாசாரம்வியாபிப்பதனுல் ஜாதி கெட்டுப்போகின்றது. ஜாதிகெட்டுப்போவதனுல் குலம்நசிக்கின்றது. அதனுல் நரகம் நேரிடுகின்றது. நரகம் நேரிடுவதனுல் பிதுருதேவதைகளுக்கு அமர்வாசை திதி தினங்களில் திலோதகமும், சிராத்த திதி தினங்களில் பிண்டங்களும் இல்லாமற் போகின்றன. அப்படி இல்லாமற் போவனுதல் பிதுருதேவதைகளும் நாகத்தையே யடைகின்றார்கள். ஆகையால், இப்போலிப் பஞ்சாங்ககணிதர்களையெல்லாம் இப்பாவம் விட்டுவிடுமா. சொல்லச்சொல்ல விரியுமாதலால் இஃதுடன் நிருத்தி மேனுக்க, ஒவ்வொரு ஜாதியாருக்கும் தத்தம் சுயபாஷையே தேவபாஷைக்கு ஸமம்; மற்றைய காமக் குரோத லோப மோக மத மாச்சரிய அகங்கார மமகார ஸம்மந்தமான விஷயங்களைபோதிக்கும் கதைகளைக் கற்கக்கூடாவேனவே பெரியோர்களால் கூறப்படுகின்றன. தெய்வசுவருபத்தையரியவும், ஜீவகாருண்யம் தருமம் நீதி அன்பு முதலியவைகளைப் பாராட்டும்படிக்கான மெய்ஞானமுண்டாவதற்கும் தேசியக்கல்வியும் யாஷாபி

விருத்தியுமே சிறந்ததென்பனநிராக்ஷேபம். தற்பொழுதோ நம்மவர்கள் முக்கியமாகப் பிராமணர்கள் அநுஷ்டித்து வரும் ஆசாரங்களெல்லாம் பெரும்பாலும் தகாமையென்றே விளங்குகின்றன; அவற்றை சாத்தியமானவரையில், ஒரு பெரிய விருக்ஷத்தைக் கொடுவாள் அல்லது கோடாலியால் வெட்டுமேல வெட்டாக தினம் ஒரு வெட்டுப்போட்டுக் கொண்டேவந்தால், சிலகாலத்தில் அந்தவிருக்ஷம் விழுந்து விடுவது போல, நாளாவிருத்தியிற் படிப்படியாய் நிவர்த்தித்து சீர்படுத்தவேண்டுவதவசியமேயாகும்.

ஆகா! உலகத்தில் காலத்தினால் என்னவென்ன விபரீதங்களெல்லாம் நடக்கின்றன காலமே ஒருவருக்கு எல்லாவற்றையும் நன்மையாகவும் மற்றொருவருக்குத் தீமையாகவும் கூட்டுவிக்கின்றது. காலமிவ்வாறு மனிதர்களை வேறுபடுத்துவதே விதி. விதியே பெரிது. அதை வெல்ல வல்லார் யாருமிலர். விதியோ பூர்வஜென்ம கன்மத்தின் பாபபுண்ணியங்களை அனுஸரிக்கின்றது. அதுகாரணம்பற்றியே வேதங்கள் நம்மை யெப்பொழுதும் ஸத்கருமங்களையே செய்யும்படி தூண்டுவது உண்மையினும் முண்மையே. இந்நவகண்ட பூமண்டலத்தின்கண் நாம் தொன்றுதொட்டு, வெகுகாலமாயும் பரம்பரையாயும் வசித்துவரும் இந்தத் தேசத்தின் பெயர் இந்தியா. இந்திரியத்திற் கிருப்பிடமென மந்தகாசிக்கும் இந்தியா இது. பாவலர்போற்றும் புண்ணிய பூமி இது. நாவலர்நாளும் துதிக்கும் நாடு இது காவலர் கைகாக்கும் காசினி இது; பார்க்கப் பலரும் ஓடிவரும் பழைய தேசம் இது. மாயையை மயக்கும் மகிமைப் பூமி இது. தேவதைகள் வாழும் தெய்வஸ்தலம் இது. சிவசிவ என்று துதிக்கும் சிங்கார பக்தர்களிருந்த விடம் இது. கிருஷ்ண கிருஷ்ண வென்று கிருபாத்தியானஞ்செய்யும் கின்னரகிம்புருடர்கள் வாழ்ந்தவிடம் இது. ராமராம என்று இரவும் பகலும் ரமிக்கும் ரமணர்கள் வசித்தவிடம்

இது. சிதறுண்டு யிடிபட்ட கோவில்களைப் புதுப்பிக்குங் கருணைவாய்ந்த தெய்வ பூமி இது. ஏட்டுப்பிரதிகளில் எழுதியுள்ள நூற்களை அச்சிற்கொடுத்து பதிப்பித்து வெளியிட்டு உபகரிக்க ஆரம்பித்த விடம் இது. எங்கும் அன்னதானம் செழித்துநடக்கத் திருமனதுகொண்ட திவ்விய பூமிஇது. விபூதிபூசும் வீரியர்கள் வசித்தவிடம் இது உத்தமோத் தமர்களான ருத்திராக்ஷமணி கண்டர்கள் நர்த்தனம்செய்த தர்ம பூமி இது. பதிவிரதா சிரோன்மணிகள் பணிந்துலாவிய பட்டபூமி இது; உத்தமஸ்திரீகளுலாவிய உச்சபூமி இது. வேதஸம்பன்னர் வஸித்த வித்யா பூமி இது. தர்மராஜர் வஸித்த ஸத்ய பூமி இது. நீதி மன்னர்களது நிர்மல பூமி இது, பதினெட்டு சித்தர்களும் பரிந்துலாவியவிடம் இது. பிரஹ்மக்ஞானிகள் பாதம் பதிந்த விடம் இது. பக்தசிகாமணிகள் பிறகாசித்த விடம் இது. குருமார்களை கௌரவ விலாசத்தில் அமர்த்திப் போஷித்தவிடம் இது. கடந்ததைக்கனவெனவும்நடப்பதை நனவெனவும் நண்ணும் நாடு இது. ஓம் நமோ நம வென ஒழுகும் ஒப்பிலாப் புண்ணியபூமி இது. வைதீக விலாசத்தை நோக்கிய தர்மபூமி இது. பக்தர்கள் அடிகளை பணிந்த நாடு இது. இதிற்பிறப்பதும் பூர்வஜன்ம புண்ணிய விசேஷமென்றுசொல்லவும் தடையுளதோ? நமது ஜாதிவருணாசிரமங்களை நிலைநிறுத்தவும், கருமானுஷ்டானங்களை நிலைநாட்டவும், நமதானந்தம்பெருகிவரவும் நமது பெரியோர்களைக் கண்டு நாம் கைதொழவும், நமது மதம் விருத்தியாகவும், நமது பழமை புதுமையாகி வெளிவரவும், நாடெங்கும் நன்மை விளையாடவும், பக்தியோகம் பலருக்கும்விளங்கவும், ஞானமிருதம் ஊற்றென ஊறிவரவும், தற்காலவேஷம்அறவும், தாகந்தீரவும், வேண்டுமென்றஎண்ணத்தை ஒவ்வொருவரும் வைராக்கியமாகக்கொண்டு, பிரயத்தினம் செய்தால் பரமோத்தமமான பரமஹம்ஸ உதயம்

பொங்கிவந்து நமது தற்கால பாவனுரூப நடையுடைப் பீடைகளையெல்லாம் இருந்தவிடம் தெரியாது, பறந்தோடச் செய்துவிடுமென்பது நிஸ்ஸந்தேகம். தேசியக்கல்வியின் சூன்யத்தையும், நம்மிந்தியாவின் ஜனங்களை எத்தனையோ கோலங்களுக்கிரையாக்கிய தற்காலநாகரீகத்தின் ஆசாபாசங்களையும் அகற்றி, சுத்த சூன்யமாக்கி வாழ்வதே நன்மைதருவது. ஸகலமும் ஜனங்களுக்குச் சிறுவயதிலிருந்தே பழக்கமாவதுபற்றியே,

" இளமையிற் பழக்கம் எப்பொழுது மறவாது"
" தொட்டிற் பழக்கஞ் சுடுகாடுமட்டும் "

" ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா? " என்பவைகளினாலும்தெரிந்து கொள்க. தவிரவும், நம்முன்னோர்கள் முதல்நம்மவர்வரைநமதுபாலியக்குக்குழதைகட்கு ஐந்துவயதின் துலக்கத்திலேயே பள்ளிக்கூடத்தில் வைப்பது தொன்று தொட்டு வழக்கமாக வருவதுயாவருமறிந்ததே. எதற்காக? கல்விப்பயிற்சிக்காக வென்பதும் தெரிந்த விஷயம். அதினும் " இளமையிற்கல் " என்பதில் ஒரு விசேஷம். அதிபாலியத்தில் கற்கும் கல்வியே ஒரு வீட்டின்அஸ்திபாரம் போல நீடித்து நிலைநிற்கக்கூடியது. அதினும் இன்னுமொரு ஸ்வாரஸ்யம். கல்விகற்க ஆரம்பிக்கையிலே " ஹரிஓம் " எனவே முதல் முதல் கற்பிக்கப்படுகின்றோம். ஏனென்றால், கல்விபயிலுவது ஞானத்தையடைய வேண்டியே. அந்தஞானமாவது பிருமக்ஞானமே. பிருமக் ஞானமாவது பிரணவமந்திரமே, பிரணவமந்திரமாவது " ஓம் " என்பதே. ஆனால், " ஓம் " என்பதுபிரணவமந்திமாயிருக்க அம்மந்திரத்தை முதல்முதல் உச்சரிக்காது ஆரம்பத்திலேயே " ஹரிஓம் " என வுச்சரிக்கக்காரணம், யாதென்றால்அந்த " ஓம் " என்னும் பிரணவமந்திரம் சித்திக்க வேண்டுமாயின், ஹரியாகிய பகவானுடைய

கிருபை யிருந்தாலன்றி பிரணவமந்திரம் சித்திக்கமாட்டா தாகையால், "ஹரி" என முன்னும் "ஓம்" எனப் பின்னு முச்சரித்து, "ஹரிஓம்" எனக்கற்பிக்கப்படுகின்றோம். இத ஞல் இளமை முதல் நாம் பிரயத்தனப்படுவதெல்லாம் அறி வாகிய ஞானமுண்டாகி பகவத்யானம் செய்து நம்மாத்துமா வாகிய ஜீவன் முக்தியடைவதற்கே யன்றி வேறன்று. இதற் குமாருக, ஆரம்பத்திலே அதாவது "ஹரிஓம்" என்ற அக்ஷ ரங்கள் உச்சரிக்கும் முன்னமே தற்காலத்திய மக்கள் "தஸ்புஸ்" என்று ஆங்கிலம் கற்பதை அமிருதவருஷம் பொழிவதாகக்கேட்டு ஆநந்திக்கும் பெற்றோர்களை நாம் அநு தினமும் பார்க்கின்றோம். சுயபாஷையில் உணர்ச்சி குறைவு படப்பட நம்ஜாதி ஆசாரானுஷ்டானங்களெல்லாம் சுத்த சூன்யமாகத்தடையே இல்லை. அச்சுய பாஷையினும் பெரும் பாலும் நம் தென்னுடுகள் முழுதிலும் தமிழ் பாஷையே பழக்கத்தில் செழித்து வியாபித்திருப்பது பற்றி மேம்பா டுற்றதென விளங்கலாயிற்று. கல்விப்பொருளின் சிறப் பிவ்வாறிருக்கச் செல்வப் பொருளின் தன்மையை சற்று கவனிப்பாம்.

"செல்வமே சிறந்தவன்மை என்னினும் செல்வந்தானும்
நல்லறி வில்லையாயின் நகைப்புக்கே பேதுவாகும்
அல்லலும் விளையும், அன்றி அதிகமா வாசையுண்டாமால்
சொல்லிய அறிவுசேர்ந்த செல்வமே சுகமுண்டாக்கும்!"

இவ்வுலகப் பிரவர்த்தியில் நிற்கும் மாந்தர்களனைவரும், பொருட்செல்வத்தின் வழியிலமர்ந்தே தீரவேண்டும். ஆயி னும், அறிவின்றியவர்கள் செல்வத்தினுல் சிறப்புறுவது பிரதிபலிக்கவேமாட்டாது.

மனிதர்களுக்கு இம்மையில். சீரையும் சிறப்பையும் பெ ருமையையுமுண்டாக்குவது செல்வமேயாயினும் அறிவுற்ற வர்களிடத்துள்ள செல்வந்தான் பிரகாசமாகச் சிறப்பினை யுடையதாகும்.

மறுமையில் சுகமெய்துவதற்கும் அறிவோடுற்ற செல்வமேபெருங்கருவியாயிருக்கின்றது. ஒருவன் தன்னிடத்துள்ளசெல்வத்தினால் தானம், தருமம், ஆலயப்பிரதிஷ்டை, தண்ணீர் பந்தல் வைத்தல், அன்னசத்திரமேற்படுத்தல் முதலிய தரும விஷயங்களை மனதார நடத்தி வருவனேல், அத்தருமங்களின் புண்ணியப்பயனாய், மறுபிறப்பில் தேவனாய்ப்பிறந்து, அமிருதாதி போகங்களை யனுபவித்து, இன்புற்று, ஆங்கு சிலகாலம் வாழ்ந்து, அப்பலன் க்ஷீணித்ததும் மறுபடியும் இவ்வுலகில் செல்வவந்தனாய்ப் பிறந்து சகலவின்பங்களையுமனுபவிக்கையிலும் அறநெறியில் நின்று புண்ணியத்தை விருத்தி செய்வானாகில், அடுத்த மறுபிறப்பில் ஞானியாகி, ஈசனது ஸாயுஜ்ய பதவியை யடைந்து, பாவத்திற்கேதுவான பிறப்பு, இறப்புகளை யொழித்துக்கொள்வான். இவ்விதப் பதவியை யடைவதற்கு வேறு பலவழிகளிருப்பினும், எளிதில் கைகூடச்செய்வதற்கும் பிறவித்துன்பத்தை யொழித்துக்கொள்வதற்கும் துணைக்கருவியாயிருப்பது இச்செல்வமேயாகும். இக்கருத்தினை யனுசரித்தே,

"பொருளில்லார்க் கின்பமில்லை, புண்ணியமில்லை,
மருவிய கீர்த்தியில்லை, மைந்தரிற் பெருமையில்லை,
கருதிய கருமமில்லை, கதிபெற வழியுமில்லை
பெருநிலந்தனிற்சஞ்சாரப்பிரேதமாய் திரிகுவாரே."

என்றும் பெரியோர் கூறியுள்ளார்.

எத்தகையஅமைதியுடனும், விசுவாசத்துடனும் நடந்துகொள்வோனாயினும், அவனிடத்தில் செல்வமொன்று மாத்திரமில்லேல், அவனது நற்குணங்கள்யாவும் பயனற்றனவாய், அவனைக்காண்போர் யாவரும்மரியாதையின்றி கடுகடுப்பாகவும் அலக்ஷியமாகவும் பேசுவார்கள். ஆனால் செல்வமொன்று மாத்திரமிருந்துவிட்டாலோ அவனே இராஜசபைக்கும் மற்றுமுள்ள சகலவித உபசரணைகளுக்கும் உரியவனாக யாவரும் போற்றிப்புகழ்கின்றார்கள். அவனையே எல்லோரும் பணிவதும், அவன் காலால் இட்ட வேலைகளை தலை

யால் முடிப்பதும், கைகட்டி வாய்பொத்தி நிற்பதுமாக அவனைச் சுற்றிச்சுற்றியே சூழ்ந்து நிற்பது வெகு சகஜமாயிருக்கின்றது. முன்பின் முகமறியாதவர்களும் அவனிடம் பந்துத்துவம் கொண்டாடி சித்தப்பா, அண்ணா, மாமா, அத்தான், அம்மாஞ்சி யென்று சொந்தம் பாராட்டுவது மிக்க இயற்கையாயிருக்கின்றது. ஆகையால் சுருக்கமாக!—ஒருவனுக்கு செல்வமுற்றகாலத்தில் பலர் அவனைச்சூழ்ந்து கொண்டிருப்பதும், அஃதற்ற காலத்தில் அவனைத் தனிமையாக்குவதும் இவ்வுலக வியல்பாகவே யிருக்கின்றன. இதனால் செல்வம் ஒருவாறு இன்றியமையாததெனவும் தெளிவுறத் தெரிகின்றோம். ஆனால் செல்வத்தை யீட்டுதலோவென்றால் இலேசானதல்ல.

"இன்னறரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—யன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ! பிறர்பா
விழத்தலுந் துன்பமே யெண்."

என்னும் நீதிவெண்பாவிற் கூறியபடி செல்வத்தைத் தேடும் பொழுதுந் துன்பம், அவ்விதந் தேடியதை வைத்துக் காப்பாற்றும் பொழுததனினுந் துன்பம், அவ்விதந் தேடிக் காப்பாற்றியதை சிலவழிக்கும்பொழுதும் மகாதுன்பம். இவ்வாறு செல்வப்பொருளைத் தேடத் தொடங்கிய காலம்முதல் முற்றும் துன்பமாகவே வெளிப்படையாய் துலங்குகின்றது.

இதுகாறும் யாம் சுருதி யுக்தி அனுபவங்களால் செல்வப் பொருளைவிடக் கல்விப்பொருளே சிறந்ததெனப் பன்முறையும் விளக்கித் துலக்கிக் காட்டியதை முற்றும் நன்றுயறிந்த, செல்வக் குழந்தைகளைப் பெற்ற, தாய் தந்தையரின் பிரதான கடமையோ வென்னில்,

1. தம்தம் மக்களுக்குக் கல்வி கற்பிப்பதேயன்றி பொ தேடிவைப்பதல்ல.
2. தம்தம் மக்களுக்குக் கல்வி கற்பிப்பதினும் இடைவிடா முயற்சி அத்தியாவசியம்.

3. தம்தம் மக்களுக்குக்கல்வி கற்பிப்பதுடன்செல்வமும் தேடிவைக்கின் மிக்க மேன்மையே. ஆனல் அவ்வி தம் தேடிவைக்கும் செல்வமானது தக்க ஸன்மார்க்க நெறியில் உபயோகப் படுத்தப்பட்டாலன்றி பிரயோ ஜன மாகமாட்டாது. இதற்கு நேரிடையாகக் கல்விப் பயிற்சியற்ற மக்களுக்கு ஏராளமான செல்வத்தை மாத்திரம் தேடி வைப்பதானது கற்றவர்களிடத் துண்டாகிய வறுமையினும் கொடிய துன்பத்தை விளைவிக்குமென்பதன் பொருட்டே.

" நல்லார்கட் பட்டவறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்டதிரு."

என நாயனரும் கூறியுள்ளார்.

ஆதலால், செல்வத்தைவிட கல்வியே சிறந்ததெனச் சொல்லச் சற்றேனும் தடையுளதோ?

திருஷ்டாந்தமாக:—

அறிவைப் புகட்டுபவள் கலைமகள் (ஸரஸ்வதி எனவும், செல்வத்தைக் கொடுப்பவள் திருமகள் (இலக்ஷ்மி) எனவும் யாவரும் அறிந்த விஷயம். ஓர் ஸமயம் கலைமகளுக்கும் திரு மகளுக்கும் " அறிவு சிறந்ததா? செல்வம் சிறந்ததா?" என ஓர் ஸம்பாஷணை ஏற்பட்டதில், கலைமகள் அறிவு சிறந்த தெனவும், திருமகள் செல்வம் சிறந்ததெனவும், ஒருவருக் கொருவர் நெடுநேரம்வரை வாக்குவாதம்புரிந்தும், இன்னது சிறந்ததென நிச்சயம் இருவருள்ளும் தெளிவுறாமையினல் கடைசியாக இருவரும் ஒருங்கே சேர்ந்து ஓர் தீர்மானமான ஒப்பந்தம் பின்வருமாறு செய்துகொண்டார்கள் :—

முதல்முதல் திருமகள் ஒரு வறியவனுக்கு ஏராளமான செல்வத்தைக் கொடுப்பதாகவும் அதனல் அவன் எவ்விதப் பயனை அடைகிறு னென்பதை அறிந்துகொள்ளுமாறு, கலை மகள் அவனுக்கே தெளிந்த அறிவை முன் கொடாதிருந்து அவனுடைய செல்வத்தின் தன்மைநிலைமை அறிந்தபிறகே

தக்க ஸமயத்தில் கொடுப்பதாகவும், அதனால் அவன் எவ்விதச் சிறப்பினை அடைகின்றான் என்பதையும் தெளிவுறுவோமென நிச்சயித்துக்கொண்டு, அவ்விருவரும் தம்தம் ஒப்பந்த நிபந்தனைப்படி செய்யத் தொடங்கினார்கள். திருமகள் ஓர் வனத்தின்வழியாய் சென்றுகொண்டிருந்த "ஞானசூனியன்" என்ற ஒருவறியவனுக்கு ஏராளமான நாணயங்களும் கொழுக்கொழுவாக எண்ணிக்கையி லடங்காத தங்கப் பாளங்களுமுள்ள ஒரு புதையல் அகப்படும்படி செய்தனள். கலைமகளோ அவனுடைய இயற்கைப் பெயருக்கொப்ப அவனுக்குச் சற்றும் அறிவைப் புகட்டாமலும் அப்புதையற் செல்வத்தின் பயன் இன்னதென நன்கு விளங்காதிருக்குமாறுஞ் செய்தனள். இவ்வாறிருக்க, அவ்வாரண்யத்தின் மார்க்கமாய் வேட்டையாடச் சென்று திரும்பிய ஓரரசன், ஆங்கு ஏராளமான நாணயங்களையும் தங்கப்பாளங்களையும் குவியல் குவியலாக குவித்து வைத்துக்கொண்டும், அதனருகே குறு குறு என்று விழித்துக்கொண்டும், உட்கார்ந்து முழங்காலைக் கட்டிக்கொண்டுமிருந்த ஞானசூனியனைக்கண்ணுற்று [தம்மனத்துள்] இவனை நமதரசிளஞ் செல்வக்குமரிக்கு மணம்புரிவிப்போமாயின் இச்செல்வத்தினால் நமது புத்திரியுஞ் சுகப்படுவாள், நமக்கும் ஸமயாஸமயங்களில் நம் மருமகன் பொருளுதவிசெய்யக்கூடுமென வெண்ணமுற்று, அதிவிரைவாய் இராச்சியமடைந்து, [வெளிப்படையாய்] தமது பிரதான மந்திரியினிடமாக ஆரண்யத்தில் தாம் கண்ட ஞானசூனியனது நிலைமையையும் தமதுள்ளக்கருத்தினையும் விபரமாக அறிவித்து அபிப்பிராயம் கேட்க, மந்திரியும் யுக்தமாகவே செய்யலாமெனப் பதிலுரைத்தான். உடனே பல்லக்கு ஸகிதம் மந்திரியைப் பல தூதர்களுடன் அவ்வாரண்யத்தின்கண் குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பி அச்செல்வத்தின் அருகிலுட்கார்ந்திருக்கும் மனிதனை அப்பல்லக்கில் ஏற்றிக்கொண்டும் அந்நாணயங்களையும் பொற்பாளங்களையும் பந்தோபஸ்தாய் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு அரண்மனைவந்து சேரும்படிக்கும்

ஆக்ஞாபித்தனுப்பினான். மந்திரி அரசனுக்னைப்படி ஆரண்யம் சென்று அரசனுல் குறிப்பிடப்பட்ட இடத்திற்குவந்து அம்மனிதனைக் கண்டு வந்தனம்செய்து, அரசனது அபிமானத்தையும் ஆக்ஞையையும் தெரிவிக்க, ஆங்கு ஞானசூனியனுக்கும் மந்திரிக்கும் நடந்த சம்பாஷணை பின்வருமாறு:—

ஞானசூனியன்—நீங்க யாரையா?

மந்திரி—நான் இவ்விராஜாங்க அரசனுடைய மந்திரி. இவர்கள் தூதர்கள்.

ஞா—வியாச்சியமாம்; பூதங்களாம், போங்கய்யா போங்கோ?

மந்திரி—நான் இராசனது அமைச்சன்.

ஞா—சமைச்சிருக்கா ? எங்கனே ?

மந்திரி—[மனத்துள்] இவன் சுத்த முட்டாள். காட்டாளாயிருக்கின்றான் எனவெண்ணி [வெளிப்படையாய்] ஐயா! அரண்மனைக்குப் போகலாம் வாருங்கள்.

ஞா—எய்யா! இதென்னய்யா? இத்தாம் பெரிய பொட்டி?

மந்திரி—இது பெட்டியல்ல! பல்லக்கு.

ஞா—போங்கய்யா ! பொய்ச்சொர்ரீங்க ?

மந்திரி—பொய்யல்ல! பல்லக்குதானிது.

ஞா—யென்னத்துக்கையா பல்லாக்கு? கல்லாணமா?

மந்திரி—கல்யாணத்திற்காகத் தங்களை அழைத்துச் செல்வதற்கு.

ஞா—அளச்சொல்லவா? நீங்கபோய் அளுங்கோய்யா?

மந்திரி—அழ அல்ல! தங்களை அரசனண்டையில் கூட்டிப் போவதற்கு.

ஞா—எ ஆத்தாடி! சண்டைக்குப் போனாக்காத் தலைபோயிரும்! நா வரமாட்டேன்?

மந்திரி-[மனத்துள்] இவன் புத்தியில்லாமல் பிதற்றுகின்றான் மரியாதையாக வரமாட்டான்போலிருக்கிறது. இவனை கட்டாயப்படுத்தியே கொண்டு போக வேண்டும், என

எண்ணி, (வெளிப்படையாய்) ஐயா! வராமல்போனால் பலாத்காரஞ்செய்து கொண்டுபோவோம்.

ஞா—பலவாரஞ் செய்வீங்களா? எங்கனே?

இவ்விதமாக ஞானசூனியன் தம்மனதிற்குத்தோன்றிய வாறு தாறுமாறாகமொழியவே, பின்னும் மந்திரி அவனுக்கு பற்பல விதமான ஸமாதானஞ் சொல்லியும் அவிவேகத்தினால் அவன் மறுத்துச்சொல்லியே வந்ததனால் மந்திரியினது ஆக்ஞையின் பேரில் தூதர்கள் அவனை குண்டுக்கட்டாய்க் கட்டி பல்லக்கில் வைத்துத் தூக்கிக்கொண்டும், ஆங்கு அவன்வைத்திருந்தபுதையல் திரவியங்களையும் வாரியெடுத்துக்கொண்டும், அரண்மனையடைந்து அரசன் சமுகத்தில் கொண்டுவந்து சேர்த்தார்கள். அரசன் ஞானசூனியனைப் பல்லக்கிலிருந்து வெளியிலழைத்து கட்டுகளை யவிழ்த்து மிக்க விநயமாயும் ஸரஸமாயும் அவன்மனப்போக்குபோலவே விட்டு நாளாவர்த்தியில் அவனுடைய பயமுழுதும் தெளிய யுபசரித்து அன்புடன் நடத்திவந்தான். சின்னாள் கழித்து அதிரூபசுந்தரியான தனதுகுமாரி சாயாசுந்தரியை மணம்புரியுமாறு ஸம்மதிக்கச்செய்து, ஓர்சுபமுகூர்த்தத்தில் வதூவரர்கள் இருவரையும் திவ்யாபரண பூஷிதர்களாய் செய்வித்து, அரசுரிமைப்படி சிறந்த வைபவத்துடன், அவ்விருவருக்கும் மணம்புரிவித்தான். அன்று கலயாண ஸம்பவங்களெல்லாம் பகல்முழுதும்பாட்டுகச்சேரிகளும் மேளக்கச்சேரிகளும் சதிர்கச்சேரிகளுமாக வெகு விமரிசையாய்நடந்தன. அன்றிரவு மணமகனையும் மணமகளையும் ஜாதியாசாரமுறைப்படி பள்ளியறைக்கனுப்பினார்கள், பள்ளியறையோ லெக்ஷக்கணக்கான சூரியன்கள் ஏககாலத்தில் உதயமானாற்போல ஜ்வலித்துக் கொண்டிருந்தது. அவ்வறையில் சுவரளவுள்ள நிலைக்கண்ணாடிகள் நாற் புறமும் அமைத்திருந்ததனால் பார்ப்பவர்கள்கண்களுக்கு பளிங்குக் கண்ணாடிகளாலேயே சுவர்கள் எழுப்பப் பட்டிருந்ததுபோல புலப்பட்டன. ஆங்கு அமைக்கப்பட்டிருந்த லஸ்டர் குளோப் சாந்தவிளக்குகளுக்குக் கணக்கே இல.

தந்த நாற்காலிகள் ஸோபாக்கள் மேஜைகள் அளவிறந்தன. கட்டில் அதன்மேல் விரிக்கப்பட்டிருந்த மெத்தை தலையணைகள் முதலியவைகளின் சிறப்போ சொல்லத்திரமன்று. இன்னுமொரு ஆச்சரியம்—இவ்வித அலங்காரமுள்ள அறை, ஒரு அறைதானென்று நிதானிக்கவும் கூடவில்லை. ஆங்கு அமைத்திருந்த நிலைக்கண்ணாடிகளின் பிரதி பிம்பமானது மூலைக்கு மூலை எங்குபார்த்தாலும் ஒரேமாதிரியான அநேக அறைகளிருப்பதாகத் தோற்றப்பட்டதேதவிர வேறில்லை. ஞானசூனியனாகிய மணமகன் இவ்வித அலங்கார வைபவங்களையெல்லாம் அன்றுவரை எந்நாளும் கண்டறியாதவனானதால் திப்பிரமைகொண்டு இன்ன செய்வதெனவுணராது திகைத்து தன்னறியா நித்திரை மயக்கத்துடன் ஆங்கு நடைவாசற்படிக்கடுத்து கால்துடைக்க தரையில் விரிக்கப்பட்டிருந்த நார்மெத்தையின்மீது படுக்கப் புகவே, அரசகுமாரிக்கு ஓர்வித சந்தேகத்தோற்றமுண்டாகி மிக்க வருத்தமுற்று, பின்னும் மனத்தெளிவடைந்து ஆங்கு அலங்கரிக்கப்பட்டிருந்த கட்டிலின்மேற் படுத்துக்கொள்ள வேண்டி தனது மணாளனையுபசரிக்கவே, ஞானசூனியன் எழுந்து கட்டிலின்மீது படபடவென்றேறிப் படுத்து உறங்கலாயினான். இராஜகுமாரியோ சஞ்சலமனத்துடன் தனது கணவன் விஷயமாய் பலவாறுயோஜித்தும் யாதொன்றும் புத்திக்கு உண்மை புலப்படாது கட்டிலின் பக்கமே வெகுநேரம்வரை யாதோ சிந்தித்துக்கொண்டிருந்தாள். காலமோ இரவு 1-மணியாயிற்று. பிறந்ததுமுதல் இவ்வாறு 1-மணிவரை கண்விழித்தவனுமல்ல. இந்நிலைமையில்பலவாறு யோஜித்துக்கொண்டிருப்பது பயன்படாதென்று தனக்குள் தீர்மானித்து மெல்லென வந்து குறட்டைவிட்டுறங்கும் மணாளனைத்தட்டியெழுப்பினாள். மணாளன் ஒருக்களித்துப் படுத்திருந்தவன் புரண்டு மறுபக்கம் திரும்பிப்படுத்துக்கொண்டு யாதோ பிதற்றிக்கொண்டுறங்கலாயினான். பின்னும் இராஜகுமாரி உறப்பத்தட்டி யெழுப்பவே ஞானசூனியன் திடுக்கென விழித்துக்கொண்டு தான் மணமகனாயிருப்பதையும்

ஆங்குள்ள வைபவங்களையும் முற்றும் மறந்து, தம்மெதிரில் திவ்வியாலங்கிருத பூஷிதையாய் பதியினது கிருபாகடாக்ஷத்தை யெதிர்பார்த்து நின்றுகொண்டிருக்கும் இராஜகன்னிகையைக்கண்டவுடனே திடுக்கிட்டுபயந்து, "பேயோ பிசாசோ" வெனவெண்ணிநடுநடுங்கி வாய்குளறி "அம்மம்ம! ஐய்யய்யோ! என்னை விட்டுவிடு! இதோ நானோடிப்போகிறேன்!" எனவெழுந்துமஞ்சத்தைவிட்டுபறபறப்புடன் கீழேகுதித்து, ஆங்கிருந்த ஓர் பலகணிவாயிலின் மேலேற ஓரடியெடுத்து வைத்து, அகத்தோரடியும் புறத்தோரடியுமாக நின்றுகொண்டுஏறிக்குதிக்கப்புகுந்தருவாயில், கலைமகள் [தம்மனத்துள்] இவனை இவனிஷ்டம்போல விட்டுவிடில்ஏறிக்குதித்து அப்புறம் விழுந்தோட முயற்சிக்கையில் ஒருவாறு கைகால் முறிந்து பிராணாபாயம் நேரிடுமென்பதை உணர்ந்து திருமகளைக்கண்ணோக்கி, [வெளிப்படையாய்] அந்தோ! பரிதாபம்! இனியும் அறிவு, செல்வம் எனவிரண்டினும் எது சிறந்ததெனத் தாம் வாய்திறந்து கூறாதிருக்கின் இக்கணமே அநியாயமாய் ஓர் ஜீவனுக்கு ஹானியேற்படுவது திண்ணமாதலின் மௌனஞ்சாதித்தல் ஞாயமல்ல" வென்றனள்.

உடனே திருமகள் [மனத்துள்] சற்றுலோஜித்து, இத்தருணத்தில் இனியும் நாம் முரண்டுசெய்துகொண்டு பிடிவாதமாயிருக்கின் ஒருயிருக்கு நாசமேற்படுவது திண்ணமாதலின் கலைமகளைநோக்கி [வெளிப்படையாய்] அறிவேசிறந்ததென்றனள். உடனே கலைமகள் ஞானசூனியனுக்கு ஞானோதயம்பாலிக்க, தக்ஷணமேஞானசூனியன் "ஞானசூரியன்" எனச்சொல்லும்படிக்கான மனத்தெளிவடைந்து [மனத்துள்] ஓகோ! நானென்ன! பிதற்றலானேன்! என வெண்ணி, இவ்விஷயங்களை கண்ணுற்றுத் தியங்கி நிற்கும் இராஜபுதல்வியாகிய தம்மனைவியை நோக்கி [வெளிப்படையாய்] "கண்மணீ! யாது சிந்தனை? யென்ன விஷயம்? யான் வேடிக்கையாக நின்மனதைப் பரிசோதித்தேன்! இன்னும் மனக்கலக்கமேன்? என்மீது கோபமா? விளையாட்டுக்காகச் செய்வதை

விஷமமாகக் கொள்ளலாகுமா?" என அப்பெண்மணியின் காத்தைப்பற்றி யிழுத்து தம்மடிமீதிருத்தி யணைக்கலாயி னன். இராஜகன்னிகை ஆச்சரியமுற்று, நாதா! "நல்ல வேடிக்கை செய்தீர்கள்! பிறர் மனதை உழலச்செய்தலும் ஓர் வேடிக்கையா? அதினும் என்போன்ற ஒரு பேதையின் மனதை உழலச்செய்து வருத்துவதும் முறையா?" என இனிமையாக ஸம்பாஷித்த காதலியின் வசனத்தைக் காத லன்கேட்டு மனைவியை இருகக்கட்டியணைத்து முத்தமிட்டு ஸாஸல்லாப ஸந்தோஷமாய் இல்லறம் நடாத்தி, மேன்மே லும் மனத்தெளிவுற்று, இருவரும் சுகமே வாழ்ந்து வந் தனர்கள். இச்சிறியசரிதத்தினல் செல்வத்தினும் கல்வியி னலுற்ற அறிவே சிறந்ததெனத் தெளிவுறலாயின.

அன்றியும் இக்கல்விப் பொருளொன்றே மானிடபிறவிக ளின் புத்தியை துர்மார்க்கங்களினின்று விலக்கி ஸன்மார்க் கங்களின் நெறியிற்கொண்டு வருந்திறைமை யுடைத்து. இதினும் இன்னுமொரு விசேஷம். நம்முன்னோர்கள் முதல் இதுகாறும் "இளமையிற் கல்" என்பதை தக்க அனு பவமாகக்கொண்டு தம் தம் பாலியக் குழந்தைகட்கு ஐந்தாம் வயது பிறந்தவுடன் பள்ளிக்கூடத்தில் வைப்பது தொன்று தொட்டு நடந்தேறி வருகின்றதும் நம் மனைத்தோரும் அறிந்த விஷயமே.

"இளமையிற் பழக்கம் எப்பொழுதும் மறவாது" என் றபடி பால்யத்தில் கற்கும் கல்வியே ஒருவீட்டின் அஸ்திவா ரம்போல நீடித்து நிலைநிற்கக்கூடியது. கல்விப்பயிற்சியில் தேர்ந்தவர்கள் எவ்விடத்திலும் யாவராலும் புகழப்பட்ட வர்களாகவும் மதிக்கப்பெற்றவர்களாகவும் ஆகின்றார்கள். ஆகையால், கல்வியின் சிறப்பினுக்கு ஒப்புயர்வு யாவுமில வென்பதை மனத்திற்கொண்டு மக்களைப்பெற்ற ஒவ்வொரு வரும் தம் தம் புதல்வர் புதல்வி முதலிய சிறுவர்களுக்கு கல்விப்பொருளை பயிற்றுவிப்பதே முதன்மையான கடமை யாகும். தவிரவும்,

" செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிதுபேணுர்
சொல்லன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார்
வெல்வதே கருமமல்லால் வெம்பகைவலிதென்றெண்ணுர்
வல்வினை விளைவுநோக்கார் மண்ணின்மேல் வாழுமாந்தர்''

எனவும் கூறியிருப்பதை [சாதாரணமாக] கவனிக்க, கல்வி யறிவில்லாதவர்களிடத்துள்ள செல்வம் சிறப்புறுவது அசாத்தியமெனவும் தெரியலாயிற்று.

பொருள் யாவர் எத்தனை மிகுதியாகப்பெற்றிருக்கினும் கல்வி யறிவோடுற்றவர்களிடத்துள்ள செல்வமே மேம்பாடுடையதாகும். செல்வம் சாதாரணமாக ஜனங்களிடத்தில் சேரச்சேர ஆசை அதிகமாகி வரவர பேராசை கொண்டு கண், தலை, தெரியாது அகிருத்தியங்களைச் செய்யத் தொடங்குகின்றுர்கள்.

" பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும்
பொருளல்லதில்லை பொருள் " என்றும்

" அர்த்தமநர்த்தமதை விரும்பித்தேடுதல் ,
வியர்த்தமெனக்கொள்வா யறிந்து " என்றும்

சொல்லப்பட்டுள்ளவை பொய்யுரையல்ல.

இப்பிரபஞ்சத்தில் பிரமதேவனுல் சிருஷ்டிக்கப்பட்ட 84 லக்ஷம் ஜீவராசிபேதங்களில், பகுத்தறியுந் தன்மையை யுடைய உத்தமமான மானிடஜன்ம மெடுப்பதே மிகவரிது.

" துர்லபம் நரஜன்மாணும் விவேகமதி துர்லபம் " என்றபடி, மானிடஜன்மம் கிடைப்பதே அரிது; அதினும் அங்க ஹீனமின்றிப்பிறப்பது அரிது; அதினும் புருஷனுய்ப் பிறப்பதரிது; அதினும் ஞானம், கல்வி, ஒழுக்கம், முதலியவை லபித்த லரிது; அதினும், தானதருமஞ்செய்வதரிது. அதினும், உத்தம மனைவியை யடைதலரிது; அதினும், பொருள் தனைப்பெறுதலரிது. அதினும், புத்திர சம்பத்துண்டாதலரிது. அதினும், விதரணை, சாதுரியத்தோடி

ருத்தலரிது. அதினும், பொறுமையோடிருத்தலரிது. அதினும், ஸத்தியமாய் வாழ்வதரிது. அதினும், நல்வினை செய்வதரிது. அதினும், நற்கதி பெறுவதரிது. இவ்வாறிருக்க ஏதோ பூர்வ புண்ய வசத்தினால், மானிடஜன்மம் கிடைக்கப் பெற்றும் தீவினைகளைச்செய்து கிடைப்பதற்கருமையாகிய ஜன்மத்தை வீணாக்கி வருந்துவதில் யாது பிரயோஜனமோ தெரியவில்லை. ஆனால், நல்வினைகளையும் புண்ணியத்தையும் செய்து நற்கதி யடைவதற்கு ஹேதுவாகியபொருள் கல்விப் பொருளே யாகும்.

விருத்தம்.

கல்வியே யாவர்க்குந் திகழ் கொண்டவடிவாகும்
கல்வியே புதையலாகும்
கல்வியே பரதேசகமனத்துக்கினமாகும்
கல்வியே துணையதாகும்
கல்வியே திசைகொண்ட கனகீர்த்தியுண்டாக்கும்
கல்வியே பெருமையாக்கும்
கல்வியே வேண்டின போகங்களுண்டாக்கும்
கல்வியே யின்பமாக்கும்
கல்வியே நிலைகொண்ட கற்பகத்தருவாகும்
கல்வியே செல்வமாகும்
கல்வியே யரசரால் பூசையுஞ் செய்விக்கும்
கல்வியே கடவுளாகும்
கல்விக்கு நிகரான பொருளொன்று மிம்மையில்
கருதிடி லில்லை யில்லை
கல்லாதவனு மொன்று மில்லாதவனுமிரு
காற்பசுவ தென்பதாமே.

ஆகையால் கல்வியே மானிட சரீரத்திற்குற்ற துணைக் கருவியினும் தலைமை பெற்றதாகும். இரண்டாவது, தானதருமம்.

பொருள் மிகவே, ஜனங்களிடத்தில் தானம் தருமம், என்பவை கிஞ்சித்துமில்லாது சுத்தமாய் மறந்து போய்விடுகின்றன. அதனால்,

" அதானதோஷேண பவேதரித்ரோ
தாரித்ர்யதோஷேண க்ரோதிபாபம்!
பாபாதவஸ்யம் நரகம்ப்ரயாதி
புனர்தரித்ரம் புனரேவபாபி"

முற்பிறப்பில் தருமம் செய்யாத தோஷத்தால் இப்பிறப்பில் தரித்திரனாகப் பிறப்பான், அத்தரித்திரத்தினாலே, பாபகாரியங்களிற் பிரவேசிப்பான், அப் பாவத்தினாலே நரகம் அனுபவிப்பான். அந்த நரகத்திலேயே சில காலமிருந்து மறுபடியும் தரித்திரனாகவே பிறப்பான்.

தவிரவும்,

'தருமம் தலைகாக்கு' மென்பதும் அநுபவம். பொருளில்லாதவர்கள் எவ்வாறு தருமஞ்செய்வதென்றாலோ "பரோபகாரார்த்தமிதம் சரீரம்" என்றபடி, பிறருக்கு சரீரப்பிரயாசைப்பட்டாவது, வாக்கு சாதகம் செய்தாவது உபகரிப்பதும் தருமமேயாகும்.

" அன்பர் பணிசெய்ய வென்னை யாளாக்கி விட்டு விடில்
இன்ப நிலைதானே எய்தும் பராபரமே" என்னும்,—
" சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்கமெவனோ வுயிர்க்கு" என்பதுந்தவிர,—

" நதிபலா வானமூன்று நலந்தரு முபகாரங்கள்
நிதமுடன் செய்வதல்லால் தாமுபகார மேற்கார்
மதிபெறு நல்லோர்தாமும் வழங்கிடு முபகாரத்துக்
கெதிருபகாரங் கொள்ளாரவனிபி லிபற்றுங்காலே."

என்றபடி நதிகள் ஜலத்தைத் தான் பானஞ் செய்யாது; விருக்ஷங்கள் பலங்களைத்தாமே புசிக்காது; மேகங்கள் வர்ஷித்து, ஆனபயிர்களைத் தாமே புசிக்காது; அவ்வாறே உலகத்தின்கண் தர்மாத்துமாக்களாகிய சத்புருஷர்கள் சம்பாதித்ததிரவியத்தை பரோபகாரஞ் செய்வர். அசேதனங்களாகிய விருக்ஷங்கள் தன்னை யாச்ரயித்தவனுக்குத்

தக்க நிழலைக் கொடுத்து தம்மிடத்துண்டான பலன்கள் முதலானவைகளை உபகரித்துக் கொண்டிருக்கின்றன; நதிகள் பிரவாஹித்து புஷ்களமாக ஜலத்தை சகல ஜந்துக்களுக்கும் கொடுக்கின்றன. மேகங்கள்கூட லோகத்திற்கு வேண்டியஜலத்தைக்கொடுத்து ஆதரிக்கின்றன. ஜடபதார்த்தங்களுக்கே அவ்வளவு பரோபகாரசிந்தையுண்டாயிருக்கும்போது விவேகிகளாகிய மானிடர்கள் மாத்திரம் பரோபகார சிந்தை யில்லாமல் பிரவர்த்திக்கின் எவ்வளவு ஹீநம்.

இவ்விதமே உலகத்தின்கண் ஒருவனிடத்து செல்வமுண்டாயின் அவனைச் செல்வவானென்று போற்றுவதும், தரித்திரம் வந்துவிடில், (அதாவது செல்வம் போய்விடில்) அவனை தரித்திரனென்று இகழ்வதுமாக நிகழ்வதற்கொப்ப ஒவ்வொரு மனிதர்களுடைய நிலைமையும் ஒவ்வொரு காலத்தில் பிரபலமாவதும், மற்றொரு காலத்தில் மங்கிவிடுவதுமாக செல்வமும் தரித்திரமும் திரும்பத்திரும்ப வருவதும் போவதுமாக மாறி மாறி வந்து போய்க்கொண்டிருப்பது இயற்கையாயிருக்கின்றதை அநுபவமாகத் தெரிகின்றோம். வருவதும் போவதுமாயிருக்கும் தன்மையுடையதன் காரணம்பற்றியே "செல்வம்" செல்வோம், (இவ்விடம் விட்டுச்செல்வோம்); "தரித்திரம்" (நீடித்திருக்க மாட்டோம்) என்பனவாகப் பொருளுடைத்தாகியதாதலினாலேயே, முறையே செல்வம், தரித்திரம் எனப்பெயர் வழங்கிவருவதாகவும் ஊஹிக்கலாம்.

கல்லாமையே மனிதர்களுக்குச் சத்துரு. அது பலவாறும் தெளிவுற்றமனதையும் விகாரப்படுத்தும். நன்னடக்கையை சற்றேனும் அநுசரியாது. தருமத்தைக் கருதாது. பெரியோர்களை மதியாது. குலத்தின் மேன்மையை நினையாது. உறவினரைக்கவனியாது. பின்னிட்ட இகழ்ச்சியைச் சிந்தியாது. மானத்தைக்கருதாது. குலமதாசாரங்களை அனுஸரியாது. மதம்; துடுக்கு, அடங்காமை, அறிவின்மை, மௌட்டிகம் முதலிய துன்மார்க்கங்களை உண்டாக்கும். அதனால் அவ்வித்தையின் சந்ததியாகிய அவி

வேகமானது, நடைதவறித் தீயவழிகளில் நடக்கச்செய்யும். அவ்விதம் தீயவழிகளிற் பிரவேசித்த மனமோ மயங்கி விகாரப்படும். விகாரப்படுவதனால் நாணம், வெட்கம், ரோஷம், அச்சம், இலஜ்ஜை, சூடு, சுரணை முதலியவை இல்லாமற் போகும். அப்படிப்போவதனால் இருதயம் மாறும். இருதயம் மாறுவதனால் மனத்துள்ள சுத்த எண்ணம் விலகும். அவ்விதம் விலகும்பொழுது கல்விக்கோ கதியில்லை, அறிவிற்கோ ஆதாரமில்லை, ஒழுக்கத்திற்கோ உதவியில்லை, வணக்கத்திற்கோ வழியில்லை, இவ்விதம் கல்வியறிவொழுக்கம் வணக்கம் முதலியவை சூன்யமாய்விடுவதனால் விளையும் விபரீதங்கள் கோடானுகோடி. இவ்விபரீதங்களினால் தேக ஆரோக்கியம் கெட்டுப்போகின்றது. ஆரோக்கியம் கெடுவதனால் தேகவன்மை சோர்வடைகின்றது, தேகவன்மை சோர்வடைவதனால் தைரியம், வீரம், ஆண்மை முதலியவை கைவிடுகின்றது; அவ்வாறு கைவிடுவதனால் வாழ்நாள் குன்றிவிடுகின்றது; வாழ்நாட்குறுகுவதனால் நிலைமை பயங்கரமாகி பரிதாபமான ஸ்திதியில் கொண்டுவந்துவிடுகிறது. மேற்கூறிய மாறுபாடுகளே சகலவித ஸௌகரியங்களினின்றும் மனிதர்களைப்பிரித்துசாகாப்பிணங்களாக்கிவிடுகின்றன. இவைகளுக்கெல்லாம் மூலவேர் ஆழ்ந்த யோஜனையற்ற அஞ்ஞானமேயாகும். ஆகையால், பகுத்தறிவுள்ள மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் கல்வியைக்கற்று, அதனோடும் அறிவொழுக்கம் வணக்கம் முதலியவைகளைப் பெறுவது எத்தகைய ஆவசியமென்பதை நிதானித்து உற்றுநோக்கி நடப்பார்களாக. தவிரவும் கல்விப்பயிற்சியில்லாதவர்களுக்கு எவ்விஷயங்களினும், எக்காலத்திலுஞ் சமயோசிதம் அறிந்து நடக்கும் சக்தி, சுத்த சுன்னமாயினதால், எச்சபையினும் கனக்குறைவேயன்றி மதிப்பென்பது மருந்துக்குங் கிடைக்காது. அவர்கள் எத்தகைய சிறந்தகுடித்தனத்திற் பிறந்தவர்களாயினும், எத்தகைய ரூபமுள்ளவர்களாயினும், மணல்நிலத்தில் பயிரிட்டுவிளைந்த சர்க்கரைவள்ளிக்கிழங்கு போல எத்தகையகொழுமழுவென்றிருப்பவர்களாயினும், எத்

தகைய திடகாத்திர சரீரிகளாயினும், கல்வியழகொன்று மாத்திரம் சூனியமாயின், அவர்கள் முண்முருக்கம் பூவினை யொப்பாவார்கள். முண்முருக்கம் பூவினிடம் நல்லநிறமிருக்கினும் யாருக்கெவ்வித பிரயோஜனம்? கழுதையினிடம் கலப்பாற் கறக்குங்குணமிருக்கினும் யாருக்கெவ்வித பிரயோஜனம்? எட்டிமரம் பழுத்து யாருக்கெவ்வித பிரயோஜனம்? பிரேதத்துக்கு அலங்கரிப்பது யாதுபிரயோஜனம்?

அன்றியும், கல்லாதார் முகம் ருத்திரபூமி * யை ஒக்குமெனவும், கல்லாதார் உருவம் மரத்துக்கொப்பெனவும், கல்லாதார் கண்கள் இரண்டும் புண்களையொக்குமெனவும், கற்றார் சபையில், கல்லாதார் சுவானத்துக் கொப்பாவார் எனவும், கல்லாதார் உடம்பு பாழ்நிலத்தையொக்குமெனவும் அறிஞர் கூறியிருக்கின்ற "தனக்குப் பாழ் கற்றறிவில்லா உடம்பு" என்பதனாலுமறிக. மேலும், இறைவனையறிந்து வழிப்படுந் தன்மை கல்லாதவர்களுக்கில்லை யென்பதைத்தழுவியே,

"எல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சகத்துக் காணவொண்ணாதே" எனவும்

"கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே."

எனவு மான்றோர் அழகாய்க் கூறியிருக்கின்றார்கள்.

இக்கல்விப்பொருள் செல்வப்பொருள் இரண்டுமில்லாதவர்கள் பரம சண்டர்களாய், கூலிக்கு மாடுமேய்க்கவும், விரகு சுமக்கவும், மண், கல் முதலியவைகளை வெட்டிச் சுமக்கவும், மற்றும் பல கஷ்டமான வேலைகளைச்செய்பவும் உடன்பட்டாலொழிய வேறு விதியில்லாது காலக்ஷேபத்திற்குத் திண்டாடவேண்டி நேரிடுவதுந்தவிர, கொலை, களவு, கன்னம் வைத்

* ருத்திரபூமி=சுடுகாடு.

தல், திவட்டிக்கொள்ளை, அடித்துப் பறித்தல், தப்பு சாக்ஷி சொல்லுதல் முதலான இழித் தொழில்களைச் செய்யத்தலை யிட்டுக் கொள்ளும்படி நேரிடுவது நிச்சயம்.

செல்வப் பொருளின்றிக் கல்விப்பொருளுற்றவர்களுக்கு பூப்பிரதக்ஷிணத்துள்ள எவ்விடங்களினும் தங்களதிகாரம் செலாவணியாகும்.

கல்விப்பொருளின்றி செல்வப் பொருளுற்றவர்களுக்கு, அச்செல்வ வாஸனையின் பொருட்டு தங்களிடத்துள்ள ஏவ லாட்களை மாத்திரம், வேண்டியமட்டில் கண்மூடித்தனமான குருட்டதிகாரம் செய்யலாமேயன்றி, மற்றவர்களிடம் அவர் கள் அதிகாரம் செல்லவே மாட்டாது.

மேலும், அவர்களிடத்துள்ள பொருள்களும்

"நம்ப னடியவர்க்கு நல்காத்திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்."

என்றபடி சன்மார்க்கத்திலுபயோகப்படுவதில்லை.

அன்றியும், பெரும்பான்மையாக அநுபவத்தில்செல்வப் பொருள் வாயுள்ளவர்களை ஊமையாக்கும்; கண்ணுள்ளவர்க ளைக்குருடாக்கும் ; செவியுள்ளவர்களைச் செவிடாக்கும் ; காலுள்ளவர்களை முடவராக்கும் ; பெருமையுற்றவர்களைச் சிறுமைப்படுத்தும்; ஆழ்ந்த புத்தியுள்ளவர்களை மலினமாக் கும் ; ஞானமுள்ளவர்களை விவேகசூனியராக்கும் ; சிறிய வர்களைப் பெரியவர்கள் போலாக்கும் ; பெரியவர்களைச் சிறிய வர்களாக்கும் ; புத்தியுள்ளவனையும் கிறுக்கனுக்கும்: இத் தகைய கூத்துகளுக்குக் காரணம், செல்வச் செறுக்கும், கல்வி யில்லாமையினாலுற்ற புத்தியில்லாமையுமேயன்றி வே றன்று. தவிரவும், ஒரு குடும்பத்திற் றலைமையாயிருப்பவர் யாதேனும் ஒருவாறு கல்வியறிவில்லாக் கசடரும் நிரக்ஷர.

குஷ்டியாயுமிருப்பின், அவருக்குண்டாகும்சந்ததிகளும் அவ் வாறிருக்கவேண்டுமென்கிற கட்டாயம் ஏதேனுமுண்டா?

"ஊனுண்டு விற்போ னுதாத்துச் சேயொருவன்
தானுண்ணு விட்டாற் றவறன்று — மீனுண்கண்
வேசிமக ளொருத்தி மெய்க்கற் பினளாகி
லேசி மறுக் கொணுதே"

என்ற பாவின் பொருள்தா னென்னே?

இவ்வகிலப் பிரபஞ்சத்தின் கண் சூரியன் சந்திரன் முதலிய நவக்கிரகங்கள், நக்ஷத்திரங்கள் எல்லாம் அதனதன் கடமையாகிய விதிமுறைபிறழாது நடைபெறுகின்றனவென் பவும், அளவிடக்கூடாத அகலமும் நீளமும் ஆழமுமுடைய சப்த சமுத்திரங்களும் அதிக்கிரமிக்காமல் தடைபட்டிருக் கின்றன வெல்லாம் கடவுளின் ஆணையாகிய சத்தியமென்ற உண்மைக்குக்கட்டுப்பட்டு நடையுறுகின்றன வென்பவும் மறுக்க முடியாத வுண்மையேயாவன.

பகல் இரவு, வெயில் மழை, உஷ்ணம்சீதளம், ஜனனம் மரணம், இவைகளும் கடவுளின் ஆணைக்குக்கட்டுப்பட்டே நடையுறுகின்றன வென்பதும் திண்ணம்.

இன்பதுன்பம், நல்வினை தீவினை, நியாயம் அநியாயம் சத்திய அசத்தியம், நம்பிக்கை அவநம்பிக்கை, முதலியவை ஒன்றுக் கொன்று விரோதமாகக் கற்பிக்கப்பட்டு நடையுறு கின்றன. யாவும் கடவுளின் நியமப்படி மனிதர்களின்செய் கைகளுக்குற்றவாறு பயனுறுகின்றனவென்பதும் யாவரும் மறுப்புக்கிடமின்றி அங்கீகரிக்கக்கூடிய வுண்மையேயாகும். தவிரவும், மேற்கூறியனயாவும்

"முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்"

என்பதுபோல ஊகக் கருத்தோடு ஆராய்ந்து பார்ப்பவர் களுக்கே தெள்ளத்தெளிவுற வுண்மை விளங்கும்.

ஆய்ந்தொன்றை யறிந்துபார்க்கி னறிவிற்குற்றெளிவுதோன்றும்
ஆய்ந்தொன்றை யறியின்மேலு மறிவுமேதெளியு மின்னும்
ஆய்ந்தொன்றை யூகித்தாலே அறிவிற்கெட்டாத தில்லை
ஆய்ந்தொன்றை யறிதலேயாம் அறிஞரின் திறமைகேளாய்!

மனிதர்களுடைய செய்கைகளெல்லாம்ஆராய்ச்சியின்றி வேறு படுவதே அவரவர்களின்விரோதபாவமானநடைகளைப் பொருத்தே அமைகின்றன வென்பதும் யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடியதே.

" ஞானம் பெருமை நயங்கருணை யுண்மை யபி
மானம் பொருமை வணக்கமுபர் — தானமுடன்
சற்குணமா சாரந் தருகல்வி நீதிநெறி
துற்குணருக் கில்லென்றே சொல்."

என்றல்லவோ ஆன்றோர் கூறியிருக்கிறார்கள்.

ஜனங்கள் குணங்களினுற்ற அக்கிரமச் செய்கைகளினாலேயே, அளவற்றதுன்பங்களுக்கும், தண்டனைகளுக்கும், அவமானங்களுக்கும், அற்பாயிசுகளுக்கும், மரணங்களுக்கும், நாகங்களுக்கும் இரையாகின்றார்களென்பது உண்மை. ஏன்? தேசியப்படிப்பின் குறைவினால் சாஸ்திரவாராய்ச்சியில்லாமையினாலும், [ சாஸ்திரங்களெல்லாம் தேசியபாஷையிலியற்றப்பெற்றவைகளா யிருப்பவையால் ] சாஸ்திரங்களின் இரகஸ்யார்த்த உட்கருத்தைத் தெரிந்துகொள்ள மார்க்கமில்லாமையாலுமே ஜனங்கள் தத்தம் தேகத்தை ஸத்விஷயவுணர்ச்சிகளினின்று மனதைவிலக்கி சரீரத்தைப் பலவிதத் துன்பங்களுக்கு ஈடுபடுத்த வேண்டி நேரிடுவதும் பிரத்தியக்ஷானுபவம்.

கல்விப் பயிர்ச்சியும், அறிவும், ஒழுக்கமும், வம்சபரம்பரையின் மலினத்தன்மையை அநுஸரிக்கத்தக்க தல்லவென்பது வெளிப்படை. ஆகையால், ஒவ்வொருவரும் கல்விப் பயிற்சிக்காக முயற்சிக்கவேண்டுவதாவசியத்தினும் அத்தியாவசியமே. கல்விகற்று புத்தியில்லாதுபோவது பூர்வ ஜன்மகன்மமே யாகும்.

புத்தியில்லாதவர்கள் தமது உயர்குடிப்பிறப்பின் நற்குணத்தை யெல்லாம் நாசமாக்குகின்றார்கள். உலகத்தில் மடையர்களுடைய மூடத்தனமே புத்திசாலிகளின் புத்தியை மேன்மேலும் சாணைபிடிட்ட கத்திபோல கூராக்குகின்றது.

உலகத்திலோ போலிக்காரர்களே அபரிமிதமாக வசிக்கின்றார்கள். போலிக்காரர்களென்றால் சுகுணமுடையவர்களல்லவென்பதை எடுத்துக்காட்டாமலே தெளிவுறத்தெரிந்த விஷயம்: உலகம் யுக்தியிலும் குயுக்திவிஷயங்களில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கிறன்து இக்காலத்தில் அக்கிரமங்களும் ஆகாத்தியங்களும் இக்கட்டுகளும் ஈனங்களும் உபாதிகளும் ஊர்பகைகளும் எஞ்சல்களும் ஏசல்களும், ஐயங்களும் ஒட்டுவியாதிகளும் ஓலங்களும் ஔவியங்களும், மலிந்து வியாபிக்கலாயின. ஸத்கருமங்களில் அசிரத்தை மேவிடலாயது. ஒருவாறு சிரத்தை உதிக்கினும் அதற்குளெவ்வளவோ இடையூறுகள் நேரிடுவதும் பிரத்யக்ஷாநுபவம். எவ்வாறெனில்:—

"நல்லகாரியங்களுக்கு நாலாயிரம்விக்னம்" என்ற மொழிப்படி உலகில அநேக சமயங்களில், ஸன்மார்க்க நெறிகளைப்புகட்டும் புஸ்தகங்களைப் படிக்கும்பொழுதும், ஜபதபாதி ஸத்கருமங்களை அநுஷ்டிக்கும்பொழுதும், தர்மகாரியங்களைச்செய்ய எத்தனிக்கும் பொழுதும், படிப்பில் பிரியமில்லாத பிள்ளைகள் தங்கள் தாய்தகப்பன் உபாத்தியாயர் முதலியவர்களின உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் கையில் புஸ்தகங்களை எடுத்துப் பிரித்தவுடனும், அவ்விஷயங்களில் இயற்கையாக கவனிக்கவொட்டாமல் தடுப்பதற்கு பெரும்பான்மையாய், சோம்பலையும், கொட்டாவி விடுதலையுமே அவதாரமாகக்கொண்ட நித்திராதேவியம்மாள் பிரத்திபக்ஷாநுபவமாய் வந்து குடியிருக்கத்தவறுவதேயில்லை. இயற்கையாய் சிற்சிலசமயங்களில் ஏதேனும் சரீரம் சிரமமாயிருக்கும்பொழுதும், சற்று அயர்ந்து தூங்கினாலல்லாது

சரீரம் ஆரோக்கியமடைய மாட்டாதென்றெண்ணும் பொழுதும் வருந்தி வருந்தி அழைத்தாலுமவள் வருவதேயில்லை. ஆனால் அவளை அவசியமாய் விரும்பாத காலங்களில் வரவொட்டாமல் தடுப்பதற்கு ஓர் தக்கவுபாயம் யாதென்றால், ஒவ்வொருவரும் ஏகாக்கிரசித்தத்துடன் கருதும்விஷயத்தை வைராக்கியமாய் கவனிக்கத் தொடங்கிவிட்டால் அச்சமயம் அந்நித்திராதேவியம்மாள் நம்மிடம் ரஜாவாங்கிக் கொள்ளாமலும் சொல்லிக்கொள்ளாமலுமே நம்மைவிட்டு வேறு எங்கேயாவது தனதிச்சை நிறைவேறும்படியான தூங்குமூஞ்சிச் சோம்பேரிகளைத் தேடிக்கொண்டு சென்றுவிடுவாள் என்பது அநுபவசித்தாந்தம். ஒவ்வொருவரும் பரீக்ஷித்துப் பார்த்துக்கொள்ளலாம். நிற்க,

178207

## மக்களுக்குத் தந்தைசெய் நன்றி

தந்தை தன் மக்களுக்குச் செய்யத்தக்க உதவிகளுள் மிகச்சிறந்தது அவர்களுக்குக் கல்வி பயிற்றுவிப்பதேயாம். வாலிபப்பருவம் முதற்கொண்டே ஒவ்வொருவரும் தன் மக்களை சீர்திருத்திக்கொண்டு வரவேண்டும். மைந்தர்கள் சீர்குலைவதற்கும் வாலிபப்பருவமே சிறந்த காலமாதலினாலும் அப்பொழுது தான் தீயபழக்கமும் தீயவொழுக்கமும் உண்டாகுமாதலினாலும் அவர்களுடைய நடத்தை, பழக்கம், ஒழுக்கம், முதலிய ஒவ்வொன்றையும்பற்றிப் பெற்றோர்கள் கவலை எடுத்துக் கொள்வது அத்தியாவசியமாகும். மக்களைப் பெற்றுவிடுவது கஷ்டமேயல்ல. அவர்களை ஒரு குறைவுமின்றி வளர்த்து நல்வழிப்படுத்தலன்றோ கஷ்டம்.

இதுபற்றியே,

"மதலையைப்பெறுநாள் துன்பம் வளர்த்திடு நாளுந் துன்பம்
விதலைநோ யடையில் துன்பம் வியன்பரு வத்தும் துன்பம்
கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால் என்றைக்குந் துன்ப மாமால்"

எனஆன்றோர் கூறியுளர். மக்கட்குத்தந்தை கல்விகற்பிப்பது

இன்றியமையாததாம். தந்தையில்லா மகவு எவ்வாற்றானும் அறிவற்றதாகும். இதுபற்றியே பெரியோர்,—

" தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்-ஆயவாழ்
வுற்றா ருடன்போ முடற்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி போடெவையும் போம் "

எனக்கூறினர் போலும்.

## பெற்றோர்களுக்கு மக்கள்செய் நன்றி.

மக்கள், தங்கள் பெற்றோரிடம் நடந்து கொள்ள வேண்டியதைச் சற்று கவனிப்போம். நமது பெற்றோர் நம்மிலும் மேன்மையானவர் பற்றி நமது பெற்றோருக்கு நாம் மரியாதை செய்யக் கடமைபட்டவர்களே; அவர்கள் வயதில் முதிர்ந்தவர்கள் என்பது மாத்திரமன்று. நமது வாலிபப் பருவம்முதல் நம்மைக் காப்பாற்றக் கவலையெடுத்துக்கொண்டு உள்ளன்போடு பாடுபட்டுக் காப்பாற்றியவர்கள் அவர்களே யன்றோ? அவர்கள் நமக்கு நன்மை செய்யாத நாளுமுண்டோ? ஆகவே நாம் அவர்கள்செய்த நன்றிக்கு என்றும் கைம்மாறு செய்யக் கடமைப் பட்டவர்களே. அங்ஙனம் செய்யாது நன்றியை மறந்தவர்க்குப் பிராயச்சித்தமே யில்லை. இதுபற்றியே பொய்யா மொழிப் புலவர்—

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு " எனக்கூறியுள்ளார்.

அன்றியும்,

"தந்தைதாய் பணிதல் செப்புந் தவமலாற் றவம் வேறில்லை
மைந்தருக் கெதிக ளேனும் வணங்குவர் தாயைத் தந்தை
அந்தமைந் தனேயே போற்றல் வேண்டுமற் றாத றன்றால்
சிந்தையுந் துணரிற் றாயே தந்தையிற்சிறந்தாள் மன்னே!"

"தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்றும்,

"தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்றும்,

பெரியோர்கள் மூதுரைகள் என்றும் மறக்கத்தக்கவையன்றும். பெற்றோர்களுக்கு எவ்வாற்றானும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் கீழ்ப்படிதலிலும் இருவகையுண்டு ஒன்று மனத்துடன் கீழ்ப்படிவது, மற்றொன்று பயத்துடன் கீழ்ப்படிவது. சிலவேளை அவர்கள் ஏவுந்தொழில், நம்மனதிற் செல்லாமலிருக்கலாம்; ஆயினும் அவர்கள் நம்மிடம் ஒப்புவித்த பான்மைக்காகவாவது சிறிதேனும் முணுமுணுக்காமல் அவர்கள் கட்டளைக்கடங்கி நடத்தல் வேண்டும்.

மாதா பிதாக்கள் பிள்ளையைப்பெறுகிற விஷயத்தில் பிரஸவவேதனை தொடங்கிக்கல்விகற்பித்து உள்ளநாள்வரையிலும் படும் கஷ்டங்களுக்குக் கைம்மாறு எத்தனை பிறவிகளிலும் செய்வதரிதென மநுஸ்மிருதி கூறுவது மீண்டறியத்தக்கது.

## கருப்பாவஸ்தையும் பிண்டத்தின் நிலைமையும்.

ஆஹா! ஜனனமென்று பிறக்கும் சிசுவின் மாயாவிசித்திரத்தை எத்தகைய அற்புதமென்று சொல்வது? தாயின் கருப்பத்தில் கருவாகிய பிண்டம் தரித்த ஐந்து தினத்தில் நீர்க்குமுழியைப்போலவும், பத்துதினத்தில் கோழிமுட்டை வடிவமாகவும், ஒரு மதி நிறைய தாய்க்கு உடம்பு பூரித்து நாடிகனத்து அதன் நடையுந்துடித்து, [ சிசுவுக்கு கட்டிப் பிண்டமாய் சிரஸும் ] இருமதிநிறையத் தாய்க்கு இடையது பருத்து தேகம் இரத்தாதிக்கமுற்றுப் பலவித பச்சை நரம்போடி இருகனம் பூரித்து, [ சிசுவுக்கு கால்களும் கைகளும் ] மும்மதிநிறைய முகமெலாம் வெளுத்து முன்னினும் சரீரந்தளதளப்புற்று மேனிநிறமாறி தனம் நுனி கருத்து தின்பண்டங்களில் ஓரபேக்ஷைகொள்ளவும், [ சிசுவுக்கு வயிறும் ] நான்காம்மதியில் நட்புறும் மசக்கையினால் காலையிற் தமட்டி வாந்தியுண்டாக்கிக் கண்ணிறங்கருத்து சிறுமயக்கந்தோன்றி இளங்கொடிபோல் துவண்டு, [ சிசுவுக்கு இருபாரிசங்களும் ] ஐந்தாம்மதியில் அங்கம் தங்கநிறமாகி நிலவுள்ள இடங்களில் விளையாடவாசையுற்றும், [ சிசுவுக்கு பாதங்களும் விரல்களும் ரோமங்களும் ] ஆறும்மதி

யில் அடிவயறு கனத்து தனங்கள் விம்மி வேதனைதோன்றி வட்டங்கருத்து, [ சிசுவுக்கு மூக்கு-செவி-வாய்-கண்கள் முதலிய அவயவங்களும் ஏற்படும் ] ஏழாம்மதியில் இச்சையுடன் நாவுக்கினியது புசித்து கருவின் அசைவுதோன்றி [ சிசுவுக்கு ஜீவன் தேகத்துள் பிரவேசிக்கும்பொழுது அது வரை தலை நேராக இருந்தபிண்டம் (ஊர்த்வமுகமாய் தலை கீழாய்த்திரும்பும், பிண்டம் திரும்புவது தாய்க்குத்தெரியவரும். தாயினுடைய ஜடராக்கினி பாதை யில்லாமலிருக்க ஸூதி என்னும் ஒரு குடல் பிண்டத்தைச் சுற்றிக்கொண்டிருக்க, ] எட்டு ஒன்பதாம் மதியில் ஓலைபோற் சுழன்று தின்பதை மறந்து உலாவிநடந்து உட்காரும்பொழுதும் எழுந்திருக்கும்பொழுதும் கைகளை யூன்றி, சற்று உடம்புமெலியவும் [கருப்பத்திலிருக்கும் ஜீவனுக்கு க்ஞானோதயமாகி ஸ்தாவர ஜங்கமாதிகளாகிய எண்பத்து நான்கு லக்ஷ ஜீவராசிகளின் தனது பூர்வ ஜன்மங்களை நினைத்து நினைத்துக்கொண்டு இக் கர்ம பூமியில் ஜனிக்கும் வரையில் மலமூத்ரஸ்தானமாகிய கருப்பத்தில்நின்று தனக்குத்தானே பின்வருமாறு “ ஐயோ! பூர்வ ஜன்மாந்தரங்களில் நான் கிஞ்சித்தும் புண்யம் செய்யாமற்போனேன்; ப்ரபஞ்சாநுபவம் தெரிந்திருந்தும் ஸத்கர்மங்களைச் செய்யாமற் கைவிட்டேன்; இதரர்களை வஞ்சிப்பதற்காக மனதார காம்யகர்மங்களைச் செய்தேன்; அக்ஞானத்தினால் அந்நிய ஸ்திரீகளை மோஹித்து அநியாயமாய் அவர்களை மானபங்கம்செய்து மஹாத்தானபாப கர்மங்களில் தலையிட்டுக் கொண்டேன்; குருவையும் பெரியோர்களையும் தாய் தந்தையர்களையும் நிந்தித்தேன்; தனத்தை ஸம்பாதித்து பெண்டு பிள்ளைகளே சதமென வெண்ணி அவர்களிடம் கொடுத்து, பின் அவர்களைக்கேட்க, அவர்கள் கொடாமல் என்னை நிராதரவு செய்ததால் துக்கித்தேன்.

இந்த மலமூத்ர சர்ப்பாசயத்தினின்றும் பூமியில் ஜனித்தவுடன் இனிமேலாவது ஞானமடைவதற்காக ஸத்குருவை நாடி பக்தியோக மார்க்கங்களினால் பரமாத்மாவை தரிசிப்பேன்; ” என்று பலவாறாக வருந்திக்கொண்டும்

ஸ்மரித்துக்கொண்டுமிருக்கும் சமயத்தில், நவ திங்களும் பூர்த்தியாய் ] தசமதியில் தனங்களில் பால் சுரந்து வேதனை யுற்று, வெகு சிரமப்படத் தாய்க்கு கர்ப்பவேதனையுண்டாகி ஜனனகால ஸம்ப்ராப்தமாய் தனஞ்சய னென்னும வாயுவி னால் தள்ளப்பட்ட சிசுவாகிய பிண்டம், கற்பகோசம் விட்டு தான் கட்டுப்பட்டிருந்த பையிலிருந்து யோனி வழியாய் வெளிவந்து பூமியிற் பிறந்தவுடன் பூஸ்பரிசம்பட, பூர்வக் ஞானங்கெட்டு, தன்னை மறந்திருக்கும் சமயத்தில், சிசுவின் முகத்தில் ஜலத்தைத்தெளிக்க, க்வா! க்வா! க்வா! என்று சிசுவானது கூறிடுகின்றது. அதாவது, எங்கே! எங்கே! எங்கே! எனக்கு பூர்வஞான மிருந்ததே! அந்த க்ஞானம் இப்பொ ழுது எங்குபோயிற்று? என்று சிசு துக்கித்துக்கொண்டிருக்க, பூஸ்பரிசஸம்பந்தமான தக்ஷணமுதல் பூர்வக்ஞானமெல் லாம் அடியோடு மறந்து, நாளுக்குநாள், பால்யம், யௌவனம், கௌமாரம், வார்த்திக்யாதி வயோதிகவிகாரங்களை மேன்மே லடைந்து பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும், சிரித் துக்கொண்டும், அழுதுகொண்டும் பேசிக்கொண்டும், தின்று கொண்டும், விளையாடிக்கொண்டும், வஸ்துக்களின்மேற் மோ கங்கொண்டும் விந்தைவிந்தைகளான பல காரியங்களைச்செய் துகொண்டும், அகஸ்மாத்தாய் இருந்தாப்போலிருந்து எப்படி வந்ததோ அப்படியே சொல்லாமல் போய்விடுகிறது. இச் சம்பவத்தை இந்த்ரஜாலவித்தையிலும் மேலான ஜகத்ஜால வித்தையென்றே சொல்லவேண்டும்.

ஆதலால், கிடைப்பதற்கரிதாகிய மானிடப் பிறப்பை வீணாக்காமல் அறம், ஸத்யம், தவம், அடக்கம், நாணம், பொறுமை, கொடை, கல்வி, தைரியம், மன்னிப்பு, பெரி யோரைப் போற்றல், பெற்றோரைப் பேணல் முதலிய நல்லொழுக்கங்களைக்கைக்கொண்டும், காமம், கோபம், பாதந் திரமாயிருத்தல், பிறர் குற்றங்கூறல், கோட் சொல்லல், கல கஞ் செய்தல், மாற்சர்யம், ப்ராணிகளை ஹிம்ஸித்தல், அபல் வாழப் பொறாமை, எக்களிப்பு, குறும்புப் பேச்சு, அறி

வின்மை, புறங்கூறல், பொய்மை, நன்றி மறத்தல், ஈயாமை கீழ்மை பேதைமை, பெரியோரைப்பழித்தல் முதலிய தீய வொழுக்கங்களை யொழித்தும், பிறருக்கு நன்மையுண்டாக்கு மாறு நடத்தலே நமக்கு சிரேயஸ்ஸைக்கொடுக்கும்.

## நற்பழக்கம்.

மனிதர்களுக்கு நல்லுணர்ச்சி என்னும் ஓர் ஒப்புயர் வற்ற பொருள்மாத்திரம் மனதிற்பதிந்து பழக்கவழக்கமாக நிலைபெறில், அப்பொழுதுதான் அவர்கள் உத்தமர்களாவார் கள். அவ்வாறின்றி, நல்லுணர்ச்சிமாத்திரம் தன்னிலைமையை இழந்து தடுமாறிவிடுமாயின், அச்சமயம் அவர்கள் மனி தர்களல்லவே யல்லர். நல்லுணர்ச்சி பேற்படவேண்டில் ஸத்ஸகவாஸம் வேண்டும். ஸத்ஸகவாஸமோ, கல்விப்பயிற் சியினலன்றி லபிக்கக்கூடியதன்று. ஒருவாறுலபித்திடினும் ஸகவாசம் ஸர்ஜனர்களிடம் வகிக்கவேண்டி, "சேரிட மறிந்துசேர்" என்ற இச்சிறுவாக்கியம் எவ்வளவு ஆழ்ந்த கருத்துடையதென்பதைக் கவனிக்க. மனிதர்களுள் ஒருவ ரோடொருவர் பழக்கம நல்லதாக அமையப்பெறின், அறி வும் கல்வியும் நன்மைபயக்கும். தீயதாக, அமையப்பெறின் அறிவும்கல்வியும் எவ்விதத்திலும் தீமையே பயக்கும். இத னல், அறிவும் கல்வியும் விருத்தியடையவேண்டினல் அறி ஞர்கள் பழக்கமும் ஸகவாஸமும் வேண்டுமென்பதவசியமா யிற்று. அறிஞர் பெரியோர் பழக்கத்தால்பெறும் அறிவே பிறிதொன்றால் மாறக்கூடியதன்று. ஆதலினல், நாம் பழகு வதற்கு உரியாரை முன் நன்குதெரிந்து, பின்பே பழகுதல், வேண்டும்.

"ஆயிரஞ் சொன்னலு மடங்காத வஞ்சநெஞ்சப்
பேயரோடு கூடிற் பிழைகாண் பராபரமே"

என்ற அருமையானவாக்கைச் சிந்திக்கின், நற்பழக்கம் பெற்று வாழ்வதே வாழ்க்கை யெனப்படும். ஆகையால் ஸங்கிரகமாக:— இவ்வுலக வாழ்க்கை யென்னும் நடையில்

நாம் அமர்ந்திருக்க வேண்டின் முதல் முதல் தேசீயக்கல்விமுறையில் பயின்று, அறிவொழுக்கத்தைப்பெற்று, ஸன்மார்க்கநெறியில் நின்று ஜாதிமதாசாரானுஷ்டானங்களைத் தொற்றி, நவீனநாகரீகங்களில் அநாவசியமானதை விலக்கி, தெய்வவழிப்பாட்டைத் தொடர்ந்து, விதித்தன செய்து விலக்கியனவொழித்து, பெரியோரைப்பேணி, சுற்றத்தவர்களைத்தழுவி, தந்தைதாய் சகோதரங்களை நேசித்து, அறிஞர்களை அடுத்து, பொறுமை, தயை, இன்சொல் முதலியவைகளை வகித்து, நீதி, தருமம், உண்மை முதலியவைகளைப் போற்றி, நற்குண நற்செய்கைகளைப் பூணுவதே நம்போன்ற மானிடவகுப்பினருக்கு இன்றியமையாததென சற்குணம் வகித்த ஒவ்வொருவருக்கும் தனக்குத்தானே மனதிற் பதிந்து விளங்கலாகும்.

## காதல்.

காதல் என்னும் பதம் சிறிதும், அதிலுள்ள எழுத்துக்களும் சொற்பமே தவிர, அதன் உண்மைச்சக்தியை யாரே யறிந்துளார்? ஒருவன் கோடிப்பிறவிகள் எடுத்தபோதிலும் தெய்வீக சக்தியின்றி உண்மைக்காதலை யுணரவாவது பெறவாவது கூடுமா? அது இலேசில் கிடைக்கக் கூடியதா? ஒருவர்மேலொருவர் காதலிப்பது, முன்னுக்கு முன் இருவரும் ஏற்கனவே சொல்லிவைத்துக்கொண்டு செய்கின்றகாரியமா? காதலென்பது ரூபத்திற்காகவா? பணத்திற்காகவா? குணத்திற்காகவா? இரத்தக் கொழுப்பின் இச்சையைப் பூர்த்திசெய்ய உதிக்கும் உணர்ச்சிக்காகவா? உண்மைக்காதல் என்பது வரவர விருத்தியாகி, இடையில்நேரிடும் குறைபாடுகளையும் துன்பங்களையும் துக்கங்களையும் பொருட்படுத்தாது வேரோடுகளைந்து யெறிந்து, கரைதுறையின்றி பறந்து கிடக்கும் அன்புருவாகிய சிவத்தோடுசேர்ந்து தன்னையே மறந்திருப்பதல்லவா? பல்லாயிரம் பெண்மணிகளைக் கண்ணுற் பார்த்தபோதிலும் காதல் மாத்திரம் ஒரே பெண்மணியிடத்தில்தான் உதிக்கும் என்பது மிக்க கவனிக்கத்தக்கது.

இவ்வுலகில் ஸ்தரீ புருஷர்களின் உள்ளன்பையும் மனவொற்றுமையையும் ஆதாரமாகக்கொண்டு விளங்கும் ஓர்

அற்புத சக்தியே சாதாரணமாய் காதல் என்னும் பெயரால் வழங்கும். இருபால் சம்பந்தமுறுவதற்கு உட்பெயர் காதலெனப்படும். ஆனால் சாதாரணமாய் காதலுற்றவர்களுள் இருபாலுள்ளும் எல்லோருமே உண்மைக்காதலுள்ளவர்களாகமாட்டார்கள். ஆயிரத்தில் இரண்டொருவர்களே உண்மைக் காதலுள்ளவர்களாவார்கள். உயிரினின்றும் உடலினின்றும் வேறுபடாது தசையுடனும் நரம்புகளுடனும் ஒன்றுபட்டு ஒவ்வொரு நாடியினும் பிரவாகிக்கும் ரத்தத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் உண்மைக் காதலை மட்டும் புருஷர்களாவது பெண்களாவது எக்காலும் எவ்வாறும் மனதை விட்டு மறக்கவேமுடியாதென்பதுதிண்ணம். உற்ற அன்பும், ஒற்ற கல்வியும், நற்றியகாதலும், முற்றியகட்டழகும், தோற்றியஉணர்ச்சியும், சுகாநுபவமனோபாவமும் நிரம்பிய அறிவும், ஒழுக்கப் பயிற்சியும், நற்குணப் பான்மையுமுள்ளவர்களுள்ளத்திலேயே உண்மைக்காதலென்னும் ஓர் மனக் கவர்ச்சியான அவாவுணர்ச்சியே பரஸ்பரம் ஸ்திரீ புருஷர்களுள் ஏற்படக்கூடியது. தவிரவும், உண்மைக்காதலென்பது ஸ்திரீ புருஷர்களின், பருவதிற ரூபலக்ஷண யௌவன அங்கபாரங்களையும், துலுக்கு பிலுக்கு தளுக்கு மினுக்குகளையுங்கண்டு உண்டாவதன்று; அவரவர்களுடைய நற்குண நற்செய்கைகளைக்கண்டுண்டாகக்கூடியது. அன்றியும் இவ்வுண்மைக் காதலென்பது, கஷ்டத்தையோ நஷ்டத்தையோ ஆபத்தையோ முதிர்ந்த பருவத்தையோ விலக்ஷணத்தையோ காரணமாகக்கொண்டு எவ்வாறும் விலக்கக் கூடியதுமன்று.

ஹிருதய கமலமத்தியில் பேரின்ப ரூபமாக விளங்கும் ஆன்மசக்தியை எவ்வாறு இழக்க முடியாதோ அவ்வாறே உண்மைக்காதலின்றன்மையுமாகும். உயிரை ஒருவாறு இழந்தாலுமிழக்கலாம், உண்மைக்காதலையும் அஃது குடிகொண்ட இடத்தையும் எக்காலும் மறக்கவியலாது.

கேவலம் பசுபக்ஷிபாதி மிருகங்களைப்போல காமஇச்சையான இன்பமநுபவித்தலா காதல்? "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்ப" மென்றல்லவோ சொல்

லப்பட்டிருக்கின்றது? காதலிருவர்களது மனவொற்றுமையும் குணவிசேஷமும் ஒன்றுக்கொன்றுதோற்மையின்றி அமையப் பெற்றால் ஒருவருடைய உன்னதமான குணமானது மற்றொருவருடைய காதலைப்பெருக்கி அதிகப்படுத்திவிடும். இக்காதல் என்னும் பிரேமையொன்றே இவ்வுலகில் மானிடவுயிர் வாழ்க்கைக்குக்காரணமாயும் அனுகுணமாயுமிருந்துகொண்டு அவர்களை சந்தோஷிப்பிக்கின்றது. அதினும் ஸ்திரீகள் மனதாரக் காதலிக்கப்பெறின் தங்கள் காதலர்களிடம் அவர்கள் காட்டும் நேசவிசுவாஸ உறுதியிலும், எத்தனைய சரீர சிரமமான கஷ்டங்களையும் பாராட்டாது தங்களையே சகலகஷ்டங்களுக்கும் இரையாக்கிச் செய்யும்பணிவிடைகளிலும், அவர்களை இராக்ஷதர்களென்றே சொல்லும்படிக்கான அத்தகைய அசாத்தியமான சிரமத்தையும் கவனியாது தங்கள் காதலர்களையே ஓர்நிதியாகக்கருதி உழைப்பதுவே உண்மைக்காதலின் இலக்ஷணம். உண்மைக் காதலுக்கும் சாதாரணக் காதலுக்கும் நிரம்பவித்தியாஸங்களுள. ஸங்கீதத்திற்கும் பறைமேளத்திற்கும்முறையேயுள்ள வித்தியாசமே உண்மைக்காதலுக்கும் சாதாரணக் காதலுக்கும் முள. ஓசையெல்லாம் ஸங்கீதமாகுமா? கற்சுவரும் இருப்புக்கம்பிகளால் அடைப்புக்கதவுமுள்ள கட்டடங்களெல்லாம் சிறைச்சாலையாகிவிடுமா? அதில் சாதாரணமாய் காதலுற்றவர்களுக்கே மனம்வேறு, செய்கை வேறாகின்றன. இவர்களுள் காதற்பலன் கைகூடாவிடினும் அவ்வவாவே இவர்களுக்கின்பத்தைத் தருவதியற்கையாயிருக்கின்றது.

சாதாரணமாய் காதலர்கள், தங்கள் ஒருவரின் உணர்ச்சியைப்போலவே தங்கள் காதலிக்கும், மற்றெவ்வொருவருடைய உணர்ச்சியும் இருக்கக்கூடுமென்றோ, அல்லது இருக்கின்றதாகவோ, எண்ணுகிற தப்பெண்ணத்தினாலேயே பித்தராகின்றார்கள். அதினும், காதலர்கள் தாங்கள் காதலிக்கும் காதலிகளின் அநுமானச் செய்கைகள்யாவும் தங்கள் பொருட்டாக வென்றேநினைப்பது காதலர்களுக்கு எத்தகைய ஸகஜமாயிருக்கின்றது? இக்காதல் வலைக்குட்பட்ட

வர்களுடன் ஏற்படும் சம்பாஷணையில் அவர்களது கேள்விகளுக்குப் பதில் உரைப்பதைவிட இவ்வுலகத்துதுள்ள அணுக்களையும், காலுற்றின் மணலையும், மழைத்தூற்றல்களையும், நக்ஷத்திரங்களையும்கணக்கிட்டுச்சொல்லிவிடலாம்.

## விபசாரம்.

உலகில் புருஷர்களுடைய மனம்போல மனைவிகள் நடக்காமையினாலேயே புருஷர்கள் துணிவுற்று சாரஞ்செய்ய வேண்டி நேரிடுகின்றது. அதனின்மூச்சிபோ கேவலம் ஆபாஸம். புருஷர்களுடைய சோர நடத்தைகளை

1. மனைவியறிந்தால் மனம் புண்ணாகி ஒற்றுமை ஒழிய [வருத்தமுறுவாள்.
2. மாமன் மாமியறிந்தால் மரியாதைக்குறைவுண்டாகும்.
3. மைத்துனியறிந்தால் மானத்தைக்கெடுப்பாள்.
4. தாய் தந்தையரறிந்தால் தலைகுனியவேண்டும்.
5. அருமைப்பிள்ளைகளறிந்தால் ஆதரிக்கமாட்டார்கள்.
6. சகோதரர்களறிந்தால் சங்கடப்படுவார்கள்.
7. பந்துக்களறிந்தால் பந்திபோஜனம் செய்யார்கள்.
8. இஷ்டர்களறிந்தால் ஏக்கமுற்றிகழ்வார்கள்.
9. ஊராரறிந்தால் ஊனஞ்சொல்லுவார்கள்.
10. உற்றாறறிந்தால் உதாஸீனஞ் செய்வார்கள்.
11. மற்றவர்களறிந்தால் மானபங்கம் செய்வார்கள்.
12. இதர ஸ்திரீகளறிந்தால் ஏசுவார்கள்.
13. கண்டவர்கள் கேட்டவர்கள் எல்லாம் காரித்துப்பு [வார்கள்.
14. அரசனறிந்தால் அசங்கிதங்கொண்டு ஆக்ஞைசெய் [வான்.

ஜாரத்திற்கு இத்தகைய மானக்கேடிருக்க, உலகிலநேகர் ஆதை கௌரமாகவும் பிரக்யாதியாகவுமல்லவோ வெண்ணி, வேசிவீட்டிற்கும், தாசிவீட்டிற்கும் போகின்றார்கள்? இஃதென்ன பிராந்தியோ? மனைவியை யடக்கி ஹிதமறிந்து நடத்த வசமின்றி வெகுபெயர் பரிதபிக்கின்றார்கள்

" பிறர்மனைக் கேகல்குற்றம் பெண்களைப் பார்த்தல் குற்றம்
முறைதப்பி மின்னார்தம்மை மோகித்தல் பெரியகுற்றம்
இறைவரில் கன்னிமாரை இச்சித்த விதன்மேற்குற்றம்
நிறையுல கத்திலென்ற நீதிநீ யறிந்திடாயோ."

" மங்கையர்கள் மேனிமிசை வைத்திருக்கு மாசைதனைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக் — கங்கைமதி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்காற்
காணலாங் காணுங் கதி."

அன்னிய ஸ்திரீகளை மனதில்நினைப்பதினும் விஷத்தை உண்ணுவதுநலம்; அவர்கள் கலவியுறுவதினும் தீயில் மூழ்குவது மேன்மை; அவர்களைத்தழுவுவதினும் கொதிக்கின்ற நெய்யில் விழுவது உத்தமம்; அவர்களது கரம் பற்றுவதினும் கொடுவிஷத்தையுடைய அரவைக் கையிலெடுப்பது உத்தமோத்தமம்; அவர்களை சிநேகிப்பதினும் காலனிடஞ் செல்வது சிரேஷ்டம். ஐயோ! இத்தகைய கருமத்தையா மனிதர்கள் செய்யத்துணியவேண்டும்?

" உணர்வறும் செல்வமும் உயர்வுமேயறும்
குணமறும் குலமறும் கொடிய நோயெல்லாம்
அணுவுறும் நரகுறும் ஆயுள் தேயுமால்
கணம் மறு மாதர்தோள் கலக்குந் தூர்த்தர்க்கே."

என்று மூதோர் கூறியது அமுதவசனமேயன்றோ? அன்றியும், " மாத்ருவத் பரதாரேஷு " என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கின்றது.

இஃதன்றியும், ஸ்திரீகள் புருஷர்களுடைய நோக்கம்போல் அவர்களுக்கடங்கி நடப்பவர்களே பதிவிரதைகளாவார்கள்.

## பதிவிரதா லக்ஷணம்.

இவ்வுலகின்கண் பிரஜைகளுக்கு பலவித கஷ்டங்கள், பலவித வியாதிகள், பலவிதபயங்கள் பீடிப்பனவியற்கையேயாயினும் அவைகளையெல்லாம், முறையே திரவியத்தினலும் ஔஷதங்களினலும் புத்தி விசேஷத்தினலும் நிவிர்த்

தித்துக் கொள்வது சாத்தியமேயாகும். எவ்வாறும் நிவிர்த்தித்துக் கொள்ளமுடியாத பயமொன்றுண்டு. அதாவது, மிருத்திய வாகிய இயமபயம். ஆனல், அம்மிருத்திய பயத்தையும் நாசம் செய்யக்கூடியது பதிவிரதா தருமம். பதிவிரதா ஸ்திரீகளிடம் இயமனுடைய அதிகாரம் சுலபமாக நடவாதென்ருல், பதிவிரதா தருமத்தின் மகிமையை எவ்வாறு நவிலுவது? இதற்கு ஸாவித்ரி சரிதமே சாக்ஷியாகும்.

பதிவிரதம் என்பதே கற்பென்று சொல்லப்படும்.

“ பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின் ”

அதாவது, ஒருவன் பெறத்தக்க பேறுகளில், கற்புடைய மனேவியைவிடச் சிறந்தது யாதுமிலவென்பது தேற்றம். கற்பென்ருல், ஒரு பெண் தன் கணவனேயன்றி மற்ருெரு புருஷனே, மனே-வாக்கு-காயங்களாகிய திருகரண சுத்தியாகக் கருதாமலிருப்பது மாத்திரமல்ல.

“ கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை ”

எனக் கணவன் கூறுஞ்சொல்லின் உண்மையைக்கருதி அம்மொழியை மறுக்காது காத்தாலேயாகும்.

“ தெய்வம் தொழா அள்கொழு நனேத்தொழு தேத்துவாள்
பெய்யெனப் பெய்யு மழை ” என்றபடி

நன்னெறியிலொழுகவல்ல உத்தம மாதர்க்கு வேறு தவம், தானம் முதலிய யாதொரு சாதனமும் வேண்டுவதில்லே. கற்புடையோருக்குக் கொழுநன் வாக்கியமே வேதமாகும்.

நாஸ்திபக்ஞ: ஸ்திரிய: கிஞ்சிந் நவ்ருதம் நோபவாஸகம்;
யாது பர்த்தரி சிச்ருஷா தியாஸ்வர்க்கம் ஜத்யஸெள.

என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கின்றது.

எந்தஸ்திரீ தன் புருஷனிடத்தில் அருளுடையவளாக இருக்கின்ருளோ அவள்உயிர்வாழ்நாளினும் இறந்தொழிந்த நாளினும் மேன்மையையே பெறுவாள். அவளே பதிவிரதையாவாள்.

பதிவிரதா ஸ்திரீகளுக்கு எப்பொழுதும் சரீரம் பரிசுத்தமென சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. உத்தம ஸ்திரீகள் மனம்நொந்து சாபமிடின் அச்சாபம் பில்லி சூனியும் முதலியவைகளினும் கொடிதாகும்.

இக்கண்ணகல் ஞாலத்தில் ரத்தினங்களில் நவரத்தினங்கள் என ஒன்பது உத்தமரத்தினங்களே உள்ளனவெனச் சொல்வது மாத்திரமேயாயினும், அவ்வொன்பது ரத்தினங்களினும் குணதோஷமின்றி அகப்படுவது பிரயாஸம். நவரத்தினங்களினும் அரிதும் உத்கிருஸ்டமுமான ரத்தினம் ஒன்றுளவென்பது நல்ல ஊஹறக் கருத்துள்ளவர்களுக்கே விளங்குவதாகும். அஃதாவது, ஸ்திரீரத்தினமே. நவரத்தினங்கள் கண் பார்வைக்கு மாத்திரம் மனோஹரமே தவிர வேறில்லை. ஸ்திரீரத்தினமோ, பார்வைக்கு மாத்திரமல்ல; அதைப்பார்க்கும் பொழுதும், உற்று நோக்கும்பொழுதும், வார்த்தையாடும் பொழுதும், பரிசிக்கும் பொழுதும், மனத்துள் நினைக்கும் பொழுதும், ஸதா ஆநந்தமே பொங்கி வழியலாகும். ஸாதாரண ஸ்திரீஉருவத்திற்கே இத்தகைய ஆநந்தமுண்டாகக் கூடுமாயின், ஸகலவித உத்தமகுண ஸம்பன்னிதையான பதிவிரதா ஸ்திரீரத்தினத்திற்கும் இப்பூவுலகில் ஒப்புயர்வு யாதேனு மிருக்கக்கூடியதோ? அன்றியும் ஆடவராய்ப் பிறந்தோர்களெல்லோருக்குமே அவ்வித ஸ்திரீரத்தினம் கிடைக்கவுங்கூடியதோ?

,, உத்தமி களினாலன்றோ வுலகத்தின் மழைபெய்கின்ற
துத்தமிகளினாலன்றோ உயர்தவந்தான மோங்கு
முத்தமிகளினாலன்றோ வுலகரசாக்ஷி யோங்கு
முத்தமிகளினாற்சந்தர சூரியருதிக்கின்றாரே.''

எனவும் ஆன்றோர் கூறியுள்ளார்.

XV

# தேசீயக் கல்விச் சிறப்பு

[கல்வியின் பெருமை]

[அகவற்பா]

“ அலகிலாக் கருணை யாண்டவன் சிருஷ்டியில்,
அலைகடல் சூழும் அம்புவி மீது,
பலபல நிறமும் பலபல திறமும்
பலபல நிதியும் பலபல மதியும்
படைத்துள ராகும் பல்வகை மாந்தர்
படிப்படி வேறு பட்டுள ரெனினும்,
ஐம்பொறி யுணர்வோ டமையா தறிவெனும்
செம்மைசே ரீசன் திவ்யாம் சத்தினை
ஆரும் உணர்வா யவரவர் உளத்தில்
ஏறவோ தாழவோ இயற்கையிற் பெறுவர்;
இந்த அறிவினுக் கிருப்பிட மாகும்
சிந்தையை மாந்தர் செல்வழி செலுத்தி,
மாசார் தீநெறி மறந்தும் நினையா (து)
ஆசா னுரைப்ப தாய்ந்தாய்ந் தறிந்து,
ஈச்வர பக்தி இன்னருள் வாய்மை
தேசுறு நற்புகழ் திருந்துமா சாரம்
இவைமுதல் நன்மைகள் எய்துதல் தானே
புவிமிசைக் கல்வியாப் புகலுவர் மேலோர்
கல்வியின் பெருமையோ கணக்கிட அரிதது
பல்விதம் பகரினும் பகர்தற் பாலதோ ?
கல்வியே அறமாம்; கல்வியே பொருளாம்;
கல்வியே இன்பம்; கல்வியே வீடு;
கற்றோர் தாமே கண்ணுடை யவர்கள்
மற்றோர் முகத்து வாய்க்தன புண்ணே
கலைவலார் மதிநலம் காசினி முழுதும்
கலைநிறை மதியெனக் காண்போர்க் கெல்லாம்
இன்பமும் கிளர்ச்சியும் இனிதின் அளிக்கும்
என்பல கூறுதல்? இவ்வுல கத்தே

ஆதிநாள் முதல் அரும்புகழ் தொகுத்துப்
பூத வுடலம் போயின பின்னும்
என்றும் நிலையாய் இலங்குவோர் யாவர்
என்றே நாமிங் கெண்ணு மிடத்து
வால்மீகி வியாசர் வரகம்பர் ஔவை
போல்மேவு புண்ணியப் புலவரே யன்றோ?
வேறுள ராகும் வீரரை யரசரைக்
கூறிடல் அதுமதிக் குறைவே யாகும்."

## பூர்வகாலம் இந்தியாவின் கல்வி நிலைமை.

(நொண்டிச்சிந்து)

"இப்படிச் சிறப்புடைய—கல்வியில்
இந்தியா மிகவும் முந்தி யிருந்த
தென்பதை உலகறியும்;—எனினும்
ஒருசில விவரம் உரை செய்தால்
உபயோகமே யாகும்—வேத
சாஸ்திரங்கள் ஈசன் தோத்திர நூல்கள்
சாத்விக குணம்விளங்கும்—அரிய
நீதி நூல்கள் பல போத நூல்கள்
நிகரில் தத்துவ நூல்கள்—இன்னும்
கற்பனை யலங்காரம் பொற்புறக் கொண்டு
கதைநயம் உயர்நீதி—முதலாம்
சொற்பொருள் நலங்கள் பற்பல சேரும்
சுவைமிகு காவிய நூல்கள்—இதி
காச புராணங்கள் மாசிலாச் சிற்பம்
கணிதம் சோதிடம் வைத்தியம்—இவைபோல்
கலை பலவற்றை மலை விளக்காக்
காட்டும் பல நூல்கள்—வேறு
நாட்டுளோர் காட்டுமுரட்டரென
நாட்டும் படியிருந்த—ஆதி
கால முதலாய் நமது சிலநாட்டில்
கனரிஷி முதலோரால்—நல்ல
குருசிஷ்ய முறையில் பாரம்பரையாய்
கூறிவைத்தவை கோடி."

## தற்கால நிலை.

[ கும்மி மெட்டு ]

"இப்படிப் பற்பல வித்தை முளைத்து
இந்தியா முன்னாள் செழித்திருக்க
இடையிற் பற்பல மஹமதியர்கள்
இந்நாட்டிற் புகுந் தாண்டார்கள்;

இந்த இடையிட்ட காலத்திலே நல்ல
இந்தியக் கல்வியும் தர்மங்களும்
மதத்துவே ஷத்துட னுட்கல கங்களால்
மங்குத லுற்றன கொஞ்சம் கொஞ்சம்!

இவர்க்குப் பின்வந்த ஐரோப்பியர்களில்
இங்கிலீஷ் காரர்கை யேற்றமுற்று
இந்தியாவை யிப்போ தாள்வதில் நமக்கு
எய்திடு நன்மை பலவு முண்டு.

அந்த நன்மைகளில் ஒன்றெனவே நாம்
ஆங்கிலக் கல்வியைக் கூறிடலாம்;
ஆங்கிலத்தாலே நாம் தன்மறுப் பொற்றுமை
அறிவு விசால மடைகின்றோம்.

ஆயினு மிந்தியர் முப்பத்தைந்து கோடி.
ஆனவர்க ளெல்லாம் துரைத்தனத்தார்
ஆங்கில முறையிற் கல்விப்பயிற்றுதல்
அசாத்தியத் தோ டனாவசியமு மாம்;

மேலும் கவனித்துப் பார்க்கில் நமது
மேலாம் கவர்ண் மெண்டார் எல்லார்க்கும்
பொதுவாய்ப் புத்திக் குரியதா மென்றே
புரிந்து வருவது சாத்தியமாம்

அதற்கும் ராஜாங்கத்தார் அரசிறைப்பொருளில்
அதிகம் எடுக்க முடியாது
ஏனெனில் காவல் மராமத் சுகாதாரம்
இவை பிறவற்றுக்குப் பணம் வேண்டும்.

ஆதலால் கல்வி விஷயமாக நம்
அரசாங் கத்தார் செய்வ தெல்லாம்
இந்திய ஜனத்தொகைக் கீடுநோக்கில் அது
என்றென்றும் போதாமல் தானிருக்கும்;

அன்றியும் கல்விக் கனுகூலம்பல
அரசாங் கத்தார் செய்தாலும்
ஆசாரம் பாஷை அநுஷ்டானம் மதம்
ஆன இவை வித்தி யாசத்தினால்,

நம்முடை இந்தியா நாட்டுக்கிசைந்த
நல முழுவதும் நண்ணாது;
ஆகையால் இந்தியக் கல்வி சிறக்க
ஆசையோ டிந்திய கனவான்கள்

வேண்டும் பணமிகச் சேகரித்துத் தக்க
விற்பன்னர் தம்முடன் யோசித்துத்
தேசியக்கல்வி நம் தேசமெங்கும் வெகு
தேஜஸ்ஸுடனே பரவிவர

ஆனமுயற்சிகள் அறிஞர்கள் பற்பலர்
ஆழ்ந்து நினைத்துச் சொல்லும் வண்ணம்
ஆத்திரத்தோ டிந்த்ய புத்திரர் நாம் செய்யின்
அடியிற் கண்ட பலன்கள் உண்டாம்."

## தேசியக் கல்வியின் பயன்.

(ஆனந்தக் களிப்பு)

" தேசியக் கல்வியால் நாளும்—நல்ல
செல்வம் வர்த்தகத்துடன் சேர்ந்தெங்கும் நீளும்,
தொழில்கள் பலபல கொழிக்கும் - நாட்டில்
தொன்மை வளமெலாம் தோன்றிச் செழிக்கும்;

நாடெங்கும் அஞ்ஞானம் நீங்கும்— தூய
நல்லவரிடம் அபிமானமே ஓங்கும்
ஒத்துழைப் பென்பது கூடும்—இப்போது
உள்ள மதத் துவேஷம் ஊரைவிட் டோடும்

கல்விக்குச் செலவு குறையும்—வெறுங்
காசுக்கா யுழைத்திடு மாசையும் மறையும்
தேசாபிமானம் சொலிக்கும்—என்றும்
சிறுமைசேர் தன்னியப் பேதம் ஒளிக்கும்

தாய்ப்பாஷைக்கு நல்லகாலம்—இந்தத்
தலமெங்கும் ஓங்குமே புண்ணிய சீலம்
சொற்ப வரவிலிருந்தாலும்—தோன்றும்
தூயசருத்தே உளத்திலெக் காலும்

நீசபுத்தி மிக மங்கும்—உண்மை
ராஜபக்தி மேலும் நலமுறப் பொங்கும்
ஈசுர விஸ்வாசம் இலங்கும்—எங்கும்
நேசம் பெருகவே நேர்மை துலங்கும்

இந்திய மாதாவின் கீர்த்தி—வளர
மைந்தர்கள் நாமிது செய்வதே நேர்த்தி
அருமையாம் தேசிய வித்தை—இதனை
ஆதரிப்பதில் வேணும் உள்ளத்தில் சிரத்தை

இந்நான் முயற்சிக்கே உதவி—செய்பவர்க்
கிந்துமாதேவி யருள்வள் நற்பதவி.''

---

ஸ்ரீ:

## இலக்குமி தோத்திரம்

### காப்பு.

“ தேவிற் சிறந்த திருமா திருமார்பு
மேவிச் சிறந்து விளங்குமெழின்—மாவின்மேற்
செந்தமிழிற் செய்நூல் சிறக்க வருள்புரியுங்
கந்தமகிழ் மாறன் கழல்.”

### அவையடக்கம்.

“ சிந்தைக் கினிய செவிக்கினிய செய்யுட்கள்
முந்தைப்பெரியோர் மொழிந்ததுணர்ந்—திந்திரைமேற்
பேதையே னும்மவரைப் பின்பற்றிச் சொல்லுமிதிற்
றீதுகுறி யார்பெரியோர் தேர்ந்து.”

## நூல்.

உ சீதரனார் மார்புறையுஞ் செல்வி நினதடியே
னோதுதமிழ்ச் செய்யு ளுரைதேர்ந்துப்—பேதையேன்
வேண்டும் பொருளை விரைந்து பரிந்தளித்திங்
கீண்டும் புகழ்தருவா யேய்ந்து. [1]

நன்மையொடு தீமை நனிவரினு மஞ்சாத
தன்மை யளித்துத் தகையளிப்பாய்—சொன்மலராற்
றேவர் பரவுந் திருவே மருவிநிதம்
பூவி னுறைவாய் புரிந்து. [2]

அருமை யறியா ரகந்தோறுஞ் சென்று
பெருமை யெடுத்தவர்பாற் பேசுங்—கருமமொழித்
தென்றென்னை யாள்வா யில்கூர் திருவேநின்
வென்றி தொழுதேன் விழைந்து. [3]

என்பி னுருமுதலா வேய்ந்த வுயிரெவையு
மன்புருவா நின்னை யடிபணிந்தே—யின்புறுமென்
றான்றோ ருரைத்த வருண்மொழிகேட் டன்னையுன்
சான்ற புகழ்துதிப்பன் சார்ந்து. [4]

செந்தா மரைமலரே சீரியதோ வுன்பாத
நந்தாவென் சிந்தைமலர் நண்ணாத—விந்தையிதென்
அன்னே யுனதுறையு ளன்பரகமாகுமெனச்
சொன்னார்முன் னோருந் துணிந்து. [5]

மன்னா வுலகத்து மன்னிய மூன்றனுளுந்
துன்னு நடுவணது தோன்றிடுமேற்—பின்னிரண்
டெய்த லெளிதென் றிசைப்ப ரதுபெருகி
யுய்தலுநின் னாலன்றோ வோது. [6]

தேனார் கமலத் திருவே சிலருலகிற்
றானே தருக்கித் தனைமதித்திவ்—வூனா
ருடற்பிறவி வேட்டுண் டுழன்று நிதமு
மிடர்ப் படுவ ரென்னே யிது. [7]

178201

தூயரென வேரிற் றுதித்துப் பிறரிடத்திற்
பேயரென வீழும் பேதையர்பாற் —போயடியேன்
பத்திவைத்து நாளும் பழகா வாமனித்தென்
சித்தங் குடிகொள்வாய் தேர்ந்து. [8]

தாயும் நிலையாகக் கருதிக் கழன்றுதம
தாயுள் கழித்தழிவ ரற்பர்கள் — தாயேயுன்
பொன்னடியைப் போற்றிப் புனிதமுறு வானவர்க்கிங்
கின்னருள்பா லிப்பா யிசைந்து. [9]

சொல்லும் பொருளுந் தொடையுநடை யுந்தொடர்ந்து
செல்லு மொழுக்கஞ் சிறந்ததாய் —வல்லுநர்செய்
நூலோ டிதையு நுவலும் பரிசளிப்பாய்
சேலோடுங் கண்ணாய் தெளிந்து.'' [10]

---

முயற்சிக் குறைவில்லாமலும் மூச்சுவிடாமலும், முற்றுப்புள்ளியில்லாமலும், முடிவில்லாமலும் மென்மேலும், வசனித்தேவரின், விஷயங்கள் பெரிதாக விரிந்துவளர்ந்து கொண்டே வருமாதலினால், இத்துடன் இந்நூலை, முடிக்க நண்பர்களுடைய அங்கீகரிப்பை ஆவலுடன் வேண்டுகின்றேன்.

## முடிவுரை.

எனதன்பார்ந்த நேயர்காள் !

மனிதர்களாகிய நாம், எக்காலும் பகுத்தறியும் தன்மைக்கு விரோத நடையிலொழுகாமல், நமது பூர்வாசார அநுஷ்டானங்களை முறைப்படி பின்பற்றி ஸன்மார்க்கநடையிலொழுகுவோமாயின் ஸர்வ சக்தி ஏகரூபனாகிய கடவுள் எவ்வாறும் எவ்விதத்திலும் எக்காலத்திலும் நம்மைக் காப்பாற்றுவாரன்றிக் கைவிடவேமாட்டாரென்பது ஸத்தியம். நாமெல்லோரும் ஒழுக்கமுறை பிறழாது, நடையுறுதலே அக்கடவுளின் உள்ளக்கருத்தான இரஸியம். ஆகையால் எல்லாம் வல்ல ஈசனடியை என்றும் மறவாது தொழுதிறைஞ்சுவோமாக! சுபம்.

" தத்துவ நிலையை தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே."

[ முற்றும்; சுபம், ]

# A Wonderful Discovery of the Age.

No rival ! No equal !!

# JWARAPPULY.

It cures Fevers of all sorts, in 3 Doses, once in 6 hours one Ounce per Dose, for patients and half an Ounce for hildren under 5 years of age.

## AN INVALUABLE MEDICINE,

ALWAYS TO BE AT HAND IN EVERY HOUSE.

*Price* { *1 Re. per 8 Oz. bottle.* / *8 As. per 3 Oz. bottle.* } V. P. Charges Extra.

Apply at once to :—

**S. Doraisamy Iyer,**

Rathna Vilas.

***Madura.***

---

புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டதும் ஒப்புயர்வற்றதுமான

# ஜ்வரப்புலி.

இது எவ்வித ஜ்வரங்களையும், 6 மணி நேரத்திற் கொருதரமாகவும், வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதமாக 3 வேளைக்குள் ஜ்வரத்தைக் கண்டித்து, அநுகூலப்படுத்தக்கூடிய சக்தியுள்ளது; ஒவ்வொரு வீட்டினும் கையிருப்பாக இருக்கவேண்டியது இஃதொன்றே.

விலை { 8 அவுன்ஸ் சீசா—1 ரூபாய். / 3 அவுன்ஸ் சீசா—8 அணா. } வி. பி. சார்ஜ் வேறு.

இன்னும் அநேக மருந்துகள் கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

**S. துரைஸாமி அய்யர்,**

ரத்தின விலாஸ், மதுரை.

# *R. Sethurama Iyer.*

## Engineering Contractor and Cabinet Maker

## MADURA.

*Work Shop:— West, Masi St.*
*Theatre Compound, Madura.*

[ ESTABLISHED IN 1912 ]

Supplier of Furniture, Building Materials etc.

and

Contractor to the

District Board, Taluq Board,

Postal, Judicial, Estates, Devasthanams, Municipal

and all the

Public Government Departments.

**Prices Moderate & Workmanship Splendid.**

*Goods Guarenteed. Execution Neat.*

*Estimate Submitted on application.*

Trial Order Solicited.


---


☞ இப்புத்தகத்தின் 1-வது பாரமுதல் 10-வது பாரம் (80 பக்கம் முடிய) மதுரை விக்டோரியா பிரஸ் (Victoria Press) ஸிலுப், 11-வது பாரம் முதல் 15-வது பாரம் (81-வது பக்கம் முதல் 120-வது பக்கம் முடியவும், டைட்டில் பேஜ் முதலிய மற்றவை, மதுரை, அஷ்டலக்ஷ்மி விலாசம் பிரஸ் (A. L. V. Press) ஸிலும் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.